கல்கி



KALKI ஜூலை 12, 1953

4 அணா



டால்டா வனஸ்பதி
நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது

எல்லா இடங்களிலுமுள்ள
ஸ்திரீகள் கூறுவதாவது

"டால்டாவையே வாங்குங்கள், அதனால் நீங்கள் பணத்தை மிச்சப்படுத்துவதோடு ருசிமிக்க ஆகாரங்களையும் தயாரிக்கலாம்."

புத்திசாலியான குடும்பஸ்திரீகள் ஒவ்வொரு தடவையும் டால்டா வாங்குகிறார்கள். டாக்டர்கள் நமது தினசரி உணவில் கொழுப்பு அவசியம் தேவை என்று கூறுகிறார்கள். இதற்கு டால்டாவைத் தேர்ந்தெடுங்கள். அதன் விலை சரசமாயிருக்கிறது. சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா எவ்வளவு காலம் நீடித்திருக்கிறது என்பதையும் அது உபயோகித்து எவ்வளவு அற்புதமான சாப்பாடு தயாரிக்கலாம் என்பதையும் நீங்களே பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். இன்றே ஒரு டால்டா டின் வாங்குங்கள்.

சமையல் செலவை எப்படிக் குறைப்பது?
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—
அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

டால்டா

10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது



HVM. 192-50 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 12 இதழ் 50 | 1953 ஜூலை 12 | விஜய ௵ ஆனி 28௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





ஜூலை 10உ முதல்
திரும்பிப்பார்!
மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரிப்பு
கதை, வசனம் :
மு. கருணாநிதி
டைரக்ஷன் :
T.R. சுந்தரம்
சென்னை பாரகன், பிரபாத், சரஸ்வதி & நூர்ஜஹான்
மற்றும் தமிழ் நாடெங்கும்

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 50

எந்தக் கணக்கில் எழுதுவது?

கல்விப் பயிற்சித் துறையில் சிரத்தை உள்ள ஒருவர் சென்ற ஆண்டில் ஹைஸ்கூல் ஒன்றுக்குப் போயிருந்தார். முக்கியமாக, அந்த உயர்தரப் பள்ளிக்கூடத்தில் நாலாவது படிவத்தி லிருந்து பிள்ளைகளுக்கு விவசாயக் கல்வி போதிக்கப் படுகிறது என்று அறிந்தபடியால், அதன் பலன் என்ன என்று பார்ப்பதற்காகப் போயிருந்தார்.

பள்ளியை அடுத்திருந்த தோட்டத்தில் சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமான ஒரு ஜோடிக் காளைகள் கம்பீரமாக நின்றன. ஐந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள புத்தம் புதிய கட்டை வண்டி ஒன்று இருந்தது. கலப்பை, நுகத்தடி, மண்வெட்டி முதலிய உழவுக் கருவிகளும், மாட்டுக்குத் தீனியும் தனியாக ஓர் அறையில் போட்டுப் பூட்டப்பட்டிருந்தன. விசாலமான கிணறு இருந்தது. அதன் அருகில் தண்ணீர் இறைக்கும் மின்சார இயந்திரமும் பொருத்தப் பட்டிருந்தது.

சதுரமாகவும், நாற்கோணமாகவும் சிறிய பாத்திகள் சில கட்டப்பட்டிருந்தன. அவற்றில் உரம் போட்டிருந்ததாகவும் தோன்றியது.

போய்ப் பார்த்தவருக்கு இவை யெல்லாம் மிக்க மகிழ்ச்சி அளித்தன. வண்டி மாடு, விவசாய உபகரணங்கள் இவற்றுக்காக மூலதனச் செலவு ரூபாய் ஐயாயிரம் ஆயிற்று என்று தெரிந்தது.

"எத்தனை காலமாக விவசாய போதனை நடந்து வருகிறது?" என்று கேட்டார்.

"இரண்டு வருஷமாக" என்று பள்ளியைச் சேர்ந்தவர் பதில் சொன்னார்.

"எத்தனை பிள்ளைகள் விவசாயக் கல்வி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்?"

"நாலாவது, ஐந்தாவது, ஆறாவது படிவங்களில் மொத்தம் 300 பிள்ளைகள் படிக்கிறார்கள். இவர்களில் 120 பேர் விவசாய வகுப்புக்கு வருகிறார்கள்!"

பள்ளியைப் பார்க்கப் போனவரின் சந்தோஷம் அதிகமாயிற்று. ஆனால் ஒரே ஓர் சந்தேகம் தொந்தரவு செய்தது.

"வெறுமனே பாத்திகளைக் கட்டி விட்டிருக்கிறீர்களே? ஏன் தண்ணீர் இறைத்து ஏதேனும் பயிர் செய்ய வில்லை?" என்று கேட்டார்.

"தண்ணீர் இறைக்கும் மின்சார இயந்திரம் பழுதாகி யிருக்கிறது!" என்று பதில் வந்தது.

"அடாடா! நூற்றிருபது பிள்ளைகள் தலைக்கு ஒரு குடம் ஜலம் இழுத்துக் கொட்டினாற்கூட இங்கே அமைத்திருக்கும் சிறிய பாத்திகளில் ஜலம் நிரப்பி விடலாமே? போனாற் போகட்டும். இயந்திரம் எப்போது பழுதாயிற்று?"

"பழுதாகி ஒன்பது மாதம் ஆகிறது!"

"அடாடா! ஒன்பது மாதமாக ரிப்பேர் ஆகவில்லையா? ஏன்?"

"ஜில்லா போர்டு பள்ளிக்கூடம் இது. ஜில்லா போர்டுக்கு எழுதியிருக்கிறோம். இன்னும் அவர்கள் ரிப்பேருக்கு ஏற்பாடு செய்யவில்லை."

"இயந்திரத்தில் என்ன கோளாறு என்று பார்த்துச் செப்பனிடுவதற்கு இங்கே ஒருவரும் இல்லையா?"

"இங்கே ஒருவரும் இல்லை. தெரியாதவர்கள் இயந்திரத்தில் கைவைத்து அது அடியோடு வீணாகிவிட்டால் என்ன செய்கிறது?"


"ஆகக்கூடி, சென்ற ஒன்பது மாதமாக இவ்விதம் பாத்திகள் கட்டியதோடு விவசாய போதனை நிற்கிறது. ஒன்றுமே பயிர் செய்யப்படவில்லையாக்கும்!"

"ஆமாம்! எப்படி நிலத்தைப் பண்படுத்துவது, எப்படி உரம் போடுவது, எப்படிப் பாத்தி கட்டுவது, — இவை யெல்லாம் நன்றாகச் சொல்லிக் கொடுக்கிறோம்."

"ஏதாவது சில கறிகாய்ச் செடிகளாவது வைத்துப் பயிராக்கலாமே? பிள்ளைகளைக் குடத்தில் தண்ணீர் மொண்டு வந்து கொட்டச் சொல்லலாமே?"

"பிள்ளைகள் தண்ணீர் மொண்டு கொட்டச் சம்மதிக்க வேண்டாமா?"

மூன்று பெரிய கேள்விகள் :—



கலாசாலைகள் திறக்கப்பட்டு விட்டன. மாணவர்கள் கியூ வரிசைகளில் நின்று கடின தவம் செய்து கல்லூரிகளில் இடம் பிடிக்கின்றனர்.........

'' சரி ; ஒன்பது மாதமாகத்தான் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பழுதாய்க் கிடக்கிறது. அதற்கு முன் பதினைந்து மாதங்களில் ஏதாவது பயிர் செய்திருப்பீர்களே ?''

'' ஆமாம்.''

'' அவற்றில் என்ன பலன் கிடைத்தது ?''

'' ஒன்றும் கிடைக்கவில்லை.''

'' ஏன் ? நாலு வீசை கத்திரிக்காய்கூட எடுக்க முடியவில்லையா ?''

'' பலன் எடுக்கும் வரை பயிர்களை விட்டு வைத்திருக்கவில்லை.''

'' ஏன் ? ஏன் ?''

'' பலன் எடுத்தால், அதை விற்று முதல் செய்ய வேண்டும். விற்று வந்த பணத்தை எந்தக் கணக்கில் வரவு வைப்பது என்ற கேள்வி கிளம்பும் ! அந்த வீண் தொல்லையெல்லாம் எதற்காக என்றுதான் !''


இந்தப் பதிலைக் கேட்டதும் பள்ளிக்கூடம் பார்க்கப் போனவர் மூர்ச்சை அடைந்து விழுந்து விடவில்லை. ஏனெனில், தற்சமயம் நமது பள்ளிக்கூடங்களில் அமுலில் உள்ள கல்வி முறையின் கீழ் விவசாய போதனை, கைத்தொழில் போதனை முதலியவையெல்லாம் இம்மாதிரி இலட்சணத்தில்தான் நடக்கும் என்று அவர் எதிர்பார்த்ததுதான் !

ஆகையால், மேற்படி உயர்தரப் பள்ளியில் விவசாய வகுப்புத் தொடங்குவதற்காக ஜில்லா போர்டு கொடுத்த ரூ. 5000த்தையும் 'புத்திக் கொள் முதல்' கணக்கில் எழுதி விடலாம் என்னும் அவருடைய கருத்து ஊர்ஜிதமாயிற்று.

இன்னும் சில உயர்தரப் பள்ளிகளில் பிள்ளைகளுக்குக் கைத் தொழில்கள் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக, பல பள்ளிகளில் கற்பிக்க எடுத்துக் கொள்ளப்படும் கைத்தொழில் கைத்தறித் தொழில். ஓர் அறையில் இரண்டு கைத்தறிகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் பாவு போட்டிருப்பார்கள். ஊடை ஒரு முழம் அல்லது ஒன்றரை முழம் நெய்யப்பட்டிருக்கும். பாவில் பல இடங்களில் நூல் அறுந்து தொங்கும். ஊடை போடுவதற்கான நூற் கண்டிலிருந்தும் நூல் அறுந்து தொங்கும். சில இடங்களில் பாவும் ஊடையும் சிக்கலாகிச் சிதைந்து போயிருக்கும். கைத்தறியிலும் ஆங்காங்கே பழுதான இடங்கள் காணப்படும்.

கைத்தறிகள் அமைந்துள்ள அறைக்குத் திடீரென்று போய்ப் பார்த்தால், அங்கே யாரும் இருக்க மாட்டார்கள். கைத்தறித் தொழில் பயிலும் மாணாக்கர்கள் விளையாட்டு மைதானத்தில் மரத்தடிகளில் காணப்படுவார்கள். அடுத்த 'பீரியட்' மணி அடிப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பார்கள். கைத்தறி உபாத்தியாயர் என்ன ஆனார், எங்கே போனார் என்பது யாருக்குமே தெரியாது. அவர் என்ன செய்வார் பாவம் ? ஹெட் மாஸ்டர்தான் என்ன செய்வார் ? கைத்

பதில் ஒன்றுதான்!



......ஆனால் கலாசாலைகளில் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் நிலைமை அதைவிட மோசமாயிருக்கிறது!

தறி உபாத்தியாயரை "ஏன் வகுப்பு நடத்தவில்லை?" என்று கேட்டால், கைத்தறியைச் செப்பனிடுவதற்குப் பணம்வேண்டும் என்று கேட்பார். அல்லது பாவுக்கும் ஊடைக்கும் புதிதாக நூல் வாங்கியாக வேண்டும் என்பார். இதைக் காட்டிலும், அவரை ஒன்றும் கேட்காமலே இருப்பது நல்லது என்று ஹெட்மாஸ்டர் சும்மா இருந்து விடுவார்! *

புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிக் குற்றம் சொல்வோரில் சிலர் "தொழிலாளிகளிடம் பிள்ளைகளைத் தொழில் கற்க விடலாமா! பள்ளிக்கூடங்களிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்!" என்று சொல்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களிலேயே தொழிற் பயிற்சி அளிக்கப்படுவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யக் கூடுமானால் நல்லதுதான். ஆனால் அது இப்போதைக்குச் சாத்தியமான காரியம் அல்ல. அதற்குப் புதிய முறையில் பயின்ற ஆசிரியர் வரவேண்டும்.

இந்தத் தலைமுறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் விரலில் அழுக்குப் படாமல் காலங்கழிப்பதே நாகரிகம் என்ற நம்பிக்கையில் வளர்ந்தவர்கள். இவர்களுக்கு ஆறு மாதம் விசேஷ தொழிற் பயிற்சி அளித்து விட்டுப் பிள்ளைகளுக்குத் தொழில் போதிக்கும்படி விடுவது முற்றும் வீண் வேலை. பொதுப் பணமும் ஆசிரியர்களின் நேரமும் வீண் விரயமாவதைத் தவிர பலன் ஒன்றும் விளையாது.

முற்றும் புதிய முறையில் பயின்ற ஆசிரியர்கள் ஆயிரம், பதினாயிரக் கணக்கில் அதற்கு வேண்டும். இன்றைக்குத் தயார் செய்ய ஆரம்பித்தால் அடுத்த பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு அத்தகைய ஆசிரியர் கூட்டத்தை எதிர்பார்க்கலாம். அதற்கு ஆரம்பக் கல்வியிலிருந்தே பிரயத்தனம் ஆரம்பிக்க வேண்டும்.

அதைத்தான் ராஜாஜி இப்போது ஆரம்பித்திருக்கிறார். சின்னஞ் சிறு குழந்தைகள் கைத்தொழில் உடனே கற்றுக் கொண்டு வேலைசெய்து சம்பாதிக்க வேண்டும் என்று ராஜாஜியும் சொல்லவில்லை; வேறு யாரும் சொல்லவில்லை. கைத்தொழில்கள் செய்யப்படும் இடங்களில்,—அந்த கைய சூழ்நிலையில்,—தினம் சிறிது நேரம் காலங் கழித்தாலே போதுமானது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது வெறும் வார்த்தை அன்று. சின்னஞ் சிறு வயதில் கண்ணால் பார்ப்பது உள்ளத்தில் அப்படியே பதிந்து விடும்; கைகள் தாமாகவே வேலை செய்யப் பழகிவிடும். ஏட்டுக் கல்வியைப் போல் கைத் தொழில்களைப் பயில்வதும் முக்கியமானது, கௌரவமானது என்ற எண்ணம் நம் குழந்தைகளின் உள்ளத்தில் வேரூன்றினால், அதனாலேயே எவ்வளவோ நன்மை உண்டாகிவிடும். அப்படிப் பட்ட சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் வருங்காலத்தில் வளர்ந்து படித்துத் தேறி ஆசிரியர்களாகும்போது, பள்ளிக்கூடங்களிலேயே தக்க முறையில் தொழிற் கல்வி பயில்விக்கும் திறனை அடைந்திருப்பார்கள்.

வெறும் ஏட்டுக் கல்வி மட்டும் பயில்வதில் இளம் பிராயம் முழுவதையும் செலவழித்து விட்டு, உபாத்தியாயர் வேலைக்கு வந்திருப்பவர்களிடம் குழந்தைகளைத் தொழிற் கல்வி பயிலச் செய்வது வீண் வேலை; பண விரயம்.

---

* வாலாஜாபாத் இந்துமத பாடசாலை போன்ற சில ஸ்தாபனங்கள் இதற்கு விதிவிலக்காக நடந்து வருகின்றன. மிகப் பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் தொழிற் கல்வி என்பது வெறும் கேலிக் கூத்தாகத்தான் இருக்கிறது.

எட்டுக் கல்வி ஆசிரியர்களைத் தொழிற் கல்வி பயின்று போதிக்கும்படி வற்புறுத்துவது அவர்களுக்கு நீதி செய்வதும் ஆகாது.

தலைமுறை தலைமுறையாகக் கைத்தொழில் பயின்று வந்து அதையே ஜீவனோபாயமாகக் கொண்டவர்களிடம் குழந்தைகள் தொழில் பயில்வதுதான் சிலாக்கியம் என்று சொல்லவும் வேண்டுமா! ஒரு கைத்தறிக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த குழந்தையை "வீட்டில் தொழில் பயில வேண்டாம்; பள்ளிக்கூடத்தில் வந்து கற்றுக்கொள்!" என்று சொல்வதைப் போல் அர்த்தமற்ற காரியம் வேறு ஏதேனும் இருக்க முடியுமா!

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் இந்த அர்த்தமற்ற காரியத்துக்கும் வீண் பண விரயத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கிறது.

"பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்களிடம் நமது குழந்தைகள் எட்டுக் கல்வி பயிலட்டும். வீட்டிலோ வயல்களிலோ இஷ்டமான தொழிற் கல்வி பயிலட்டும்" என்று பிரித்து விடுகிறது.

இதற்கு மாறாக, "பள்ளிக்கூடங்களிலேயே தொழிற் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும்" என்று சொல்கிறவர்கள், தற்போதைய பிரத்யட்ச நிலைமையைச் சிறிதும் அறிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

திருமயிலைப் பெரியார்

இப்போதெல்லாம் ஒவ்வொரு வாரமும் நமது "கல்கி" இதழ் அச்சாகப் போகும் வரையில் திகிலுடன் இருக்க வேண்டி வருகிறது. "இந்த வாரத்தில் எந்த மகான் அல்லது எந்தத் தலைவர் அல்லது எந்தப் பெரியார் காலமானார் என்ற செய்தி வருமோ!" என்று கவலைப்பட வேண்டியதாயிருக்கிறது. அடுத்தடுத்து அத்தகைய துயரகரமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

நமது சமூக வாழ்வின் பல துறைகளிலும் தங்கள் புகழுடம்பை நிலைநாட்டி விட்டுச் சென்ற பெரியார்கள் பலரை மயிலாப்பூர் அளித்திருக்கிறது. ஸர் டி. முத்துசாமி ஐயர், ஸர் வி. பாஷ்யமய்யங்கார், ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் போன்ற நீதிபதிகளும், ஸர் எஸ். சுப்பிரமண்ய அய்யர், ஸர் வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்கார் போன்ற தேச பக்தர்களும், ஸ்ரீ எஸ் கஸ்தூரி ரங்கய்யங்கார், ஸ்ரீ ஏ. ரங்கசாமி அய்யங்கார் போன்ற பத்திரிகாசிரியர்களும், ஸர் கே. சீனிவாசய்யங்கார். ஸர் என். கோபாலசாமி ஐயங்கார் போன்ற திறமை வாய்ந்த நிர்வாகிகளும் மயிலாப்பூரில் வாழ்ந்தவர்கள்தான்.

இத்தகைய தீரர்களின் வரிசையில் கடைசியானவர் என்று சொல்லக் கூடிய ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியார் சென்ற வாரத்தில் நம்மை விட்டுப் பிரிந்து சென்றார்.

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாருக்கு வயது எழுபத்தொன்பது ஆகிறதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பத்து தினங்களுக்கு முன்னால்கூட அவர் பத்திரிகைகளுக்கு எழுதியிருந்த கடிதத்தைப் படித்தவர்கள், சாஸ்திரியார் அவ்வளவு முதுமைப் பிராயத்தை அடைந்து விட்டதாக நம்ப முடியவில்லை.

பெரியார் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சிகரம் போன்ற ஒரு கட்டம் வருகிறது. ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரின் வாழ்க்கையில் அத்தகைய கட்டம், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் வந்தது.

அப்போது சாஸ்திரியார் சென்னை அரசாங்கத்தின் அட்வகேட் ஜெனரலாக இருந்தார். அட்வகேட் ஜெனரல் பதவி வகிப்பவர்களுக்கு அடுத்தாற்போல் கவர்னரின் நிர்வாக சபையில் பதவி கிடைப்பது அக்காலத்தில் எதிர்பார்க்கக் கூடியதாயிருந்தது. அதுபோலவே, சாஸ்திரியாருக்கும் நிர்வாக சபை அங்கத்தினர் பதவி கிடைத்தது என்று அறிந்தபோது, யாரும் அதிகமாக ஆச்சரியப்படவில்லை. அவருடைய யோக்யதைக்குத் தகுந்த பதவி என்றே கருதினார்கள்.

பதவி கிடைத்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள் ஸ்ரீ சாஸ்திரியார் அப்பதவியை உதறித் தள்ளி ராஜிநாமா செய்து விட்டார் என்ற செய்தி வந்தபோதுதான், பூகம்பமோ பிரளயமோ நேர்ந்து விட்டது போல் எல்லாரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

அக் காலத்தில் அரசியல்வாதிகளைப் பொதுவாக மிதவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் பிரிப்பதுண்டு. இரு சாராரும் தேசபக்தர்கள்தான். ஆனால் மிதவாதிகளின் தேச பக்தி இறுதியில் ஏதேனும் ஒரு பெரிய அரசாங்கப் பதவியில் வந்து முற்றுப் புள்ளியை அடையும் என்று சொல்லப்படுவது வழக்கம்.

சாஸ்திரியாருக்கு உத்தியோகம் அளிக்கப்பட்டதற்கு முன்னால், ஒரே நிர்வாக சபை அங்கத்தினரிடம் சட்ட இலாகாவும் போலீஸ் இலாகாவும் இருந்து வந்தன. சாஸ்திரியார் நியமிக்கப்பட்ட மறுநாள் சட்ட இலாகா மட்டும் அவரிடம் இருக்குமென்றும், போலீஸ் இலாகா இன்னொரு அங்கத்தினருக்கு அளிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. உடனே சாஸ்திரியார் அது தம் சுயமரியாதைக்குப் பங்கம் விளைப்பதாகும் என்று சொல்லி ராஜிநாமா எழுதி அனுப்பி விட்டார்.

சாஸ்திரியார் ராஜிநாமா செய்தது சரியா? அதற்கு அவர் கூறிய காரணம் பொருத்தமானதா என்பதைப் பற்றி அக்காலத்தில் படித்த வகுப்பாரிடையே தீவிரமான சர்ச்சைகள் நடந்தன.

பொதுஜனங்கள் இந்தச் சர்ச்சைகளைப் பொருட்படுத்தவுமில்லை; காரண காரியங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும் இல்லை.

அவ்வளவு பெரிய பதவியை ஒரு நொடிப் பொழுதில் விட்டுவிடுவதற்கு மனப் பக்குவம் பெற்றிருந்த சாஸ்திரியாரின் அதிசயமான தீரத் தன்மையைப் பெரிதும் வியந்து பாராட்டினார்கள்.

சாஸ்திரியார் அந்தச் செயலினால் அரசியல் உலகத்தில் மிதவாதிகளின் மதிப்பையே உயர்த்தி விட்டார் என்று சொல்வது மிகையாகாது.

* * *

சாஸ்திரியார் இந்த உலகத்தில் சகலவிதமான பாக்கியங்களையும் படைத்திருந்தார். அவரிடம் ஒரு முறை நெருங்கிப் பழகியவர்கள் எப்போதும் அவருடைய நண்பர்களாயிருந்து வந்தார்கள். காலஞ்சென்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரியாருடன் ஸ்ரீ டி. ஆர். வி. சாஸ்திரியாரின் நட்பு இலக்கியத்தில் வர்ணிக்கத் தகுந்தது.

"ஆல்போல் தழைத்து" என்ற ஆசி மொழி பூரணமாக நிறைவேறியதற்குச் சாஸ்திரியாரின்

குடும்பத்தை உதாரணமாகச் சொல்ல வேண்டும். புதல்வர்களும் புதல்விகளும் பேரன்களும் பேத்திமார்களுமாகத் தம்மைச் சுற்றிப் பல்கிப் பெருகித் தழைத்து வளரும் பேறு பெற்றிருந்தார்.

தாய் ஆலமரம் புயற் காற்றில் விழுந்த பின்னர், அதைச் சூழ்ந்து விழுது விட்டுத் தழைத்துள்ள கிளைகள் மட்டும் பரிதாபமாக நிற்கும் நிலையில், அவருடைய குடும்பத்தார் இன்றைய தினம் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரின் பூத உடம்பு மறைந்தாலும், அவருடைய புகழுடம்பு நெடுங்காலம் நிலைத்து நிற்கும் என்பதை நினைத்து ஆறுதல் அடையக் கோருகிறோம்.

திருத்தணித் தமிழர்களின் முதல் வெற்றி!

மக்களின் உணர்ச்சி வேகம் சில சமயங்களில் தலைவர்களின் கட்டுப்பாடுகளையெல்லாம் உடைத்துக்கொண்டு பொங்கிப் பெருகிவிடுகிறது. திருத்தணிப் பகுதியில் சமீபத்தில் அதற்கு ஓர் உதாரணத்தைப் பார்த்தோம். எல்லைப் பாதுகாப்புக் கமிட்டியார் திருத்தணிப் பகுதியில் கிளர்ச்சியை நிறுத்தி வைத்துச் சென்னை நகரில் நடத்துகிறது என்று தீர்மானித்தார்கள். ஆனால் மக்களின் உணர்ச்சி வேகம் அத்தீர்மானக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கவில்லை. பல துறைகளில் பொத்துக் கொண்டு கிளம்பியது. இந்த உணர்ச்சி வேகம் விரும்பத் தகாத வழிகளில் செல்லுவதையும், அதை விஷம நோக்கமுள்ள வேறு கட்சியினர் உபயோகப்படுத்திக்கொள்வதையும் ஸ்ரீ சிவஞான கிராமணியாரும் அவருடைய துணைவர்களும் விரும்பவில்லை. எனவே, நிறுத்தி வைத்த கிளர்ச்சியை மறுபடியும் அவர்கள் தொடங்கிச் சட்ட மறுப்புச் செய்து சிறை செல்லுமாறு நேர்ந்தது.

அதிர்ஷ்டவசமாக, ஸ்ரீ சிவஞான கிராமணியார் சிறை புகுந்ததற்கும் பண்டித ஜவாஹர்லால் நேரு திருத்தணிப் பிரச்னையை எல்லைக் கமிஷன் கவனிக்கும் என்று உறுதி கொடுத்ததற்கும் சரியாக இருந்தது. இதை முன்னிட்டு எல்லைக் கமிட்டியார் எல்லாவிதக் கிளர்ச்சிகளையும் முடிவாக நிறுத்திவிடத் தீர்மானித்தார்கள். சர்க்காரும் சிறையிலிருந்தவர்களை விடுதலை செய்து தடை உத்தரவுகளையும் ரத்து செய்தார்கள்.

சித்தூர் ஜில்லாவை 'விவாதத்துக்கிடமில்லாத' ஆந்திர ஜில்லாக்களின் ஜாபிதாவில் குறிப்பிட்டிருந்ததுதான் திருத்தணி முதலிய பகுதிகளில் இருந்த தமிழர்களுக்குள் கவலை உண்டாக்கக் காரணமாயிருந்தது. இப்போது "எல்லைக் கமிஷன் சித்தூர் எல்லைப் பகுதிகளைப் பற்றி விசாரணை நடத்தும்" என்று நேரு உறுதிமொழி அளித்தது, சித்தூர் ஜில்லா தமிழர்கள் அடைந்த ஒரு வெற்றி என்பதில் ஐயமில்லை. இதன் பொருட்டுத் திருத்தணிப் பகுதியில் வாழும் தமிழ் மக்களை நாம் வாழ்த்துகிறோம்.

ஆனால் இத்துடன் அவர்கள் தூங்கிவிடக் கூடாது. திருத்தணி, புத்தூர் பகுதிகளிலும் மற்றும் சித்தூர் ஜில்லாவில் தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்களிலும் கிராமம் கிராமமாகவும் பட்டணம் பட்டணமாகவும் ஜனத்தொகைக் கணக்கு எடுத்து, தமிழர்களின் எண்ணிக்கை இவ்வளவு என்பதை நிர்ணயிக்க வேண்டும். இது பற்றி ஆதாரங்களுடன் எல்லைக் கமிஷன் முன் சாட்சியம் விடத் தயாராக வேண்டும்.

தமிழ் நாட்டுடன் சேர விரும்பும் சித்தூர் ஜில்லா வாசிகள் எல்லாரிடமும் கையொப்பம் வாங்கி எல்லைக் கமிஷன் முன்பு சமர்ப்பிப்பதும் ஒரு நல்ல முறையாயிருக்கும். இனி இத்தகைய ஆக்க வேலைகளில் கவனம் செலுத்தப்படும் என்று நம்புகிறோம்.

* * *

திருத்தணிக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில் சிலர் ரயிலை நிறுத்துவது போன்ற காரியங்களில் ஈடுபட்டது குறித்து மிக வருந்துகிறோம். ரயிலைத் தடை செய்வது தேச நன்மைக்கு எவ்வளவு பாதகமானது என்பதை நேருஜி வற்புறுத்தியிருப்பதுடன், அத்தகைய தேச விரோதமான காரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று கடுமையாக எச்சரித்திருக்கிறார்.

ஆனால் இந்த விரும்பத் தகாத முறையைச் சித்தூர் கிளர்ச்சியாளர்கள் கையாண்டதின் மூலகாரணம் இன்னதென்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொட்டி ஸ்ரீராமுலுவின் அந்திய நாட்களில் ஆந்திர தேசத்தின் மூலமாகச் சென்ற பல ரயில்கள் நிறுத்தப்பட்டன. பொட்டி ஸ்ரீராமுலு மரணம் அடைந்ததும் ஆந்திர நாடு வழியாகச் சென்ற ரயில்கள் நிறுத்தப்பட்டதுடன், ரயில்களும் ரயில்வே ஸ்டேஷன்களும் சூறையாடப்பட்டன. அவையெல்லாம் நடந்து கொண்டிருக்கும்போதே நேருஜி "தனி ஆந்திர இராஜ்யம் உடனே அளிக்கப்படும்" என்று அறிக்கை விடுத்தார்.

எனவே, உண்ணாவிரதம், ரயில் நிறுத்தல் போன்ற விரும்பத்தகாத கிளர்ச்சி முறைகளைக் கையாண்டால்தான் நியாயம் பிறக்கும் என்ற நம்பிக்கை தேசத்தில் பலருடைய மனதில் வேரூன்றிவிட்டது. இதன் காரணமாகவே திருத்தணித் தமிழர்களும் அந்த முறைகளைக் கையாண்டார்கள் என்று கருதுகிறோம்.

இப்போது நேருஜி உண்ணாவிரதம், ரயில் நிறுத்தல் போன்ற முறைகளைப் பற்றித் தமது அபிப்பிராயத்தை ஐயத்துக்கு இடமின்றித் தெரிவித்து விட்டார். இந்த அபிப்பிராயத்தில் அவர் உறுதியாக நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

பஞ்சம் தீர்ந்தது!

நிழலின் அருமை வெய்யிலில் தெரியும் என்பார்கள். மழையின் அருமையை மழை இல்லாமற் போனால்தான் மக்கள் அறிய முடிகிறது. திருவள்ளுவர் காலத்திலே கூடத் தமிழ் நாட்டில் சில சமயம் மழை இல்லாமற் போயிருக்க வேண்டும். அந்த தெய்வப் புலவர் கடவுளுக்கு அடுத்தாற்போல் வான மழையைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். "வானுலகத்தில் ஏதோ ஒரு கலசத்தில் அமிர்தத்தை வைத்திருப்பதாகச் சொல்கிறார்களே! இது என்ன அறிவீனம்! வானத்திலிருந்து பொழியும் மழைதான் உண்மையில் அமுதமாகும்!" என்று பொருள் படும்படியாக,

"வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று!"

என்று அருளி யிருக்கிறார்.

தமிழ்நாட்டில் சில வருஷங்களாகத் தொடர்ந்து மழை இல்லாமற் போனபடியால் மழையின் சிறப்பை மக்கள் நன்றாக அறிய முடிந்தது. இந்த வருஷத்தில் தினப் பத்திரிகைகளில் மழைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் இதற்கு முன்னால் எந்த காலத்திலும் அளிக்கப் பட்டதில்லை. இடி விழுந்து ஒரு குட்டிச் சுவர் தகர்ந்து விட்டால் அதைப் பெரிய செய்தியாகப் போடுவார்கள். ஒரு கழுதையின் பேரில் வண்டி ஏறிக் குடை கவிழ்ந்து விட்டால் அதுவும் முக்கியமான செய்தியாகப் பிரசுரிக்கப் படும். காலராவினால் ஒரு மனிதன் இறந்து விட்டால், உடனே விசேஷ பிரேத நிருபர்கள் அங்கே ஓடி அவனைப் பஞ்சத்தில் செத்தவனாகப் படம் பிடித்துப் போடுவதற்குப் பிரமாத ஏற்பாடு செய்வார்கள்.

ஆனால் ஒரு ஜில்லா முழுவதும் மழை பொழிந்து ஏரி குளங்கள் நிரம்பி லட்சக் கணக்கான ஜனங்களுக்குச் சுபிட்சம் ஏற்படுவதா யிருந்தால், அதைப் பற்றிச் செய்தியே பிரசுரமாவதில்லை.

அந்தப் பொது வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டில் தினப் பத்திரிகைகளில் மழையைப் பற்றிய செய்திகள் முக்கியத்துவம் அடைந்தன.

மழையின் பேரில் உள்ள ஆவலினால், அது இயற்கையாக வரவேண்டிய காலத்துக்கு முன்னாலேயே சிலர் "இந்த வருஷமும் மழை பொய்த்து விட்டது!" என்று ஓலமிடத் தொடங்கினார்கள். சில புண்ணியவான்கள் ராஜாஜியின் ஆட்சி நன்றாக நடக்கிறதே என்ற கோபத்தினால் "இந்த வருஷமும் மழை இல்லாமற் போக வேண்டும்" என்றும் பிரார்த்தனை செய்தும் வந்தார்கள். கடவுளின் அருளினால் அவர்களுடைய தீய விருப்பம் நிறைவேறவில்லை.

மேற்குக் கடற்கரையில் இந்த மாதம் முதல் வாரத்தில் மழை கொட்டு கொட்டு என்று கொட்டி விட்டது. இன்னமும் அந்தப் பகுதியில் மழை கொட்டிக் கொண்டிருக்கிறது.

காவேரி நதிக்குத் தண்ணீர் வரவேண்டிய கேந்திர ஸ்தானமாகிய குடகில் கடந்த பத்து நாட்களாகப் பெரு மழை பெய்து கொண்டிருக்கிறது. ஒரே நாளில் 9 அங்குலம் மழை பெய்தது. அன்றுவரை மொத்தம் 53 அங்குலம் மழை பெய்திருக்கிறது. அதாவது சராசரியைக் காட்டிலும் 20 அங்குலம் அதிகமாகப் பெய்திருக்கிறது.

கிருஷ்ணராஜ சாகரத் தேக்கத்தில் நீர் மட்டம் அதன் பூரண அளவாகிய 124 அடியை அடைந்து பொங்கி வழிகிறது.

மேட்டூர்த் தேக்கத்தில் தண்ணீர் மட்டம் ஏறிக் கொண்டே இருக்கிறது. இந்த வாரத்துக்குள் 80 அடியை அடைந்து விடலாம்.

அமராவதியிலும் பவானியிலும் தண்ணீர்ப் பிரவாகம் வந்து, மேட்டூர் அணையைத் திறக்க வேண்டிய அவசியம் இல்லாமல் செய்திருக்கிறது.

நீலகிரியில் சராசரியைக் காட்டிலும் பத்து அங்குலம் அதிக மழை. திருவனந்தபுரத்தில் நாலரை அங்குலமும் கோயமுத்தூரில் நாலு அங்குலமும் சேலத்தில் மூன்றரை அங்குலமும் சராசரிக்கு அதிகமாக மழை பெய்திருக்கிறது.

இன்னும் தொடர்ந்து மழை பெய்யுமென்பதற்கு அறிகுறிகளும் இருக்கின்றன.

ஆகையால் வருகிற அக்டோபர் மாதத்தோடு தமிழ் நாட்டில் பஞ்சம் நீக்குவிடும் என்று நிச்சயமாக நம்பியிருக்கலாம்.

இடையிலுள்ள மூன்று மாதங்களைத்தான் பொதுமக்களும் இராஜ்ய சர்க்காரும் சேர்ந்து சமாளிக்க வேண்டும்.

சென்ற இதழில் "அன்னதானமும் அரிசி விலையும்" என்ற குறிப்பின் இறுதியில் "அரிசியை மிதமிஞ்சிச் சேர்த்து வைத்திருப்பவர்களிடமிருந்து அதிகப்படி அரிசியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அவசரச் சட்டம் செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது. அதை உபயோகப்படுத்துவது தற்சமயம் அவசியமா என்பதைச் சர்க்கார் ஆலோசிக்க வேண்டும்" என்று எழுதியிருந்தோம்.

சென்ற இதழ் வெளியாவதற்குள்ளேயே தஞ்சை ஜில்லாவில் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

இத்தகைய நடவடிக்கைகளை மேலும் கைக்கொள்வது அவசியமில்லாமல் வருகிற மூன்று மாதத்துக்கு விவசாயிகளும் தானிய வியாபாரிகளும் சர்க்காருடன் ஒத்துழைத்தால் மிகவும் நன்றாயிருக்கும்; எல்லோருக்குமே நன்மை உண்டாகும்.

அட்டைப்பட விளக்கம்

தேவியும் தானும் வந்(து) எம்மை யாள
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும்நாமே. —மாணிக்க வாசகர்

நம் முன்னோர்கள் பார்வதி பரமேசுவரர்களைப் பற்றிக் கொண்டிருந்த தத்துவப் பொருளைக் கேட்டால் நம் சிந்தை திகைக்கும்; பக்தி பெருகும்.

பொருள் என்றிருந்தால் அதனை இயக்கும் சக்தி ஒன்று மிருக்கிறது. வித்து ஒன்று பூமியில் விழுந்தால் ஏதோ ஒரு சக்தி அதனுள்ளிருந்து வளரச் செய்கிறது. உலகம் ஒரு அற்புதப் பொருள். அது தன்னைத் தானே சுற்றிக் கொள்வதோடு சூரியனையும் சுற்றி வருகிறது! அப்படியானால் ஏதோ ஒரு சக்தி யிருந்துதானே மேற் கண்டவாறு இயக்கி யிருக்க வேண்டும். ஒரு அணுவை எடுத்துக் கொண்டாலும் அதற்குள் எவ்வளவோ சக்தி அடங்கிக் கிடக்கிறது என்றும், அதற்குள்ளிருக்கும் பரமாணுக்குள் இயங்கும் வேகம் சொல்லக் கூடியதன்று என்றும் விஞ்ஞான உலகம் வியக்கிறது.

ஆகவே, பொருள் இருக்குமிட மெல்லாம் சக்தி யிருப்பதைக் கண்டார்கள். அந்த எல்லையில்லாப் பொருளினைச் சிவம் என்றும் இயக்கும் சக்தியைப் பார்வதி என்றும், உமை யென்றும், வியந்து பாராட்டி, போற்றி மகிழ்ந்தார்கள். அது மட்டுமா!

அற்புதக் கோயில்கள் எழுப்பினார்கள். கலைஞானம் பெற்ற நம் முன்னோர்கள் சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் பல்வேறு உருவங்கள் புனைந்து மகிழ்ந்தார்கள். சிற்பங்களும் சிலைகளும் செய்து வணங்கினார்கள்.

சமீபத்தில் தஞ்சையில் நடந்த கலைக் கண்காட்சியில் கலியாண சுந்தரக் கோலம் கொண்ட இந்த சிவ–பார்வதி விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த அற்புத உருவங்களை நமது சித்திரக்காரர் பெயர்த்து எழுதி வந்ததை இவ்விதழ் அட்டைச் சித்திரமாக வெளியிட்டிருக்கிறோம்.

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 29

சந்தேக விபரீதம்

பொன்னியின் செல்வர் அரண்மனைக்கு உள்ளே சென்ற பிறகு, காலாந்தக கண்டர் அரண்மனை வாசலில் வந்து சேர்ந்து கொண்டிருந்த வேளக்காரப் படை வீரர்களை நெருங்கினார்.

"இது என்ன கூச்சல்? அரண்மனைக்குள்ளே சக்கரவர்த்தி நோயுடன் படுத்திருப்பது உங்களுக்குத் தெரியாதா? கோட்டையைச் சுற்றிப் பகைவர் படை சூழ்ந்திருப்பது தெரியாதா?" என்று கடுமை தொனிக்கும் குரலில் கேட்டார்.

வேளக்காரப் படையின் தலைவன், "ஐயா! கோட்டையைச் சூழ்ந்திருப்பவர்கள் பகைவர்கள்தானா? கொடும்பாளூர்ப் பெரிய வேளார் நமக்குப் பகைவர் ஆனது எப்படி?" என்று கேட்டான்.

சின்னப் பழுவேட்டரையர் பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, "அதை அவரிடந்தான் கேட்க வேண்டும்! பகைவர் இல்லை யென்றால், எதற்காகச் சைன்யத்துடன் வந்து கோட்டையை முற்றுகை யிட்டிருக்கிறார்?" என்று கேட்டார்.

"சின்ன இளவரசரைச் சிம்மாசனத்தில் ஏற்றி முடிசூட்டுவதற்காக என்று கேள்விப்படுகிறோம்" என்றான் வேளக்காரப் படைத் தலைவன்.

"அது உங்களுக்கெல்லாம் சம்மதமா?" என்று சின்னப்பழுவேட்டரையர் கேட்டார்.

வேளக்காரப் படைத் தலைவன் தன் வீரர்களைத் திரும்பிப் பார்த்து, "நீங்களே சொல்லுங்கள்!" என்றான்.

வீரர்கள் உடனே "சம்மதம்! சம்மதம்! பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழங் கொண்ட இளவரசர் வாழ்க!" என்று கோஷித்தார்கள்.

இம்முறை அந்தக் கோஷம் முன்னைவிட அதிக வலுவுடையதா யிருந்தது.

சின்னப் பழுவேட்டரையரின் முகம் சிவந்தது. மீசை துடித்தது. ஆயினும் பல்லைக் கடித்துக் கொண்டு, "முடி சூட்டுவது பெரிய வேளாரின் இஷ்டத்தைப் பொறுத்ததா? அல்லது உங்கள் விருப்பத்தைப் பொறுத்ததா? சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு மதிப்பு ஒன்றும் இல்லையா?" என்று கேட்டார்.

வீரர்களில் ஒருவன் "தளபதி! சக்கரவர்த்தி சௌக்கியமா யிருக்கிறாரா! நிச்சயந்தானா?" என்று கேட்டான்.

"இது என்ன கேள்வி?" என்று காலாந்தகர் சீறினார்.

"சக்கரவர்த்தியைப் பற்றி ஊரில் ஏதேதோ வதந்தி பரவியிருக்கிறது. நாங்களும் அவரை இன்று பார்க்க முடியவில்லை! அதனால் அவருடைய சுகத்தைப் பற்றி எல்லாரும் மிக்க கவலை அடைந்திருக்கிறோம்!" என்று வேளக்காரப் படை வீரர்களின் தலைவன் கூறினான்.

"சக்கரவர்த்தியை நீங்கள் பார்க்க முடியாத காரணம் முன்னமே நான் சொல்ல வில்லையா? சக்கரவர்த்தியின் மனக்குழப்பம் இன்று அதிகமாயிருந்தது. யாரையும் பார்ப்பதற்கு அவர் விரும்பவில்லை. சபா மண்டபத்திற்கு வருவதற்கும் மறுத்து விட்டார்......"

"சக்கரவர்த்தியின் மனக் குழப்பத்திற்குக் காரணம் என்ன? ஏன் எங்களுக்குத் தரிசனம் அளிப்பதற்கும் மறுக்க வேண்டும்? நாங்கள் அதையாவது தெரிந்து கொள்ளலாம் அல்லவா?"

"நல்லது; சொல்லுகிறேன். ஈழத்துக்குச் சென்றிருந்த இளவரசரைப் பற்றி ஒன்றும் தெரியாமலிருந்ததுதான்

சக்கரவர்த்தியின் கவலை அதிகமானதற்குக் காரணம். இப்போது இளவரசரே வந்து விட்டபடியால்......"

"இளவரசரை நாங்கள் பார்க்க வேண்டும். நன்றாக வெளிச்சத்தில் பார்க்க வேண்டும்!" என்று அந்தப் படையினரில் ஒரு வீரன் கூறினான்.

"ஆமாம்; பார்க்க வேண்டும்! சுழுங் கொண்ட இளவரசர் வாழ்க!" என்று எல்லாரும் சேர்ந்து கூவினார்கள்.

"இளவரசர் முதலில் சக்கரவர்த்தியைத் தரிசிக்க வேண்டும் அல்லவா? பிறகு இஷ்டப்பட்டால் உங்களையும் வந்து பார்ப்பார்!"

"நிச்சயந்தானா? ஒரு வேளை பாதாளச் சிறைக்கு அனுப்பப்படுவாரா?"

வேறொரு நாளாக, வேறொரு சந்தர்ப்பமாக இருந்தால், வேளைக்காரப் படையினர் இவ்வளவு துடுக்காகப் பேசியதற்குச் சின்னப் பழுவேட்டரையரின் வீரர்கள் அவர்கள் மீது போர் தொடுத்திருப்பார்கள்; பெரிய ரகளையாகப் போயிருக்கும். ஆனால் இளவரசரின் திருமுகத்தைச் சற்றுமுன் பார்த்த காரணத்தினாலோ, என்னமோ, காலாந்தக கண்டரின் வீரர்களும் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள்.

சின்னப் பழுவேட்டரையருடைய கை அவருடைய உடை வாளை நாடியது. மேற்கண்டவாறு கேட்ட வீரனை ஒரே வெட்டில் வெட்டிக் கொன்றுவிட வேண்டுமென்று ஒரு கணம் எண்ணினார். உடனே அந்தக் கோபத்தைச் சமாளித்துக் கொண்டு உரத்துச் சிரித்தார்.

"இவன் கேட்ட கேள்வி உங்கள் காதிலெல்லாம் விழுந்ததல்லவா? இளவரசர் பாதாளச் சிறைக்கு அனுப்பப்படுவாரா என்று கேட்கிறான். நல்லது; இளவரசரைச் சிங்காதனத்தில் ஏற்றி முடிசூட்டுவதோ, பாதாளச் சிறைக்கு அனுப்புவதோ என்னுடைய அதிகாரத்தில் இல்லை. சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி நடக்கும். இளவரசரைப் பாதாளச் சிறைக்குக் கொண்டு போவதாயிருந்தாலும், இந்த வழியே தான் கொண்டு போக வேண்டும். அப்போது நீங்கள் அவரைப் பார்த்துக் கொள்ளலாம்!" என்று காலாந்தக கண்டர் கண்களில் கனல் பறக்கக் கூறிவிட்டு, அரண்மனைப் பக்கம் திரும்பினார். வீரர்கள் மீண்டும் கோஷமிட்டதையும் பொருட்படுத்தாமல் அரண்மனை முன் வாசலை நோக்கிச் சென்றார்.

அங்கே வாசற்படிக்கு அருகில் பூங்குழலி தன்னந் தனியாக நின்று கொண்டிருப்பதைக் கண்டார்.

"பெண்ணே! நீ ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறாய்? உன்னை உள்ளே வர வேண்டாம் என்று தடுத்து விட்டார்களா?" என்று கேட்டார்.

"என்னை யாரும் தடுக்கவில்லை; நானாகவே நின்று விட்டேன், ஐயா!" என்றாள் பூங்குழலி.

"ஏன்?"

"வெகுநாட்களாகப் பிரிந்திருந்த தந்தையும் மகனும் சந்திக்கும் வேளையில் எனக்கு என்ன அங்கே வேலை?"

"போகட்டும்; நீயாவது சக்கரவர்த்தி உயிரோடு இருக்கிறார் என்று நம்புகிறாயே? அந்த மட்டில் சந்தோஷம்!"

"நம்புவது மட்டுமில்லை. சக்கரவர்த்தி சௌக்கியமாயிருப்பதைக் கண்ணாலேயே பார்த்துவிட்டுத் தான் திரும்பிவந்தேன்."

"அதோ நிற்கிறார்களே, அந்த வேளைக்காரப் படையாரிடம் நீ பார்த்ததைச் சொல்! அவர்கள் சந்தேகப்படுவதாகத் தோன்றுகிறது!" என்றார்.

"அவர்களுடைய சந்தேகத்துக்கு இந்த நிமிஷம் வரையில் ஆதாரம் இல்லை. அடுத்த நிமிஷம் அது உண்மையாகாது என்று யார் சொல்ல முடியும்?"

"பெண்ணே! நீயும் சேர்ந்து என்னைக் கலவரப் படுத்தப் பார்க்கிறாயா? உங்கள் எல்லாருக்கும் பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று கேட்டார்.

"தளபதி! என்னைப் பலர் 'பைத்தியம்' என்று சொல்லுவதுண்டு. நானே என்னைப் பைத்தியம் என்று சொல்லிக் கொள்வதுமுண்டு. ஆனால் இந்தப் பைத்தியத்தின் யோசனையைக் கேட்டபடியினால் தான் இன்று இளவரசர் இந்தக் கோட்டைக்குள் அபாயமின்றிப் புக முடிந்தது. சக்கரவர்த்தி உயிரோடிருக்கும் போதே அவரைச் சந்திக்கவும் முடிந்தது..."

"ஆகா! இது என்ன? சக்கரவர்த்தியின் உயிருக்கு நீயும் கேடு வைக்கிறாய் போலிருக்கிறதே! மூட ஜனங்களும் முட்டாள் ஜோசியர்களும் உளறுவதைக் கேட்டு நீயும் பிதற்றுகிறாயா? அல்லது உனக்கு வேறு ஏதேனும் தெரியுமா?"

"ஜனங்களும் ஜோதிடர்களும் மட்டுந்தானா கெடு வைக்கிறார்கள்? தங்கள் தமையனார் சொல்லி அனுப்பிய செய்தியைச் சற்று முன் கேட்டீர்களே?"

"அது உண்மை என்பது என்ன நிச்சயம்?" என்றார் காலாந்தக கண்டர்.

"தளபதி! கொடும்பாளூர் இளவரசி எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்?"

"யார் கண்டது? அடுத்தாற் போல் சிங்காதனம் ஏறிப் பட்ட மகிஷியாகும் ஆசை யிருக்கலாம்..."

"தளபதி! நானும் அப்படித்தான் எண்ணி யிருந்தேன். இளவரசி இன்று காலையில் செய்த சபதத்தைக் கேட்ட பிறகு என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்" என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! ஒருவேளை உனக்கே அத்தகைய ஆசை இருக்கிறதா, என்ன?" என்று கேட்டுவிட்டுச் சின்னப் பழுவேட்டரையர் இலேசாக நகைத்தார்.

"தளபதி! உண்மையில் நான் பைத்தியக்காரிதான்! தங்களிடம் பேச நின்றேன் அல்லவா?" என்று கூறிவிட்டுப் பூங்குழலி திரும்பிப்போக யத்தனித்தாள்.

காலாந்தக கண்டரிடம் உடனே ஒரு மாறுதல் காணப்பட்டது.

"பெண்ணே! கோபித்துக் கொள்ளாதே! நீ சொல்ல வந்ததைச் சொல்லி விட்டுப் போ!" என்றார்.

பூங்குழலி மறுபடியும் திரும்பி, "ஆம்; சொல்லத்தான் வேண்டும். இல்லாவிடில் பின்னால் நானும் வருத்தப்படுவேன்; தாங்களும் வருந்தும்படி நேரிடும். ஐயா! சக்கரவர்த்தியின் உயிருக்கு ஏதாவது அபாயம் நேர்ந்தால் நாடு நகரமெல்லாம் தங்கள் பேரிலேதான் பழி சொல்லும். தங்களுடைய வீரர்களே கூடச் சொல்லுவார்கள்!" என்றாள்.

சின்னப் பழுவேட்டரையரின் முகம் சுருங்கிற்று. "அப்படி ஏதாவது நேர்ந்து விட்டால் மற்றவர்கள் பழி சொல்லும் வரையில் காத்திருக்க மாட்டேன். பழிச்சொல் காதில் விழுவதற்குள்ளே என் உயிர் பிரிந்துவிடும்! இந்த வேளைக்காரப் படையினர் துர்க்கா பரமேசுவரி கோவிலில் சத்தியம் செய்தபோது, எல்லாருக்கும் முதலில் சத்தியம் செய்து வழி காட்டியவன் நான்!" என்றார்.

"அதில் என்ன பயன்? சோழ ராஜ்யம் சக்கரவர்த்தியையும் இழந்து ஒரு மகா வீரரையும் இழந்து விடும்! அதைக் காட்டிலும் முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லதல்லவா?"

"பெண்ணே! நான் முன் ஜாக்கிரதையாக இல்லை என்கிறாய்? இதோ இந்த அரண்மனையைச் சுற்றி இவ்வளவு வீரர்கள் கண் கொட்டாமல் நின்று காத்து வருகிறார்களே! எதற்காக? முதன் மந்திரி அநிருத்தர்கூட நான் அறியாமல் அரண்மனைக்குள்ளே போக முடியாது! தெரியுமா?"

"தெரியும், தளபதி! ஆனால் அரண்மனைக்குள்ளே யிருந்தும் அபாயம் வரலாம் அல்லவா?"

"என்ன பிதற்றல்? அரண்மனைப் பெண்கள் சக்கரவர்த்திக்கு விஷங் கொடுத்துக் கொன்று விடுவார்கள் என்று சொல்லுகிறாயா?...அல்லது ஒருவேளை இப்போது இளவரசருடன் உள்ளே போனாளே, அந்தக் கொடும்பாளூர்ப் பெண்ணின் பேரில் சந்தேகப்படுகிறாயா?" என்றார்.

"தெய்வமே! அந்தச் சாதுப் பெண்ணின் பேரில் சந்தேகப்படுகிறவர்களுக்கு நல்ல கதி கிடைக்காது. அவளுக்கு அவ்வளவு சாமர்த்தியமும் இல்லை. ஐயா! இந்த அரண்மனைக்குள் வருவதற்குச் சுரங்கப் பாதை ஒன்று இருக்கிறதல்லவா?......"

சின்னப் பழுவேட்டரையர் திடுக்கிட்டு, "பெண்ணே! அதைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்? மூன்று நாலு பேரைத் தவிர அந்தப் பாதையைப் பற்றி யாருக்கும் தெரியாதே? தெரிந்தவர்கள் உயிரோடு திரும்பிப் போக முடியாதே?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"தளபதி! அதைப் பற்றி இன்று அதிகாலையிலே தான் நான் தெரிந்து கொண்டேன். அங்கே கையில் கூரிய எறி வேலுடன் பாண்டிய நாட்டுச் சதிகாரன் ஒருவன் ஒளிந்து கொண்டிருப்பதையும் பார்த்தேன்......"

"கடவுளே! இது என்ன பயங்கரமான வார்த்தை சொல்லுகிறாய்? அந்தப் பாதை...அந்தப் பாதை...எங்கே போய் முடிகிறது என்று தெரியுமா?"

"பொக்கிஷ நிலவறை வழியாகப் போகிறது!" என்றாள் பூங்குழலி.

"ஆகா! நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். மனிதப் பெண் உருக் கொண்ட அந்த மாய மோகினியின் வேலைதான் இது! என் தமையனை அடிமை கொண்ட பெண் பேயின் வேலைதான் இது. ஐயோ! எத்தனை தடவை நான் எச்சரித்தேன்? பெண்ணே! நீ சொல்வது சத்தியமா? நீயே பார்த்தாயா? அந்தப் பாதை இருக்குமிடம் உனக்கு எப்படித் தெரிந்தது?..."

"என் அத்தை இன்று காலையில் அழைத்துப் போனபோது தெரிந்தது..."

"அவள் யார் உன் அத்தை?"

"முதன் மந்திரியின் கட்டளையின் பேரில் தாங்கள் அனுப்பிய பல்லக்கில் கோடிக் கரையிலிருந்து கொண்டு வரப் பட்டவள் தான், ஐயா! நாம் இதைப் பற்றி மேலும் இங்கே பேசிக் கொண்டே யிருக்கும் போது..."

"உண்மைதான்! நான் உடனே பெரிய பழுவூர் அரண்மனைக்குப் போய் வேண்டிய ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன். அதற்குள் நீ..."


"நான் இந்தப் பக்கத்து மூலையில் நின்று பார்த்துக் கொள்கிறேன்..."

"ஆகா! உன்னை நான் எப்படி நம்பு வது? நீ அந்தப் பாண்டிய நாட்டுச் சதி காரர்களுக்கு உடந்தையானவள் இல்லை என்பது என்ன நிச்சயம்? என்னைப் போக்குக் காட்டி ஏமாற்றிவிட்டு......"

"தளபதி அப்படியானால் என்னுடன் தாங்களும் வாருங்கள்! ஒரு தீவர்த்தி எடுத்துக் கொண்டு வாருங்கள்! இரண்டு பேருமாகப் போய்ப் பார்ப்போம்! போகும்போது எனக்குத் தெரிந்த மற்ற விவரங்களையும் சொல்கிறேன்..."

சின்னப் பழுவேட்டரையர் உடனே வாசற்பக்கம் சென்ற தமது வீரர்களில் சிலரை அழைத்து அவர்களிடம் ஏதோ சொன்னார். அவர்கள் பழுவூர் அரண் மனைக்குப் போகிறார்கள் என்று பூங் குழலி ஊகித்துக் கொண்டாள். வீரர் களில் ஒருவன் கையில் பிடித்திருந்த தீவர்த்தியைக் கோட்டைத் தளபதி வாங்கிக் கொண்டு வந்தார்.

"பெண்ணே! வழிகாட்டிச் செல்! நீ சொன்னதெல்லாம் உண்மைதானா என்று பார்த்துவிடுகிறேன்" என்றார் காலாந்தக கண்டர்.





அப்போதும் அவர் மனத்தில் பூங்குழலியைப் பற்றிச் சந்தேகம் தீரவில்லை. இந்தப் பெண் பொய்யும் புனைசுருட்டும் சொல்லித் தன்னை ஏமாற்றப் பார்க்கிறானோ, என்னமோ? சுரங்கப் பாதையைப் பற்றித் தன் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறானோ, என்னமோ? அதன் வழியாகக் கொடும்பாளூர் ஆள்களைக் கோட்டைக்குள் விடுவதற்கு இது ஒரு சூழ்ச்சியோ, என்னமோ!... அப்படியெல்லாம் தன்னை எளிதில் ஏமாற்றிவிட முடியாது. இவள் அத்தகைய உத்தேசத்துடன் தன்னை அழைத்துப் போனால் இவளுக்குச் சரியான தண்டனை விதிக்க வேண்டும். பெரிய பழுவேட்டரையரைப் போல் நான்கூட ஏமாந்து விடுவேனா. என்ன? எல்லாவற்றுக்கும் இவள் முன்னால் போகட்டும். சுரங்கப் பாதை இவளுக்குத் தெரியும் என்பது உண்மைதானா என்று முதலில் தெரிந்து கொள்ளலாம். பிறகு அங்கே சதிகாரர்கள் ஒளிந்திருப்பது உண்மைதானா என்று அறியலாம். அது உண்மையாயிருந்தால், கடவுளே! எத்தகைய ஆபத்து! நல்ல வேளையாக அதைத் தடுப்பதில் கஷ்டம் ஒன்றுமில்லை. பொந்தில் ஒளிந்திருக்கும் நரியைப் பிடிப்பது போல் பிடித்துக் கொன்றுவிடலாம்!...

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டு சின்னப் பழுவேட்டரையர் பூங்குழலிக்குப் பின்னால் நடந்தார். அவளுடைய நடையில் இருந்த வேகத்தைக் குறித்து அதிசயப் பட்டார்.

ஆம்; பூங்குழலியின் உள்ளப் பரபரப்பு அப்போது உச்ச நிலையை அடைந்திருந்தது. அதற்குத் தகுந்தாற்போல் அவளுடைய நடையும் துரிதமாயிருந்தது.

பூங்குழலியின் வாழ்க்கையில் சில காலமாகவே அபூர்வமான சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. ஆனால் அன்றைக்கு நிகழ்ந்தவை போல் அதற்கு முன் என்றும் நடந்ததில்லை.

அதிகாலையில் அவளைத் தூக்கத்திலிருந்து அத்தை தொட்டு எழுப்பினாள். அவர்கள் படுத்திருந்த அந்தப்புரத்தின் மேல் மச்சுப் பலகணியில் கோரமான முகம் ஒன்று தெரிந்தது. உடனே அது மறைந்தது. மந்தாகினி சத்தம் செய்யாமல் எழுந்து பூங்குழலியையும் அழைத்துக் கொண்டு மூடிக் கிடந்த சிற்ப மண்டபத்துக்குள்ளே சென்றாள். மேல் மச்சுப் பலகணியில் பார்த்த அதே பயங்கரமான முகம் இராவணனுடைய தலைகளுக்கும் அவன் கைகளினால் தாங்கிக் கொண்டிருந்த கைலயங்கிரிக்கும் நடுவில் ஒரு கணம் தெரிந்து மறைந்தது.

இருவரும் அச் சிலையின் அருகில் சென்று பார்த்தார்கள். இராவணன் தலைகளுக்கு இடையே சுரங்க வழி ஒன்று ஆரம்பமாகிச் செல்கிறது என்று பூங்குழலி அறிந்தாள். மந்தாகினி முதலிலும் பூங்குழலி அவளைத் தொடர்ந்தும் அச் சுரங்கப் பாதையில் இறங்கிச் சென்றார்கள். பூங்குழலிக்கு முதலில் கண்ணே தெரியவில்லை. அந்தகைய அந்தகாரம் சுரங்கப் பாதையில் குடி கொண்டிருந்தது. அத்தையின் கையைப் பிடித்துக் கொண்டு தட்டுத் தடுமாறித்தான் போனாள். பாதையிலிருந்து சில படிகள் ஏறி ஒரு மண்டபத்துக்குள் இருவரும் வந்து விட்டதாகத் தோன்றியது. அங்கேயும் இருளடர்ந்து தானிருந்தது. கையினால் தடவிப் பார்த்துக் கொண்டு தூண்களிலும் சுவர்களிலும் முட்டிக் கொள்ளாமல் போவதே கஷ்டமாயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் மேலே எங்கிருந்தோ சிறிய பலகணிகளின் வழியாகச் சொற்ப வெளிச்சம் வரத் தொடங்கியது. பொழுது நன்றாய்ப் புலர்ந்திருக்க வேண்டும் என்று பூங்குழலி ஊகித்தாள். அத்துடன் அவர்கள் சுற்றி அலைந்து கொண்டிருப்பது பொக்கிஷ நிலவறை என்பதையும் தெரிந்து கொண்டாள். ஆனால் மந்தாகினி அத்தை எந்த மனிதனைத் தேடிக் கொண்டு வந்தாளோ, அவன் அகப்படுவான் என்று தோன்றவில்லை. இருள் சூழ்ந்த அந்த நிலவறையில் ஒளிந்து கொள்வதற்கு எத்தனையோ இடங்கள். அவன் எங்கே ஒளிந்திருக்கிறானோ, என்னமோ? நாம் அவனைக் கண்டு பிடிப்பதற்கு முன்னால், அவன் நம்மைக் கண்டு பிடித்துப் பின்புறமாக வந்து குத்திக் கொன்றாலும் கொன்று விடலாம்; இந்த நிலவறையில் கேள்வி முறை ஒன்றும் இராது.

பூங்குழலி இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது மந்தாகினி அவளுடைய அபூர்வமான குரலில்,—மானிடக் குரல் என்றோ, பிராணியின் குரல் என்றோ கண்டு பிடிக்க முடியாத குரலில்,—கூச்சலிட்டாள். அதைத் தொடர்ந்து பீதி நிறைந்த ஒரு மனிதக் குரல் ஓலமிட்டது. நிழல் போன்ற உருவம் ஒன்று தட தட வென்று ஓடியது. பலகணியில் முகத்தைக் காட்டிய மனிதனாகத் தான் இருக்க வேண்டும் என்று பூங்குழலி தீர்மானித்துக் கொண்டாள். அத்தையின் குரலைக் கேட்டு அவன் பேயோ, பிசாசோ என்று பயந்து ஓடுகிறான் என்று பூங்குழலி அறிந்தாள். இந்த எண்ணம் அவளுக்குச் சிரிப்பை உண்டாக்கியது. சிறிது நேரத்துக்கு ஒரு முறை மீண்டும் மீண்டும் மந்தாகினி அத்தை அம்மாதிரி குரல் கொடுத்து அம் மனிதனை அங்குமிங்கும் தெறி கெட்டு ஓடி அலையும்படி செய்தாள். கடைசியாக அவன் ஓடிப்போய் மரக்கதவு ஒன்றில் மோதிக் கொண்டான். பிறகு, அக் கதவைத் தட தட வென்று தட்டினான். விட்டு விட்டு நாலைந்து தடவை தட்டினான். பின்னர் கதவு திறந்தது. திறந்த இடத்தில் பெண் ஒருத்தி நிற்பது தெரிந்தது. அவளிடம் அம் மனிதன் ஏதோ கூறினான். அந்தப் பெண் சிறிது தயங்கியதாகவும், அம் மனிதன் அவளைப் பயமுறுத்தியதாகவும் தோன்றியது. பிறகு அவள் திரும்பிப் போனாள். மனிதன் கதவினருகிலேயே நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் கையில் ஒரு விளக்குடன் வந்து சேர்ந்தாள். இருவரும் நிலவறைக்குள் நுழைந்தார்கள். மந்தாகினி பூங்குழலியையும் கையைப் பிடித்து அழைத்துச் சென்று ஒரு பெரிய தூணின் மறைவில் நின்று கொண்டாள். விளக்கு வெளிச்சத்தில் அந்த மனிதனுடைய முகத் தோற்றத்தை அவர்கள் நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அந்த மனிதனும் விளக்குக் கொண்டு வந்த பெண்ணும் நிலவறையின் உட்பகுதிக்குச் சென்றார்கள்.

"பேயாவது? பிசாசாவது? நன்றாகப் பீதி அடைந்து போயிருக்கிறாய்! இவ்வளவு பயந்தவன் இந்தமாதிரி காரியத்

துக்கு ஏன் வரவேண்டும்?'' என்று அந்தப் பெண் கேட்டது பூங்குழலியின் காதில் நன்றாக விழுந்தது. 'எந்த மாதிரி காரியம்' என்பது அவ்வளவு நன்றாகப் பூங்குழலிக்கு விளங்கவில்லை.

நிலவறைக்குள்ளே விளக்குடன் அவர்கள் மறைந்ததும் மந்தாகினி பூங்குழலியைக் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கொண்டுபோய்த் திறந்திருந்த கதவின் வழியாக வெளியேறினாள். நடை பாதையைக் குறுக்கே நடந்து கடந்து ஒரு பெரிய தோட்டத்துக்குள் அவர்கள் பிரவேசித்தார்கள். அங்கே ஏகாந்தமான ஓரிடத்தில் மந்தாகினி பூங்குழலியிடம் தான் சொல்ல வேண்டியதைச் சமிக்ஞை பாஷையினால் தெரிவித்தாள். "என்னுடைய அந்தியகாலம் நெருங்கி விட்டது. நான் கடைசியாகக் கண்ணை மூடுவதற்குள்ளே இளவரசனை ஒரு முறை பார்க்க வேண்டும். நீ போய் இச் செய்தியைச் சொல்லி அவனைக் கையோடு அழைத்து வரவேண்டும்'' என்பதுதான் அச்செய்தி.

பூங்குழலி அவளுடைய அத்தையிடம் கொண்டிருந்த அன்பு நாம் நன்கு அறிந்ததே. அம்மாதிரி சமயத்தில் அவளை விட்டு விட்டுப் போகவும் பூங்குழலிக்கு மனம் வரவில்லை; அவள் வார்த்தையைத் தட்டவும் இயலவில்லை. எனினும், அதே சமயத்தில் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்னும் எண்ணம் அவளை உடனே முடிவுக்கு வரும்படி செய்தது. அத்தையிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றாள். தோட்டத்தின் மதிள் ஏறிக் குதித்து அப்பால் சென்று தஞ்சை நகரின் கோட்டை வாசலையும் கடந்தாள். அங்கே ஆழ்வார்க்கடியானைச் சந்தித்தாள். அவனும் முதன் மந்திரியின் ஆக்ஞையினால் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்கே போவதாக அறிந்தாள். அந்த வீர வைஷ்ணவனுடைய உதவியினால் அவளுடைய பிரயாணமும் சௌகரியமாக நடந்தது.

அன்றைக்கு அதிர்ஷ்டம் நெடுகிலும் அவள் பக்கம் இருந்தது. குடந்தை ஜோதிடர் வீட்டின் வாசலில் இளைய பிராட்டியின் ரதத்தை அவர்கள் கண்டார்கள். இளவரசரைப் பற்றிக் குந்தவை தேவிக்கு ஏதேனும் செய்தி தெரிந்திருக்கலாம் என்று எண்ணி விசாரிப்பதற்காக ஜோதிடர் வீட்டில் நுழைந்தார்கள். அங்கே பெரிய பழுவேட்டரையரின் வாய் மொழியினால் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றி அறிய நேர்ந்தது. பொக்கிஷ நிலவறையில் ஒளிந்திருந்தவன் அந்தச் சதிகாரர்களில் ஒருவன்தான் என்பதைப் பூங்குழலி நிச்சயித்துக் கொண்டாள். அதே சமயத்தில், இளவரசருக்கும் சதிகாரர்களினால் அபாயம் ஏற்படலாம் என்று அறிந்த அவள் உள்ளம் வேதனைப்பட்டது. வானதி செய்த சபதம் அந்த வேதனைக்கு ஒரு பரிகாரமாயிருந்தது. இளவரசி வானதியைக் காப்பாற்றப் போன இடத்தில் இளவரசரையும் சந்திக்கலாயிற்று.

எல்லாவற்றையும் விட அவளுக்குத் திருப்தி அளித்த காரியம், தஞ்சாவூருக்குப் போவது பற்றி அவளுடைய யோசனையை இளவரசர் ஏற்றுக் கொண்டது தான். இலங்கையில் தம்மைத் தெரியப்படுத்திக் கொள்ளாமல் யானைப்பாகனைப் போல் யாத்திரை செய்வதுண்டு என்பதை அவள் அறிந்திருந்தாள். அங்கே சேனாதிபதியையும் படைவீரர்களையும் அவர் பிரிந்து தன்னை மட்டும் யானைமேல் ஏற்றிக் கொண்டு கடற் கரைக்கு விரைந்து வந்ததையும் அவள் மறந்து விடவில்லை. எனவே, இச்சமயமும், இளவரசர் அதே முறையைக் கடைப் பிடித்தால் நல்லது என்றும், அவர் தனியாகப் போனால் தஞ்சைக் கோட்டைக்குள் போக இயலாது என்றும், தன்னையும் வானதியையும் அழைத்துப் போனால் யானைப்பாகன் என்று எண்ணி விட்டு விடுவார்கள் என்றும் சொன்னாள்.

"சமுத்திர குமாரி! நல்ல யோசனை சொன்னாய்! ஒரு பெரிய ராஜ்யத்துக்கு முதன் மந்திரியாக இருக்க நீ தகுந்தவள்!'' என்று இளவரசர் கூறிய மொழிகளை நினைத்து நினைத்து அவள் உள்ளம் பூரித்தது.

ஆனால், இவ்விதம் அந்த நிமிஷம் வரையில் அவள் நினைத்தபடியே எல்லாம் நடந்திருந்தும் என்ன உபயோகம்? அவள் எதிர்பார்த்தபடி மந்தாகினி அத்தை சக்கரவர்த்தி படுத்திருந்த அறையில் இல்லை! அவளைப் பற்றி அங்கே யாரிடமும் விசாரிக்கவும் கூடவில்லை. "என்னுடைய இறுதிக்காலம் நெருங்கி விட்டது'' என்று அத்தை சமிக்ஞையினால் அறிவித்ததை எண்ணிய போதெல்லாம் பூங்குழலியின் நெஞ்சு பகீர் என்றது. இவ்வளவு சிரமம் எடுத்துச் சாதுர்யமாகப் பேசி இளவரசரை இங்கே அழைத்து வந்திருந்தும்

என்ன பயன்? அத்தையைக் காண வில்லையே என்று அவள் நெஞ்சு துடி துடித்தது. நிலவறையிலேயே இன்னும் இருக்கிறாளோ என்று தோன்றியது. ஒருவேளை அந்தப் பாதகச் சதிகாரனால் அங்கேயே கொல்லப்பட்டிருப்பாளோ என்று எண்ணியபோது அவள் நெஞ்சு பிளந்தே போயிற்று.

சுரங்கப்பாதை வழியாக நிலவறைக்குள் போய்ப் பார்க்க விரும்பினாள். ஆனால் அரண்மனையில் அப்போது இளவரசரின் வரவு காரணமாக ஒரே கோலாகலமாயிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகப் பெண்கள் போவதும் வருவதுமாயிருந்தார்கள். கூட்டம் கூட்டமாக வந்து சக்கரவர்த்தி படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்து விட்டுப்போன வண்ணமிருந்தார்கள். இதற்கிடையில் தான்மட்டும் அந்தப் பழைய சிற்ப மண்டபத்துக்குத் தனியாகப் போவதை யாராவது பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வார்கள்? அந்தச் சதிகாரன் ஒருவேளை இன்னமும் அங்கே இருந்தால், தான் அவனிடம் தனியாகப் போய் அகப்பட்டுக் கொள்வதும் உசிதமல்ல. எத்தனையோ நெஞ்சத் துணிவுள்ள பூங்குழலிக்கும் அந்த இருண்டடர்ந்த பொக்கிஷ நிலவறை சிறிது பயத்தை அளித்தது.

ஆகையினாலேயே சின்னப் பழுவேட்டரையரிடம் சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு போய் நிலவறையில் தேடிப் பார்க்கத் தீர்மானித்தாள்.

காலாந்தக கண்டரோடு வாதம் செய்து அவர் மனத்தைத் திருப்பி அழைத்துப் போவதற்குச் சிறிது அவகாசம்ஆகிவிட்டது. அதை நினைத்துத் தான் அவள் இப்போது மிக விரைவாக நடந்தாள். விரைவில் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று அவளுடைய உள்ளுணர்ச்சி கூறியது. அதனால் தனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் பாதகமில்லை, அத்தைக்கு ஒன்றும் நேரக் கூடாதென்று மனப்பூர்வமாக விரும்பினாள்.

சிற்ப மண்டபத்துக்குள் பிரவேசிக்கும் சமயத்தில், அரண்மனை மாடத்திலிருந்து ஏதோ கரிய நிழல் விழுவதுபோலிருந்தது; சுவர் ஓரமாக ஓர் உருவம் போவது போலவுமிருந்தது. அவை உண்மையா அல்லது பிரமையா என்று பார்த்துத் தெளிவதற்காகச் சற்று நின்றாள்.

"பெண்ணே! ஏன் நிற்கிறாய்? பொய் வெளிப்பட்டு விடுமே என்று பயப்படுகிறாயா?" என்று சின்னப் பழுவேட்டரையர் கூறியது காதில் விழுந்ததும், மேலே விரைந்து நடந்தாள்.

சிற்ப மண்டபத்துக்குள் சென்றதும் இராவணன் தலைகளுக்கும் கைகளுக்கும் இடையில் இருந்த துவார வாசலைப் பூங்குழலி சின்னப் பழுவேட்டரையருக்குச் சுட்டிக் காட்டினாள்.

"சரிதான்! இறங்கு முதலில்!" என்றார் கோட்டைத் தளபதி.

ஏனோ பூங்குழலிக்குத் தயக்கம் உண்டாயிற்று. அவள் உடம்பு நடுங்கிற்று.

அதே சமயத்தில், 'கிறீச்' என்று அமானுஷிகமான குரல் ஒன்று ஓலமிடும் சத்தம் கேட்டது.

அது தன்னுடைய அத்தை மந்தாகினியின் குரல் என்பதை உடனே உணர்ந்து கொண்டாள். அந்த ஓலக்குரல் அரண்மனைக்குள்ளே சக்கரவர்த்தி படுத்திருக்கும் அறையிலிருந்து வருகிறது என்பதையும் அறிந்தாள்.

உடனே அவளுடைய தயக்கம் தீர்ந்துவிட்டது. சின்னப் பழுவேட்டரையரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அரண்மனை அந்தப்புரத்தை நோக்கி விரைந்து ஓடினாள். மீண்டும் மீண்டும் அந்தப் பயங்கர ஓலக்குரல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

சக்கரவர்த்தி படுத்திருந்த அறைக்குள் அவள் பிரவேசித்தபோது, அங்கே தோன்றிய காட்சி அவள் உள்ளத்தில் ஒரு பெரிய சித்திரக் காட்சியைப் போல் பதிந்தது.

சக்கரவர்த்தி சாய்ந்து படுத்த வண்ணம் தமது அருமைக் குமாரன் அருள்மொழியின் கைகளைத் தமது கைகளால் பிடித்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருவருக்கும் முன்னால் மந்தாகினி அத்தை நின்று ஓலமிட்டாள். ஒரு பக்கத்தில் வானதியும் அவளை மருமகளாகப் பெறுவதற்கிருந்த மலையமான் மகளும் நின்று கொண்டிருந்தார்கள்.

எல்லாரும், வெறி கொண்டவள் போல் கூச்சலிட்ட மந்தாகினியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மேல் மண்டபத்தின் முகப்பிலிருந்து பாய்ந்து வந்த கூரிய வேலை அவர்களில் யாரும் கவனிக்கவில்லை.

பூங்குழலி தன் அத்தையை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்றாள்.




ஜூலை 10௳ முதல்
101 தியேட்டர்களில்
தென்னிந்தியா முழுவதும்
திரையிடப்படுகிறது
சொஸைட்டி பிக்சர்ஸாரின்
"உலகம்"
இது பெண்கள் படம்
இது ஆண்கள் படம்
இது குழந்தைகள் படம்
அதனால் இது ஒரு குடும்பப் படம்

உங்கள் ஸ்னாப்ஷாட்டுகளுக்கு உகந்த பிலிம் தேர்ந்தெடுப்பது எப்படி







மங்கலான வெளிச்சம் அல்லது துரிதமான செயல் படங்களுக்கு: 'கோடக்' சூப்பர்-XX தான் உகந்த பிலிம்—ஏனெனில் அது மிக துரிதமானது. தவிர எல்லா நிறங்களையும் கிரகிப்பது. செயற்கை வெளிச்சத்தில் படம் பிடிக்க பெரும்பாலான அமெச்சூர்கள் உலகிலுள்ள வேறெந்த பிலிமையும் விட இதையே அதிகமாக தேர்ந்தெடுக்கின்றனர்.



சூப்பர்-XX



சிறந்த பிரிண்டுகள் மற்றும் பெரிய என்லார்ஜ்மெண்டுகளுக்கு: 'கோடக்' ப்ளஸ்-X பிலிம் ஏற்றது. ஏறக்குறைய 'சூப்பர்-XX' பிலிமிற்குச் சமமான வேகமிருப்பதுடன், சிறுபேதங்களை அப்பட்டமாக சீர்படுத்தக்கூடிய இந்த பிலிம் தரும் நெகடிவ்களில் மிக நுண்ணியமான விவரச் சேர்க்கையும் சமமான ஒளி, நிழல்பதிவும் பெரிதளவில் காணப்படும்.



ப்ளஸ்-X



வெளியில் சாதாரண படங்கள் எடுக்க: 'கோடக்' வெரிக்ரோம் பிலிமை கேட்டு வாங்குங்கள் அபார எக்ஸ்போஷர் வசதியுடையதாதலால், பலவிதமான வெளிச்ச நிலைமைகளிலும் சிறப்பான படங்கள் எடுக்க அது உதவுகிறது தவிர ஒரே நிலையான லென்ஸ் மற்றும் ஷட்டர் வேகமுடைய எளிய காமிராக்களுக்கு விசேஷமானது.

வெரிக்ரோம்



'கோடக்' பிலிமில் நீங்கள் எப்பொழுதும் சிறப்பான படங்கள் தயாரிக்கமுடியும்

கோடக் லிட் (இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது) பம்பாய்-கல்கத்தா-டில்லி-மதராஸ்

K. 7641. (A)

வரவேற்கிறோம்

ஒன்றில் மூன்று

நான் கிராம ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியன். இந்தக் கிராமத்திலுள்ளவர்கள் பெரும்பாலும் கூலி வேலை செய்தும், சிலர் விவசாயம் செய்தும் வாழ்பவர்கள். பாடசாலையில் சில சமயங்களில் மாணவர்களின் வருகை குறைந்தும், சில சமயங்களில் மிகுந்தும் இருக்கும். சில குடும்பத்தினர் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்காமல் தங்கள் தொழிலுக்கு உதவியாகவும், ஆடுமாடு மேய்ப்பதற்கும், வீடுகளைப் பார்த்துக் கொள்ளவும் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். சிலர் 3, 4, 5 வகுப்புகள் படிக்கும் பிள்ளைகளைத் தங்கள் தொழிலுக்கு உதவிக்காக அடிக்கடி நிறுத்திக் கொள்ளுகிறார்கள். இதனால் அந்த வகுப்புகளில் தேக்கங்கள் அதிகமாகி தேர்ச்சி குறைந்தும் காணப்படும். சில பையன்கள் தாங்களாகவே வேறு வேலைக்குப் போய்விடுவார்கள். இதனால் பாடசாலையில் வியர்த்தம் அதிகரித்துள்ளது. ராஜாஜி அவர்களின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் இக் குறையை நிவர்த்தி செய்து, ஆரம்பக் கல்விக்குப் புத்துயிர் அளித்துள்ளது.

பாடசாலைகளின் பார்வைக் காலங்களில் காணப்படும் வருகை குறைவு, சென்ஸஸ்படி மாணவர்களைச் சேர்க்க முடியாத குறைவு, தேக்கம், வியர்த்தம் இவைகள் குறைந்து ஒரு ஆசிரியர் முப்பது பையன்களுக்கு நாற்பது நிமிஷத்தில் ஒரு பாடத்தைக் கற்பிக்கும் திட்டப்படி உள்ள பாடம் பத்து பையன்களுக்கு நாற்பது நிமிஷத்தில் மூன்று மடங்குக் கல்வியைக் கற்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் தேர்ச்சி அதிகப்பட்டு, தேக்கம் குறையும் என்பது திண்ணம். மூன்று மணி நேரம் பள்ளியில் படித்த பிறகு பெரும்பாகம் குடும்பத்தாருடன் பழகிக் குடும்பத் தொழிலையும் குடும்பக் கல்வியையும் தெரிந்து கொள்ளவும், இயற்கையான குழந்தையுள்ளம் படைத்த குழந்தைகள் இயற்கையான வெளியுலகக் காட்சிகளைக் கண்டு அனுபவித்து, கற்றுத் தெரிந்து கொள்ளவும் வகை செய்துள்ளது. ஏட்டுக் கல்வி, குடும்பப் படிப்பு, வெளியுலக அனுபவம் இவை மூன்றும் ஒருங்கே அமைந்துள்ளது இப்புதிய ஆரம்பக் கல்வித் திட்டம்.

அதிராம்பட்டணம் பி. பாலையன்
29—6—53 (ஆரம்ப ஆசிரியன்)

●

ஒரு வரப்பிரசாதம்

தலைசிறந்த அறிவாளியாகிய தமிழ் நாட்டுத் தனிப் பெருந் தலைவர் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் புகுத்தியுள்ள ஆரம்பகல்வித் திட்டம் நமது நாட்டிற்கு ஓர் வரப்பிரசாதமாகும். நான் ஆரம்பக் கல்வியில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்புடையவன். இத் திட்டத்தால் ஐந்து வகுப்புகளுடைய இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களையுடைய பாடசாலைகள் நல்ல தேர்ச்சி காட்ட முடியும் என்பது எனது நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலையில் கையாண்டதில் கண்ட பலன். ஒரே ஆசிரியர் ஏக காலத்தில் பல பிள்ளைகளைக் கொண்ட இரண்டு மூன்று வகுப்புகளை நடத்துவது மிகவும் சிரமமான காரியம். கற்பயனும் கிட்டாது. ஆனால் நமது ராஜாஜி அவர்கள் புகுத்தியுள்ள புதிய கல்வித் திட்டப்படி பாடசாலைகளை நடத்தினால் பிள்ளைகளைத் தனிப்பட்ட முறையில் கவனிக்க வசதி ஏற்படுவதுடன் அவர்களும் உற்சாகமாகக் காணப்படுகின்றனர்.

எனது நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலையில் முன்பு ஆஜரான மாணவர்களின் சராசரியைக் காட்டிலும் புதிய திட்டத்தின்படி ஆஜராகும் மாணவர்களின் சராசரி உயர்ந்திருக்கிறது.

ஆனால், இதுவரையில் வாரத்தில் ஐந்தரை நாட்களும், தினம் ஐந்து மணி நேரமும் வேலை செய்து வந்து, இப்பொழுது வாரத்தில் ஆறு நாட்களும் தினம் ஆறு மணி நேரமும் வேலை செய்து வரும் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தையும், சகாயத் தொகையையும் (Grant) உயர்த்த அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

ராயவரம்
29—6—53 ஆர். எஸ். சுப்பிரமணியன்
(ஸ்ரீ சாரதா ஆரம்பப் பாடசாலை தலைமை ஆசிரியர்.)

●

சந்தேகம் தீர்ந்தது!

நமது முதல் அமைச்சர் ராஜாஜி அவர்களால் இப்போது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை மிகக் கடினமான ஒரு திட்டம் என்றும், இத்திட்டத்தால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வெகு கஷ்டம் என்றும் எண்ணியிருந்தேன்.

8-6-53 முதல், புதிய கல்வித் திட்டப்படி எங்கள் ஆரம்பப் பள்ளியில் பாடம் நடத்தப்படுகிறது. இரண்டு ஆசிரியர்கள் வேலை செய்து வருகிறோம். இப்புதிய திட்டம் மாணவர்களுக்கு மாத்திரமல்ல ஆசிரியர்களுக்கும் மிக, மிக அனுகூலமான ஒரு திட்டம் என்பதைக் கடந்த இரண்டு வார அனுபவத்தில் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டேன். என்னிடமிருந்த வீண் சந்தேகங்களையும் தீர்த்துக் கொண்டேன்.

இப்பள்ளியில் இதற்குமுன் ஒரே நேரத்தில், தலைமை ஆசிரியர் 3, 4, 5-ம் வகுப்புகளையும், உதவி ஆசிரியர் 1, 2-ம் வகுப்புகளையும் வைத்துப் பாடம் நடத்தவேண்டியிருந்தது. ஒரு ஆசிரியர் பல வகுப்புகளை வைத்து நடத்தும்போது பல தொல்லைகள் இருந்தன. காலை மாலை இரண்டு நேரங்களிலும் பல வகுப்பு மாணவர்களையும் அடைத்து வைத்து, பாடம் கற்பிப்பது மிகக் கஷ்டமாக இருந்தது. ஒரு வகுப்பு மாணவர்களுக்குப் பாடம் நடத்தும்போது அடுத்த வகுப்பு மாணவர்களை ஆசிரியர் கவனிக்க முடியாதபடியால் அவர்கள் பேசிக்கொண்டோ, விளையாடிக் கொண்டோ, தொல்லை கொடுத்துக் கொண்டோ இருப்பார்கள். பாடசாலையில் ஒழுங்குத் தன்மையை நிலை நாட்டுவதற்கே ஆசிரியர் அதிக சிரமப்பட நேர்ந்தது.

இப்புதிய திட்டத்தில் அத்தொல்லைகளுக்குச் சிறிதும் இடமில்லாமல் போய் விட்டது. காலையில் ஒரு வகுப்புக்கும் மாலையில் ஒரு வகுப்புக்குமாகப் போதிக்க வசதியாக இருக்கிறது. ஆசிரியர் தன் முழு கவனத்தையும் ஒரு வகுப்பில் செலுத்திப் போதிக்க நேரிடுவதால், மாணவர்கள் அமைதியுடன், பாடங்களைக் கற்று வருகிறார்கள்.

இக்கிராமத்தில் புதிய திட்டத்துக்கு முதலில் கடுமையான எதிர்ப்பு இருந்தாலும், இத்திட்டத்

தின் பயனை நன்ருகத் தெரிந்துகொண்டு வரும் பெற்ருேர்கள், இப்போது ஆவலோடு வரவேற்கிருர்கள் என்றே சொல்லலாம்.

பல வருடங்களாக 60 அல்லது 70-க்கு மேல் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்காத இப்பாடசாலையில் இப்போது 100 மாணவர்கள் படிக்கிருர்கள். காலையில் 60 பேரும் மாலையில் 50 பேருமாகப் படிக்கப் புதிய திட்டம் வசதியளித்துள்ளது.

ஆசிரியர்கள் இதற்குமுன் வாரத்தில் ஐந்தரை நாள் மட்டும் வேலைசெய்து இப்போது ஆறு நாள் வேலை செய்ய வேண்டுமே என்று எண்ண இடமில்லை. ஏனெனில் மொத்த வேலை நாட்கள் முன்போலவே 220 ஆக இருப்பதால், கோடைவிடுமுறை போன்ற காலங்களில் அதிக நாள் லீவு விடுவதற்கு இப் புதிய திட்டம் மிகவும் வசதியாக இருக்கிறது.

செய்யூர் ஏ. என். இக்னேஷியஸ்
26—6—53 (போர்டு ஸ்கூல் தலைமை ஆசிரியர்)

●

அறிவு வளர வசதி யளிக்கிறது

சிறு குழந்தையின் மனம் 'சின்னஞ் சிறு பறவை போலவே'தான். அது சுதந்திரமாக வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். கூண்டு தங்கத்தினுல் ஆனது என்பதினுலாவது அல்லது கூண்டில் நல்ல தின்பண்டங்கள் கிடைக்கிறது என்ற காரணத்திலாவது பறவை கூண்டில் அடைபட விரும்புமா? 'மூன்று மணி நேரத்துக்குப் பிறகு கட்டவிழ்த்து விடுவது நல்லதா?' என்று கேட்கப்படும் கேள்வியே அபத்தமானது. 'கட்டவிழ்த்து' என்ற வார்த்தையே போதும்! மூன்று மணி நேரம் கட்டிப்போட்டது போதாதா! இதிலிருந்து சிலர் குழந்தைகளைக் கட்டிப் போடுகிருர்கள் என்பது அவர்கள் வாயாலேயே வெளிவருகிறதை எண்ணிஞல் நகைக்கத்தான் தோன்றுகிறது. குழந்தைகளைப் பலவந்தமாக அடைத்து வைத்து ஆசிரியருக்குத் தெரிந்த விஷயங்களையெல்லாம் சிறு மூளைகளில் திணித்துத் திணறடிக்க வைப்பதுதான் கல்வியா? இதனுல் பாலர்களின் உணர்ச்சி குறையும். ஐம்புலன்கள் மழுங்கும். அறிவு வளராது. உடலும் கெடும்.

வருங்கால பாரதம் தொழில் முறையில் முன்னேறப் போகிறதென்பதில் ஐயமில்லை. தொழிலாளர்களுக்கு எட்டுக் கணிதமும் செய்முறைப் பயிற்சியும் தேவை என்று கூறத் தேவையில்லை. சின்னஞ்சிறு குழந்தை வண்டிச் சக்கரத்தின் அமைப்பையும், வண்டிப் பட்டம் பொருத்தப்படும் விதத்தையும் உற்றுக் கவனித்தால், உயர் வகுப்புகளில் ஜியோமிதி (Geometry) கணிதத்திற்கு அது நல்ல அடிப்படை ஆகும். வட்டம், விட்டம், ஆரம், பரிதி, கோணம், மட்டம், சதுரம் இவைகள் போன்ற விஷயங்களை அவன் பிற்காலத்தில் உண்மையில் புரிந்து கொள்ள இக் கல்வி வசதி யளிக்கிறது.

கட்டுப்பாடில்லாமல், சுயமாக எதையும் ஆராயும் தன்மையும், சுதந்திர உணர்ச்சியும் கொண்ட பிற்கால ஆராய்ச்சித் துறை அறிஞர்களை உற்பத்திசெய்ய விதைக்கப்படும் வித்து தான் இந்த நவீன கல்வி முறை.

இக்கல்வி முறை விஸ்தரிக்கப்பட்டு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரப்போகும் நன்னுளை எதிர்பார்ப்போமாக!

வல்லம் ஆர். ராமச்சந்திர ராவ்
26-6-53 (போர்டு ஹைஸ்கூல் ஆசிரியர்)

மல்லிகா'வில் திருமணம்

ஜூலை 1-ட புதன்கிழமை மயிலாப்பூர் ஒரே கோலாகலமா யிருந்தது. காலை முதல் எல்லாச் சாலைகளும் 'மல்லிகா'வை நோக்கிச் சென்றன. அன்று ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களின் செல்வக் குமாரிக்குக் கலியாணம். பாக்கியசாலியான மணமகன், செய்யூர் ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் எம்.எல்.ஏ., அவர்களின் குமாரரான டாக்டர் சி. ஆர். சுந்தரராஜன். மயிலாப்பூரைச் சேர்ந்த பீமண்ண பேட்டையில் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களின் புதிய இல்லமாகிய 'மல்லிகா'வில் இந்தத் திருமணம் நடைபெற்றது.

கைலேயங்கிரியில் பார்வதி - பரமேசுவரர்களுக்குத் திருமணம் நடந்தபோது கூடியிருந்தகூட்டத்தைப்போல், இந்தக் கலியாண வைபவத்துக்குச் சென்னை மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிரமுகர்கள் திரண்டு வந்திருந்தபடியால், திருமணப் பந்தலில் இடநெருக்கடி மிக அதிகமா யிருந்தது. எந்தப் பக்கம் திரும்பினுலும் ஒரு ராஜா அல்லது ஒரு மந்திரி அல்லது ஒரு நீதிபதி அல்லது ஒரு எம். எல். ஏ., அல்லது ஒரு எம். பி., அல்லது ஒரு பத்திராதிபரின் பேரில்தான் மோதிக்கொள்ள வேண்டியதாக நேரிட்டது.

"பாரத தேவி" ஆசிரியரும் பாரத சேவக் சமாஜத்தின் சென்னைக் கிளைத் தலைவருமான ஸ்ரீ எம். பக்தவத்சலம் எவ்வளவு தூரம் இம்மாகாணத்தில் எல்லாருடைய அபிமானத்துக்கும் பாத்திரமாகி யிருக்கிருர் என்பது அன்று நன்கு தெரிய வந்தது.


இந்த மாகாணத்தில் மட்டும் என்ன? அகில இந்தியாவிலுங் கூடத்தான். ஜனுதிபதி ராஜேந்திர பிரஸாத், சென்னைக் கவர்னர் ஸ்ரீ பிரகாசா, லெப்டினண்ட் கவர்னர் ஸ்ரீ கே. சந்தானம், ராஜகுமாரி அமிருத கௌரி, கனம் ஜகஜீவன்ராம், கனம் வி. வி. கிரி, கனம் மகாவீர தியாகி, உத்தரப் பிரதேசக் கவர்னர் கே. எம். முன்ஷி, மத்திய பிரதேச கவர்னர் பட்டாபி சீதாராமய்யா ஆகியவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தவர்களில் சிலர் ஆவர்.

திருமணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தன்று மாலையில் நடந்த வரவேற்பில் ஸ்ரீமதி எம். எஸ். எஸ்.ஸின் இன்னிசைக் கச்சேரி நடந்தது.

மறு நாள் மாலை ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்களின் இல்லத்தில் நடந்த கிரகப் பிரவேச வரவேற்பில் ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யரின் சங்கீதக் கச்சேரி நடந்தது.

மணமக்களாகிய டாக்டர் சி. ஆர். சுந்தரராஜன் எம்.பி.பி.எஸ். அவர்களும், ஸ்ரீமதி ருக்மணி பி. ஏ., அவர்களும் இல் வாழ்க்கையில் சகல நலங்களையும் பெற்று நீடூழி வாழ்ந்திருக்க இறைவனைப் பிரார்த்திக்கிருேம்.



100% தூய்மையானது, சௌந்தர்ய தைலங்கள் சேர்ந்தது

பாமாலிவ் அழகை எடுத்துக் காட்டுகிறது

உங்கள் சருமத்தையும் சுத்தப்படுத்துகிறது



இதர உயர்ந்த சோப்களின் 'சாதாரண கவனிப்பை' விடவும் உங்கள் சருமத்துக்கு உகந்தது பாமாலிவ் அழகு முறை.

ஆம், இதர உயர்ந்த சோப்களின் 'சாதாரண கவனிப்பை' விடவும் உங்கள் சருமத்துக்கு பாமாலிவ் சோப் உகந்தது என்பது 1285 மாதர்களிடம் 36 நிபுணர்கள் நடத்திய சோதனையில் மறுக்க முடியாதபடி நிருபணமாகி யிருக்கிறது.

பாமாலிவ், அதன் அழகுமுறையைக் கையாளுங்கள். 100% தூய்மையான அதன் மெல்லிய, நறுமண நுரையை தினசரி மும்முறை 60 வினாடிகள் தேயுங்கள். 14 நாள், அல்லது அதற்குள்ளாகவே உங்கள் சருமம் மென்மையும் புதுமையும் பெறும்.

புதுமலரின் நறுமணம்
100% சுத்தமான
நுரைக்களஞ்சியம்
அதிக காலம்
உபயோகிக்கலாம்



பாமாலிவ் – அழகுக்கு அழகு செய்யும் அருமை சோப்

அதிசயக் கலாசாலை!

ஜெயமணி

கென்டகி என்பது அமெரிக்காவிலுள்ள நாற்பத்தெட்டு மாகாணங்களில் ஒன்று. அந்த மாகாணத்தைச் சேர்ந்த பெரியா என்ற நகரில் ஒரு கலாசாலை இருக்கிறது. அந்தக் கலாசாலையில் படிக்கும் மாணவர்களுக்குச் சம்பளம் கிடையாது; ஹாஸ்டல் செலவும் இல்லை; மாணவர்கள் செய்யும் வேலைகளைக் கொண்டே மேற்படி செலவுகள் எல்லாம் ஈடு செய்யப் படுகின்றன.

அமெரிக்காவில் மாணவர்கள் பல தொழில்களில் ஈடுபட்டு அவற்றில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் கலாசாலைச் சம்பளம் முதலிய செலவைச் செய்வது வெகு காலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது. இன்றைக்கும் இம்மாதிரி அமெரிக்காவின் மாணவர்களில் 100-க்கு 50-பேர் ஒழிந்த நேரத்தில் செய்யும் ஊதியத்தைக் கொண்டே கல்விச் செலவு செய்து கொள்கிறார்கள்.

எனினும், முற்றிலும் கலாசாலையிலேயே மாணவர்கள் செய்யும் தொழில்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நடைபெறுவது பெரியா கலாசாலை ஒன்றுதான்.

அக் கலாசாலையில் ஆயிரத்து ஐந்நூறு மாணவர், மாணவிகள் வாசிக்கிறார்கள். அவர்கள் சகலரும் பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

கலாசாலையில் உள்ள ஆசிரியர்களோ மாணவர்களோ எவரும் சிகரெட் பிடிக்கக் கூடாது. குடிக்கக் கூடாது. எனவே அந்த நகரில் மது பான வகைகளைக் காண்பதே அரிதாக இருக்கிறது. இணையற்ற செல்வச் செழுமையுடன் நவீன நாகரிகத்தில் திளைத்துக்கொண் டிருக்கும் அமெரிக்கா தேசத்தில் உள்ள கல்வி ஸ்தாபனத்தில் இத்தகைய நிபந்தனைகள் அமுலில் இருப்பது மிகுந்த ஆச்சரியம் அல்லவா?

செல்வந்தர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மேற்படி கலாசாலையில் அனுமதிக்கப்படுவதில்லை. ஏழைகளுக்கு மாத்திரமே அங்கு இடம் உண்டு.


அக் கலாசாலையின் அற்புதமான நிர்வாகத்தைப் பற்றிய விவரங்கள், "போஸ்ட்" (Saturday Evening Post) என்ற பிரபல அமெரிக்கப் பத்திரிகையின் மே மாதம் இரண்டாம் தேதி இதழில் சாங்கோபாங்கமாக வெளியாகி யிருக்கின்றன.

"பெரியா கலாசாலை மாணவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே அதன் நிர்வாகச்செலவைச் சமாளிக்கிறார்கள். மாணவர்களால் நடத்தப்படும் கலாசாலை மாட்டுப் பண்ணையிலிருந்து பால், வெண்ணெய் முதலியவை முப்பது மைல் தூரத்துக்கு உட்பட்டு வசிக்கும் ஜனங்களுக்கு விற்கப்படுகின்றன. மேற்படி மாணவர்கள் ரொட்டி சுட்டு விற்கிறார்கள். மற்றும் நெசவுத் தொழில், மரச் சாமான்கள் செய்தல் முதலிய தொழில்களிலும் ஏராளமான மாணவர்கள் ஈடுபட் டிருக்கிறார்கள். மாணவர்களாலேயே அந் நகர் நெருப்பணைக்கும் இலாக்கா நடத்தப் படுகிறது. மேற்படி நகரில் இருக்கும் மின்சார சக்தி நிலையமும் தண்ணீர் விநியோக நிலையமும் பெரியா கலாசாலைக்குச் சொந்தமானவை."

இவ் விவரங்கள் "போஸ்டு" பத்திரிகையில் வெளியாகியுள்ள கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

பெரியா கலாசாலையின் மேற்பார்வையில் பெரிய ஹோட்டல் இருக்கிறது. அதில் வேலை செய்வோர் யாவரும் மேற்படி கலாசாலையைச் சேர்ந்த மாணவர்கள்தான்.

மழைத் தண்ணீரைத் தேக்கி, குழாய்களின் வழியாக பெரியா நகர மக்களுக்கு விநி



அழகிய மண் பாத்திரங்கள் செய்யும் மாணவர்கள்



மரக் கட்டைகளிலிருந்தும் உலோகங்களிலிருந்தும் மாணவர்களால் பிரயோஜனகரமான பல சாதனங்கள் செய்யப்படுகின்றன.

யோகிப்பதன் மூலம் சென்ற வருஷத்தில் மேற்படி கலாசாலைக்கு இருபதினாயிரம் ரூபாய்க்குமேல் லாபம் கிடைத்ததாம். இதன் சம்பந்தமான அலுவல்கள் பெரியா கலாசாலை மாணவர்களாலேயே செய்யப்படுகின்றன.

படிப்பு, படிப்புச் செலவைச் சமாளிப்பதற்காக உழைப்பு இவ்விரண்டையும் தவிர பெரியா கலாசாலை மாணவர்கள் வேறெதையும் கண்டறியார்கள் என்று யாரும் குறை கூற முடியாது. ஏனெனில் அவர்கள் பல் வேறு வேடிக்கைகளிலும் விளையாட்டுகளிலும் கலந்து கொள்வதற்கான வசதிகளும் அக் கலாசாலையில் அளிக்கப்படுகின்றன.

நாடகம், நடனம், சங்கீதம், பலவிதப் பந்தய விளையாட்டுகள், உல்லாச யாத்திரை முதலிய பொழுது போக்குகளில் மாணவர்கள் இஷ்டப்படி கலந்து கொள்வதற்கும் அங்கு வசதிகள் இருக்கின்றன.

பெரியா கலாசாலைப் படிப்பைப் பூர்த்தி செய்து விட்டு வெளியே வரும் மாணவர்கள் எவரும் வாழ்க்கையில் தோல்வி அடைவதில்லை என்பது அமெரிக்காவில் பிரசித்தமான விஷயம். ஏனெனில் அங்கிருந்து வெளிவருவோர் தங்கள் படிப்பைப் பூர்த்தி செய்திருப்பதுடன், குறிப்பிட்ட ஒரு கைத் தொழிலிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

* * *

பெரியா கலாசாலையில் சேரும் மாணவர்களுக்கு நாலு முக்கியமான யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும்.

1. மாணவர்கள் படிப்பில் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

2. தேகத்தினால் உழைத்து வேலை செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். தேக உழைப்பு கௌரவத்துக்கு ஏற்றதல்ல என்று கருதும் மாணவர்களுக்கு அந்தக் கலாசாலையில் இடம் இல்லை.

3. சிறந்த ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

4. புத்தகங்கள் வாங்குவதற்கும் சம்பளம் கொடுப்பதற்கும் சக்தியற்ற ஏழைகளாக இருக்க வேண்டும்.

இந்த யோக்யதாம்சங்கள் இராத எவரும் அக்கலாசாலையில் சேருவது மிகவும் கடினமான காரியம்.

கலாசாலையைப் பெருக்கிச் சுத்தம் செய்வது முதல் சமையல் வேலை, குமாஸ்தா வேலை முதலிய சகல அலுவல்களும் மாணவர்களாலேயே செய்யப்படுகின்றன.

மாணவர்கள் முதல் வருஷம் மாத்திரம் சமையல் அறையில் வேலை செய்து தீர வேண்டும். பிறகு அவர்கள் தங்கள் திறமைக்கு உகந்த ஏதாவதொரு தொழிலைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். மாணவர்கள் தேக உழைப்பினால் செய்யக் கூடிய தொழில்கள் உள்ள அறுபத்திரண்டு இலாக்காக்கள் அந்தக் கலாசாலையில் இருக்கின்றன.

விவசாயத்தில் ஆர்வம் உடைய மாணவர்கள் விவசாயப் பொருள் உற்பத்தியிலோ அல்லது மாட்டுப் பண்ணையிலோ சேர்ந்து கொள்ளலாம். விஞ்ஞானத்தில் பற்றுதல் உள்ள மாணவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகளில் வேலை செய்யலாம்.

மேற்படி கலாசாலையில் வாசிக்கும் பெண்கள் கலாசாலைக்குச் சொந்தமான ஆஸ்பத்திரி

யில் வேலை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் இஷ்டம் போல் சௌவு அல்லது தையல் முதலிய பலவித அலுவல்களிலும் ஈடுபடுவதற்கு அங்கு வசதிகள் இருக்கின்றன.

பெரியா கலாசாலை மாணவர்களால் நெய்யப்படும் துணிகள், செய்யப்படும் நாற்காலி முதலிய மரச் சாதனங்கள் மிகவும் நேர்த்தியாக இருப்பதால், அவை மற்ற நகரங்களுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

பெரியா கலாசாலையில் மாணவர்கள் சுடும் ரொட்டியும் பிரசித்தி பெற்றது. அந்த ரொட்டியைச் சாப்பிட்ட ஒரு செல்வவந்தர் தாம் அதுவரையில் சுவையான அத்தகைய உயர்ந்த ரக ரொட்டி சாப்பிட்டதில்லை என்று கூறி அக்கலாசாலைக்கு ஐம்பதினாயிரம் டாலர் நன்கொடை அளித்தாராம்!

1885-ம் ஆண்டில் ஒரு சில மாணவர்களுடன் ஒரே அறையில் ஆரம்பமான பெரியா கலாசாலை இன்று ஆச்சரியகரமாக அபிவிருத்தியடைந்து அமெரிக்கா தேசம் எங்கும் புகழ் பெற்று விளங்குகிறது. இன்று அதற்குச் சொந்தமான கட்டிடங்கள் முதலியவற்றின் பெறுமானம் சுமார் இரண்டு கோடி டாலருக்குமேல் இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்!

இவ்வளவு பண வசதி மேற்படி கலாசாலைக்கு ஏற்பட்டிருந்தும், மாணவர்கள் உடல் உழைத்து வரும் ஊதியத்தைக் கொண்டே அவர்களுடைய கல்விச் செலவும் உணவு உடைச் செலவும் ஆக வேண்டும் என்னும் நிபந்தனை கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

குபேரச் செல்வம் படைத்த அமெரிக்கா தேசத்தில் இப்படியெல்லாம் மாணவர்களைப் பயில்வித்து வருகிறார்கள். ஆனால் ஏழை இந்தியா தேசத்திலோ நடுத்தர வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் காலேஜுக்கும் ஹாஸ்டலுக்குமாக மாதம் சராசரி ரூபாய் நூறு செலவு செய்து, தங்கள் பெற்றோர்களையும் குடும்பத்தையும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்குகிறார்கள். பிள்ளைகளைக் காலேஜில் படிக்க வைத்ததினாலேயே தந்தைமார்கள் பலர் 'ஓட்டாண்டி' ஆக நேருகிறது. இவ்வளவு தூரம் குடும்பத்தைச் சிரமப்படுத்திப் படித்து வெளிவரும் பி. ஏ. பட்டதாரிகளின் நிலைதான் என்ன? மனுவும் கையுமாகப் பல காலம் அலைந்த பிறகு வாழ்க்கை நடத்தப் போதாத சொற்ப சம்பளத்தில் ஒரு குமாஸ்தா அல்லது ஆசிரியர் வேலை!

ஆரம்பக் கல்வித் திட்டத்தில் ராஜாஜியினால் ஏற்பட்டிருக்கும் மாறுதலைப் போல், கல்லூரிப் படிப்பு முறையிலும் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டே தீரவேண்டும். இல்லாவிடில், வருங் காலத்தில் நம் நடுத்தர வகுப்பாரின் நிலை மிகப் பரிதாபமாக இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

2,500 வருஷங்களுக்கு

முன்னர் இந்தியாவில் புதைந்துபோன மொஹஞ்சதாரோ நகரத்தை சில நாட்களுக்கு முன் தோண்டும்போது, புராதன பெண்மணிகளின் அலங்கார சாமான்களுடன் மை கூண்டுகள், சாந்து டப்பிகள் முதலியனவும் அகப்பட்டன என்று இந்திய சர்க்கார் அறிக்கை கூறுகிறது:

பெண்மணிகள் தங்கள் எழிலை எடுத்துக்காட்ட கண்களுக்கு மை தீட்டிக் கொள்ளுகிறார்கள். நெற்றிக்குச் சாந்து (திலகம்) இட்டுக் கொள்ளுகிறார்கள். இந்தப் பழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பாரத தேசத்தில் மிக மிகப் பண்டைய காலத்திலிருந்தே அனுஷ்டிக்கப்பட்டு வரும் பழக்கமாகும்.

கண்களில் எதைப் போடுவதென்றாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமல்லவா? அதற்கு சாஸ்திரிய முறையில் 'ஐடெக்ஸ்' (EYETEX) என்ற பெயருடன் கண் மை வெகுகாலமாக தயாரிக்கப் பெற்று, அதைப் பெண்மணிகள் உபயோகித்து வருகிறார்கள். ஏன்? புருஷ மணிகள் கூடச் சிலர் உபயோகித்து வருகிறார்கள்.

தற்போது நெற்றியில் இட்டுக்கொள்ள நாங்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக (BINDHI) பிந்தி குங்கும சாந்து என்ற பெயருடன் அஜந்தா சித்திரங்களில் தீட்டப்பட்டிருக்கும் கவர்ச்சிகரமான ஆறு பிரசித்தி பெற்ற வர்ணங்களான ரோஸ், பச்சை, வயலட், ரோஸ்ரெட் (கடும் சிவப்பு), கருப்பு, மஜந்தா (வாடாமல்லி) முதலிய ஆறு தனித் தனிக் கலர்களில் மனதைக் கவரும் படியாக வாசனையுடன் பெண்மணிகளின் அழகுக்கென்றே பண்டையகால சாஸ்திரிய முறைப்படி தயாரித்து விற்பனை செய்கிறோம்.

இந்த பிந்தி சாந்தும் மிகவும் குணமுள்ளதும் பொதுமக்களின் ஆதரவையும் விருப்பத்தையும் பெற்றுள்ள (EYETEX) ஐடெக்ஸ் கண் மை, ரூபா டானிக் ஹேர் ஆயில் முதலியவைகள் தயாரிக்கும் அரவிந்த் லாபரட்டரீஸால் தயாரிக்கப் பட்டவை.

எல்லா ஊர்களிலும் — எல்லா கடைகளிலும் கிடைக்கும். மட்டமான போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்



தயாரித்து விநியோகிப்பவர்கள்:

அரவிந்த் லாபரட்டரீஸ்

ஆற்காட் ரோடு :: மதராஸ் - 16

O.P.

வட்ட மேஜை

இதன் முடிவு என்ன?

கடந்த மார்ச்சு மாதத்தில் ஆர். ராஜேந்திரன் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதினான். பரீக்ஷை ரிசல்ட் ஜூன் முதல் தேதி வெளி வந்ததில் அவன் நம்பர் காணப்படவில்லை. ஒரு வாரத்தில் பள்ளிக்கூடத்துக்குச் சர்டிபிகேட் புத்தகங்கள் வந்தன. ஆனால் அவன் சர்டிபிகேட் அதில் இல்லை. அதில் ஒரு கடிதத்தில் மார்க்குகள் இன்னும் வந்து சேராததால் மேற்படி சர்டிபிகேட் புத்தகம் அனுப்பவில்லையென இருந்தது. ஒருவாரம் கழித்துச் சென்னைக்கு என் உறவினர் மூலம் டி. பி. ஐ. ஆபீஸில் விசாரிக்குமாறு எழுதினேன். விசாரித்ததில் சர்டிபிகேட் அனுப்பிய பிறகு விவரம் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். மறுபடி இரண்டு வாரம் எவ்விதத் தகவலும் இல்லை. பின் டிரங்க் டெலிபோன் மூலம் டி. பி. ஐ. ஆபீஸில் கேட்டோம். இரண்டு தினங்களில் பள்ளிக்கூடத்துக்குத் தகவல் அனுப்புவதாகச் சொன்னார்கள். காலேஜ்கள் திறந்து விட்டன. எப்படி இனி மேல் அவன் காலேஜில் சேருவது! ரிசல்டு வெளி வந்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் இன்னும் எவ்வித பதிலுமில்லாவிட்டால் மாணவன் கதி என்ன ஆவது! இதை நினைத்து நினைத்து மாணவன் உருகி ஏற்கெனவே இளைத்து விட்டான்.

கீழக்கடுக்காய்
வலசை — பெ. அருச்சுன பாண்டியன்
3—7—53

●

தோட்டக் கலை

இந்த ஊரில் என் கணவர் சப் போஸ்ட் மாஸ்டராக வேலை பார்த்து வருகிறார். தபால் ஆபீஸ் முன்னால் ஒரு பொதுக் கிணறு இருக்கிறது. அதில் கழிவுத் தண்ணீர் தேங்கி நிற்பதற்காக ஒரு தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. அதில் தேங்கும் ஜலத்தை மேய்ச்சலிலிருந்து வரும் கால் நடைகள் குடித்து வரும் வழக்கம் உண்டு. தொட்டி நிறைந்து மீதி ஜலம் சுற்றுப்புறங்களில் ஓடிக் கிணற்றைச் சுற்றி ஒரே சகதியாக இருந்தது. நாங்கள் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. ஆபீஸ் முன்னால் முப்பது அடி நீளம் பத்தடி அகலம் உள்ள சிறிய நிலம்தான் முற்றமாக உள்ளது. நடை பாதை மட்டும் விட்டு மற்ற இடங்களில் செடிகள் வளர்த்தோம். கிணற்றுக் கழிவு ஜலத்தை மொண்டு ஊற்றி ஊற்றித் தோட்டம் வெகு அழகாக அமைந்து விட்டது.

தற்சமயம் எங்கள் குட்டித் தோட்டத்தில் பதின்மூன்று வாழைகளும், ஏழு கத்தரிச் செடிகளும், பத்து வெண்டைச் செடிகளும், ஆறு மிளகாய்ச் செடிகளும், அரைக்கீரை ஒரு பாத்தியும், தண்டங்கீரை பத்து செடிகளும், நாலு சீனி அவரைச் செடிகளும், புடலை இரண்டு, பீர்க்கு நான்கு, அவரை ஏழு, சுரை இரண்டு ஆக இத்தனை வகைப் படர் செடிகளும், மல்லிகைச் செடி ஒன்றும், கனகாம்பரச் செடி மூன்றும், வில்விச் செடி ஐந்தும், பப்பாளி கன்று மூன்றும், ஆமணக்குச் செடி இரண்டும், பொகைன்வில்லா (தான்பூ) மரம் இரண்டும் மிகவும் செழிப்பாக வளர்ந்து அழகாக நிற்கின்றன.

இந்தக் கோடை காலத்தில் இந்த ஊரில் அநேக கிணறுகள் வற்றி விட்டன. அந்தப் பொதுக் கிணற்றிலும் கொஞ்சம் ஜலம்தான் இருந்தது. நாங்கள் அந்தக் கழிவு ஜலத்தையும், குளிக்கும் ஜலத்தையும், மேலும் பாத்திரங்கள் கழுவும் ஜலத்தையும் வீணாக்காமல் தோட்டத்துக்குப் பாய்ச்சி, செடிகள் சிறிதும் வாடாமல் வளர்த்து விட்டோம். வாழைகள் அடுத்த மாதம் குலை போட்டுவிடும். கத்திரிச் செடிகள் வீட்டுக்கு வேண்டிய காய்களை இரண்டு மாதமாகத் தருகின்றன. மிளகாயும் விலை கொடுத்துக் கடையில் வாங்குவதே யில்லை. கீரை தினமும் கிடைக்கிறது. படர் செடிகள் இப்பொழுதுதான் பூவும் பிஞ்சுமாக நிற்கின்றன.

வசதி உள்ளவர்கள் (வீட்டில் கிணறு உள்ளவர்கள்) பிரயாசை எடுத்தால் வீட்டு முற்றத்தில் எத்தனை அழகாகக் காய்கறித்தோட்டம் போட்டு உணவுப் பற்றுக் குறையை நிவர்த்தி செய்யலாம்.

தோட்டக் கலை ஒரு சிறந்த, லாபகரமான பொழுது போக்கு. சோம்பலைத் தவிர்த்து உண்மையாகப் பிரயாசை எடுத்தால் ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் ஒவ்வொரு நந்தவனம் உற்பத்தியாகி விடும்.

மூதனூர்
29—6—53 — ஜி. ஜெயபால்

●

படித்தவர்கள் கடமை

“கன்னார் மகன் கலெக்டர் ஆகலாம், வண்ணார் மகன் வக்கீல் ஆகலாம்” என்ற கட்டுரையை 28—6—53 “கல்கி” இதழில் படித்தேன். மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருக்கும் இக் கட்டுரையைக் கன்னாரும், வண்ணாரும் படிக்கும்படியான நிலைமையில் அவர்கள் இல்லையே என்று வருத்தப்படுகிறேன். தாங்கள் எழுதி யிருக்கும் இக் கட்டுரையை என் போன்ற படித்தவர்கள், படித்துவிட்டுச் சும்மா இருந்து விடாமல், குழந்தைகள் உள்ள படிக்கத் தெரியாத பெற்றோர்களுக்குப் படித்துக் காண்பித்து அவர்களது குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும்படியான ஆர்வத்தை உண்டாக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நான் இப்பொழுது சென்னை மாகாணத்தில் இருந்திருந்தால் இக் கல்வி முறையைப் பரப்ப வீடு வீடாக ஏறி இறங்குவேன்.

மாதுங்கா-பம்பாய்
29—6—53 — ப. ரா. சீ. வாசன்

●

பரதவர் உள்ளத்தில் ராஜாஜி

“சென்ற சில தினங்களுக்கு முன் சென்னை கடலோரப் பகுதியில் வசிக்கும் பரதவர்கள், பறக்கோலா என்னும் மீன் பிடிக்கச் சென்று எதிர்பாராது ஏற்பட்ட சுழற்காற்றில் சிக்கி 'இனி நாம் கரை சேர முடியாது' என்று உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த எங்கள் பரிதாப நிலையை அறிந்தவுடன் கடற்படை, ஆகாயப் படை, சென்னை துறைமுக அதிகாரிகள் முதலியவர்களை அழைத்துத் தக்க சமயத்தில் உதவி செய்து சுமார் முந்நூற்றுக்கு மேற்பட்ட பரதவர்களின் உயிரைக் காப்பாற்றித் தந்த சென்னை முதன் மந்திரி ராஜாஜி அவர்களுக்கும் மேற்படி அதிகாரி

ளுக்கும் பரதவ மக்களின் சார்பாக பரதவ மகா ஜன சங்கம் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. குறிப்பாக மேற்படி விஷயத்தில் மிக்க சிரத்தையுடன் ஒவ்வொரு உயிரையும் காப்பாற்றியே தீரவேண்டும் என்கின்ற ஆர்வத்தோடு மேற்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு ஓர் உயிரும் சேதமாகாது காப்பாற்றிய பெருமை ராஜாஜி அவர்களையே சார்ந்தது. ஆகையால் அவருக்கு நன்றி கூற வார்த்தை கிடைக்காமையால் பரதவர்களாகிய நாங்கள் எங்கள் உள்ளக் கோயிலில் பதிய வைத்து வாழ்த்துகிறோம்" என்ற தீர்மானம் கடந்த 21-6-53 ஞாயிற்றுக் கிழமை நடந்த பரதவர் மகாஜன சங்க நிர்வாகக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

சென்னை
27-6-53

ஆர். டி. சுந்தரராஜன்
காரியதரிசி, பரதவர் மகா ஜன சங்கம்

●

உதவ வேண்டும்

நான் ஒரு காங்கிரஸ் தொண்டருடைய பெண். அரசாங்க உயர் நிலைப் பள்ளியில் மூன்றும் படிவம் படிக்கிறேன். என் அடுத்த சகோதரன் முதல் படிவத்தில் படிக்கிறான். அடுத்த இருவர்கள் முறையே 2, 3-ம் வகுப்புகளில் படிக்கிறார்கள்.

எனது தகப்பனார் காங்கிரஸ் சேவைக்காக இளமையிலேயே பள்ளியை விட்டார். வீட்டை விட்டு வெளியே இருந்து சொந்தத் தொழில் செய்து ஜீவனத்தை நடத்துவதுடன் இன்னும் காங்கிரஸிலேயே சேவை செய்து வருகிறார். அன்னிய ஆட்சிக் காலத்தில் அவர் அடைந்து வந்த சாதாரண சலுகைகளும் இப்பொழுது பறிக்கப் பட்டிருக்கின்றன.

இந்தக் கஷ்ட காலத்தில் குடும்பம் நடத்துவதே மிகவும் சிரமமாக இருக்கிறது. இந்நிலையில் எங்களைப் படிக்க வைக்க வேறு அரும்பாடு படுகிறார்.

காங்கிரஸ் கட்சி இவைகளைக் கவனித்து, தகுந்த மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய படிப்புக்கு ஸ்காலர்ஷிப் முதலிய உதவிகளைச் செய்ய வேண்டும். இவைகளைச் செய்யத் தக்க ஆற்றலைக் காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொடுக்க விநாயகரைப் பிரார்த்திக்கிறேன்.

தர்மபுரி
21—6—53

ஜெயம்

●

எங்கே போவது?

1953-ம் வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேர்வு பெறாத மாணவர்களை அவர்கள் படித்துக் கொண்டிருந்த பள்ளியிலேயே சேர்த்துக் கொள்ள முடியாது என்று தலைமை ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அதன்படியே செய்கிறார்கள். இது சர்க்காரின் கட்டளையா அல்லது தலைமைஆசிரியர்களின் விருப்பமா என்பது தெரியவில்லை. சர்க்காரின் சட்டமாக இருந்தால், பெயிலாகி விட்ட மாணவர்களின் கதி என்னவது என்பது தெரியவில்லை. மறுபடியும் அவர்கள் படிக்க வேண்டுமானால் என்ன செய்வது? வேறு பள்ளிகளுக்குச் சென்றாலும் எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள். இந்த நிலைமையில் அவர்கள் 'டுட்டோரியல் காலேஜு'களுக்குத்தான் போக வேண்டும். அப்படியே எல்லோரும் டுட்டோரியல் காலேஜுக்குப் போனாலும் இடமேது!



போஸில்
ஔஷத
ஆமணக்கெண்ணெய்
குழந்தைகள் அதை விரும்புகின்றனர்

தயாரிப்பவர்கள்:
பவநகர் ஆயில்
அண்டு கெமிகல்
இண்டஸ்ட்ரீஸ் லிட்., பவநகர்.

த. பெ. நெ. 1611, பம்பாய்-1

விநியோகஸ்தர்கள்:

ஜி. கே. ஸிண்டிகேட்
119, அரண்மனைக்காரத் தெரு, சென்னை

எஸ். தர்மராஜன்
40, நாயக்கர் புதுத் தெரு, மதுரை

நாயகம் மெடிகல் ஸ்டோர்ஸ்
தூத்துக்குடி

உலகம்
ஐஸ்வரியமும் காதலும் நிறைந்தது என்பதை சித்தரிக்கும் சிறந்த இரு நிகரற்ற நவீனங்கள்

"ராகினி" எழுதிய
விறுவிறுப்பு நகைப்பூட்டும் நகைச்சுவை
வேண்டியதில்லை
விலை அணா 6

"ராஜன்" எழுதிய
உள்ளத்தைக் கிள்ளும் உன்னத காதல் கற்பனை
நிலவில் நடந்தது
விலை அணா 8

தனிப்பிரதி வேண்டுவோர் ஸ்டாம்புகள் அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.
ஏஜண்டுகள் 25% கமிஷன் நீக்கி மணியார்டர் அனுப்பியோ அல்லது வி. பி. மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

சுந்தரி பதிப்பகம்
42, வைத்தியநாத முதலி தெரு, சென்னை-1

அதிலும் இந்த வருஷம் பரீக்ஷையில் அதிக மாணவர்கள் பெயிலாகி யிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் எங்கே போவது ? ஹெட் மாஸ்டர்கள் தங்கள் அதிகாரத்தை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய மாணவர்களை எடுத்துக்கொண்டு மற்ற மாணவர்களை ஏதாவது காரணம் கூறி எடுக்க மறுக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் படிக்கும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இது வெறுப்பை வளர்க்கிறது. 1952ம் வருஷத்தில் இவ்வளவு அதிகக் கண்டிப்பு இல்லை. ஆனால் 1953ல் இது நாடெங்கும் பரவி விட்டது. இது விஷயமாக சர்க்கார் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கருவலூர்
20—6—53

கே. ஆர். ராஜகோபால்

●

தொண்டர்களுக்கு உதவி

காங்கிரஸில் புதிதாக வந்து சேர்ந்த சில சுயநலவாதிகள் சுயநலமற்ற தொண்டர்களைக் காங்கிரஸிலிருந்து விலகி இருக்கும்படியான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி விட்டதுமன்றி, அவர்களுடைய கவனத்தைத் "தியாகிகள் நில மான்யத்தில் "திருப்பிவிட்டு அல்லல்களுக்கு உட்படுத்தியிருக்கிறார்கள்.

நிலமான்யத்தை அடைய, தியாகிகள் பெருந் தொகைகளைக் கடன் வாங்கியும், செலவுசெய்தும், மான்யத்தை அடையாமல் துக்கப் படுகிறார்கள். இன்னும் சிலர் மான்யம் அடைந்தும் அதில் நூற்றுக் கணக்காகவும், ஆயிரக் கணக்காகவும், விரயம் செய்து அதன் விளைவாகத் தகராறுகளையும், சண்டைகளையும், ஏச்சுப் பேச்சுக்களையும் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அப்படிச் செய்தும் மான்யத்தை அடைந்த பாடில்லை. இதன் விளைவாக, கிராமவாசிகள் தியாகிகளைக் (காங்கிரஸ்காரர்களை) கேவலமாகப் பேசவும், ஏசவும் கூடிய நிலைமைக்கு வந்து விட்டிருக்கிறது.

தொண்டர்கள் வாழவேண்டியது அவசியம். அவர்களுடைய கவனத்தை மறுபடியும் தொண்டில் திருப்ப வேண்டியது மிகவும் அவசியமாகியிருக்கிறது. தொண்டர்கள் கூட்டுறவு முறையில், சங்கங்களை நிர்மாணித்துக் கொண்டு பல வேலைகளைச் செய்யலாம்.

தற்சமயத்தில் சேவாளர்கள் நிலைமையைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. தியாகிகள் சங்கங்கள், கைத்தறித் துணிகளை வாங்கி இத்தொண்டர்கள் மூலம், வீட்டுக்கு வீடு சென்று விற்பனை செய்யலாம். இது இவர்களுக்குப் புதியதில்லை. அந்த நாட்களில், குழந்தைகள் முதல் கிழவர்கள் வரை எல்லோரும் ஒரே மூகமாக விற்று அனுபவம் பெற்றிருக்கிறார்கள்.

தற்காலம் எங்கு பார்த்தாலும், புதிய ரஸ்தாக்களில் பஸ் சர்வீஸ்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவைகளில் அநேகமாக, பணம் சம்பாதித்து மேன்மேலும் பணம் சேர்க்கும் பேராசைக்காரர்களே அதிகம் 'ரூட்'டுகளைப் பெற்று வருகிறார்கள். தவிரவும் காங்கிரசிலுள்ள சில பெரிய புள்ளிகளும், தங்களுடைய செல்வாக்கைக் கொண்டு சில ரூட்டுகளைப் பெற்றிருக்கிறார்கள். இதனால் பொது மக்களுடைய நன்மதிப்பைக் காங்கிரஸ் இழந்து கொண்டிருக்கிறது. தியாகிகள் சங்கங்கள் இது விஷயமாகவும், தகுந்த கூட்டுறவு முறையை அமைத்துக் கொண்டு, ஆங்காங்கே புது சர்வீஸ்களை நடத்த ஏற்பாடு செய்யலாம். இப்படிச் செய்வதால் இந்தச் சர்வீஸிலேயே வேலை செய்து தங்களுக்கு வேண்டிய தேவைகளுக்குச் சம்பாதித்துக் கொள்ள வசதி ஏற்படும். தவிரவும், இவர்களே மேற்படி சங்கங்களில் பங்குதாரர்களாக இருப்பதால், நேர்மையாயும் மேற்படி தொழில்கள் விருத்தி அடையும் வகையிலும் கண்டிப்பாக உழைத்துத் தொழிலை விருத்தி அடையச் செய்வார்கள் என்பது தெள்ளத் தெளிவு.

இதே முறையில் தையல் (டெய்லரிங்), பலசரக்கு, ஜவுளி, முதலிய கடைகளைத் தொண்டர்கள் சங்கமாகச் சேர்ந்து ஏற்படுத்தினால் நாடு முன்னேற வழியுண்டு.

காங்கிரஸ் தொண்டர்களில் மேற்படி எல்லாத் தொழில்களிலும் மிக ஆற்றல் படைத்த தியாகிகள் இருப்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே.

தியாகிகளும், காங்கிரஸ் தலைவர்களும், அரசாங்கத்தாரும், இவைகளைக் கவனித்துத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துப் பொது மக்களுக்கும் தொண்டர்களுக்கும், நாட்டிற்கும் நன்மையைச் செய்ய முன்வர வேண்டும்.

தர்மபுரி
24—6—53

எஸ். சுந்தரம்.

மட்டக்களப்பு தமிழ் விழா

மட்டக்களப்பில் நடந்த மகத்தான தமிழ் விழாவைப் பற்றி "கல்கி" ஜூன் மாதம் 21-ந் தேதி இதழில் இரண்டு பக்கம் படங்கள் வெளியிட்டிருந்தோம். அவற்றில் இரண்டாம் பக்கத்தில் உள்ள ஐந்தாவது எட்டாவது படங்களுக்கு விளக்கம் எழுதப்படவில்லை. திரு வி. நல்லையா எம். பி. (படம் 8) அவர்களின் பெரு முயற்சியினால் மட்டக்களப்புக்குச் சிறப்பைத்தரும் நகர மண்டபம் சுமார் ஆறு லட்ச ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டது. சென்ற மாதந்திலேதான் திரு நல்லையாவினால் திறந்து வைக்கப்பட்டது. தமிழ் விழாவும் ஸ்ரீ விபுலாநந்தர் உருவப் படத் திறப்பும் அந்த நகர மண்டபத்திலேதான் நடந்தன.

"சுதந்திரன்" பத்திரிகை உதவி ஆசிரியர் திரு எஸ். ராஜதுரை அவர்கள் (படம் 5) நமக்கு மட்டக்களப்பு விழா சம்பந்தமான முன் விவரங்களையும் படங்களையும் அனுப்பி உதவினார்கள்.

— ஆசிரியர்.





4. சந்திப்பு

"நண்பரே, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. பொன்னழகி யிருக்கும் தீவுக்கு நாம் பெரும் படையுடன் சென்று போர் தொடுத்து அவளைச் சிறைப் பிடித்து வந்து விட்டால் என்ன?" என்று குலசேகரன் கேட்டான்.

வேதநசர் சிரித்துக் கொண்டே, "இளவரசே, உங்கள் மனம் சதா பொன்னழகியிடம் ஈடுபட்டிருப்பதால் முடியுமா, முடியாதா என்பதைக் கூடச் சிந்திக்காமல் நீங்கள் இப்படி பேசுகிறீர்கள். பெரும் போருக்கு வேண்டிய பலமான மரக்கலங்களுடன் கடல் கடந்து அத்தனை தூரம் சைன்யங்களுடன் செல்லுவது என்பது முடியாத காரியம். அப்படியே சென்றாலும் எதிரியின் பலத்தை அறிந்து கொள்ளாமல் அவன் நாட்டுக்குச் சென்று போர் தொடுப்பது மிக மிகத் தவறான காரியம். அபாயமானதுங் கூட. நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன்!" என்றார்.

"ஐயா, அது என்ன யோசனை? சொல்லுங்கள்! சீக்கிரம் சொல்லுங்கள்!" என்று கேட்டுக் குலசேகரன் துடித்தான்.

"சொல்லுகிறேன் கேளுங்கள். நம் பொக்கிஷத்தில் உள்ள தங்கம் அவ்வளவையும் சேகரித்து, நாட்டில் உள்ள பொற்கொல்லர்களை யெல்லாம் வரவழைத்து, விதவிதமான பொருள்கள் செய்து மரகதத் தீவுக்கு எடுத்துச் செல்லுவோம். அந்த நாட்டுத் துறை முகத்தில் ஒரு அற்புதமான பொருட் காட்சியாக நமது கப்பலை நிறுத்துவோம். அந்தக் கப்பலையே நாம் விசேஷ முறையில் அலங்காரங்கள் செய்ய வேண்டும். பார்த்தவர்கள் பிரமித்து மெய் மறந்து போக வேண்டும்!"

"ஐயா, இதற்கும் பொன்னழகியைக் கொண்டு வருவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? விளங்கும்படி சொல்ல வேண்டும்!" என்றான் குலசேகரன்.

"இளவரசே, எல்லாம் தானாகவே விளங்கும். இந்த யோசனைக்குக் குறுக்கே தயவு செய்து தாங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். நான் சித்திரக் காரருடன் கலந்து நீண்ட நேரம் ஆலோசனை செய்து விட்டுத் தான் இந்த முடிவுக்கு வந்தேன். பொன்னழகியை நீங்கள் அடைய வேண்டுமானால் இந்த யோசனையை ஏற்று, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் துரிதமாக முடிக்க உத்தரவு விட வேண்டும்!"

"நண்பரே, எங்கள் குடும்பத்தின் ஆதி நண்பராகிய தங்களிடம் எனக்குப் பூரண

நம்பிக்கை இருக்கிறது. இதோ, மரகதத் தீவுக்குப் புறப்பட வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் செய்ய உத்தரவிடுகிறேன்!'' என்று கூறிக் குலசேகரன் தீவிரமாகக் கடற் பிரயாணத்துக்கு வேண்டியவைகளைக் கவனிக்கலானான்.

அரண்மனைப் பொக்கிஷத்தில் இருந்த தங்கக் கட்டிகளெல்லாம் சேகரிக்கப் பட்டன. நாடு நகரமெல்லாம் அறிக்கைகள் பறந்து, ஆயிரம் ஆயிரம் பொற் கொல்லர்கள் வந்து சேர்ந்தனர். இரவும் பகலும் ஓய்வு, ஒழிவு இல்லாமல் பொற் கொல்லர்கள் தட்டும் ''டக், டக்'' என்ற ஓசை கேட்டது.

வித விதமான தங்கத் தட்டு, தங்கக் கிண்ணம், தங்கக் குடம் இப்படி எத்தனை எத்தனையோ பொருள்கள், பார்ப்பவர் கண்களைப் பறிக்கும் வண்ணம் செய்து ஏராளமாகக் குவிக்கப் பட்டன. இந்தப் பொருள்களைக் கண்டவர்கள் ஆச்சரியத்தால் அசைவற்று நின்றனர்.

விசேஷமான அலங்காரங்களுடன் இருந்த பெரிய அற்புதமான கப்பலில் மேற்படி தங்கச் சாமான்களெல்லாம் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் ஒழுங்காக வைக்கப் பட்டன.

பிறகு, ஒரு நல்ல நாளில் ராஜ மரியாதைகளுடன் கப்பல் நகர்ந்தது. குலசேகரன், சிவநேசர், சித்திரக்காரன், மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கப்பல் வியாபாரிகளைப் போல் உடையணிந்து கொண்டு அந்தக் கப்பலில் பிரயாணமாயினர்.

ஒரு சிறு நகரம் போல் தோற்றமளித்த அந்தக் கப்பல் பல நாட்கள் பிரயாணம் செய்தது.

மரகதத் தீவு நெருங்கிவிட்டது கப்பல் என்பதற்கு அறிகுறியாக மிகவும் சுகமான குளிர்ந்த காற்று வீசியது. கப்பல் அந்த அழகிய நாட்டின் துறைமுகத்தில் போய் கம்பீரமாக நின்றது.

மக்கள் கூட்டம் கூட்டமாகப் போய் அந்தக் கப்பலில் இருந்த பொருட் காட்சியைப் பார்த்தனர். நாடு நகரமெல்லாம் அதன் புகழ் பரவியது.

கடைசியில் அரண்மனைக்கும் இந்தப் பொருட்காட்சியைப் பற்றிய சமாசாரம் எட்டியது. அரசன், ராஜகுமாரி பொன்னழகி, மற்றும் மந்திரி, சேனாபதி, ராணிமார்கள் இப்படி எல்லோரும் துறைமுகத்துக்கு வந்து அந்த அற்புதக் கப்பலில் ஏறித் தங்கத்தினால் செய்யப்பட்டிருந்த பொருள்களையெல்லாம் மிகவும் கவனமாகப் பார்க்கத் தொடங்கினர்.

அவர்களுள் பொன்னழகிதான் அதிசயத்தினால் திறந்தவாய் மூடாமல் பொருட் காட்சியைப் பார்த்த வண்ணமாயிருந்தாள். அவளைப் பார்த்த குலசேகரனுக்கு ஆச்சரியத்தினால் மூச்சே நின்று விடும் போல் இருந்தது. குலசேகரனின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டு பொன்னழகியும் அயர்ந்து தான் போனாள். இல்லையென்றால் அவள் ஏன் அப்படித் திறந்தவாய் மூடாமல் குலசேகரனையே விழுங்கிவிடுகிற மாதிரி பார்க்கப் போகிறாள்!

சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பிரம்மாண்டமான கப்பல் ஆடி அசைந்து நகரத் தொடங்கியது. கப்பல் புறப்பட்டு விட்டது என்பதை யாரும் உணரவில்லை. ஆனால் குலசேகரனுக்கு மட்டும் விஷயம் புரிந்துவிட்டது. சிவநேசரின் யோசனையும் இப்பொழுதுதான் அவனுக்கு விளங்கியது. அவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

கப்பல் வரவர வேகமாகப் போகத் தொடங்கியது. பொன்னழகியும் அவள் தாய் தந்தையர்களும் பொருட்காட்சியைப் பார்ப்பதிலேயே ஈடுபட்டிருந்தனர்.

சற்று நேரத்துக்கெல்லாம் மரகதத் தீவின் மன்னன், ''சித்திரக்காரரே, உங்கள் திட்டம் நல்லபடியாக நிறைவேறி விட்டது. இனி மேல் பொன்னழகி இந்தக் கப்பலை விட்டுக் கீழே இறங்க மாட்டாள். கல்யாணத்தைக் கூடக் கப்பலிலேயே வைத்துக் கொள்ள வேண்டியதுதான்!'' என்று கூறிக் கடகட வென்று சிரித்தான்.

உடனே சித்திரக்காரன், ''மன்னரே, இளவரசர் குலசேகரரும் இந்த உலகத்தையே மறந்து விட்டார். அவர் பொன்னழகியை அடையவேண்டும் என்னும் ஆசையினால், நாட்டில் உள்ள பொன்னையெல்லாம் திரட்டி அவளுக்குக் காணிக்கையாகக் கொடுத்து விட்டார். ஆகையினால், கல்யாணத்தை இந்தக் கம்பீரமான பெரிய கப்பலில் வைத்துக் கொள்வது பொருத்தமானதுதான்!'' என்றார்.

இதைக் கேட்ட பின்புதான் பொன்னழகியும் குலசேகரனும் இந்த உலக நினைவுக்கு வந்தனர்.

''இதுவரையில் என் குமாரி பொன்னழகிக்கு எந்தப் பொருளிடத்திலும், யாரிடத்திலும் விருப்பமே உண்டானதில்லை. இன்றுதான் அவள் முகத்தில் குதூகல உணர்ச்சி ததும்புகிறது!'' என்று கூறிவிட்டு, மரகதத் தீவின் மன்னர் பொன்னழகியின் பக்கம் திரும்பி, ''பொன்னழகி, உனக்குக் குலசேகரனை மணந்து கொள்ள விருப்பம்தானே!'' என்று அன்புடன் கேட்டார்.

பொன்னழகியின் முகத்தில் வீசிய புது ஒளி அவளுக்குக் குலசேகரனை மணந்து கொள்ளச் சம்மதம் என்பதைத் தெளிவாக்கியது. அதே சமயத்தில் குலசேகரன் முகமும் அதைத் தெரிவித்தது.

கப்பல் அவர்கள் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் குலசேகரனுக்கும் பொன்னழகிக்கும் அரண்மனையில் ஆடம்பரமாக விவாகம் நடந்தது. (முற்றும்)





பாரீஸ் லண்டன் கதம்பத்தில் சேர்ந்த மிட்டாய்கள் இந்தியாவி லேயே தலை சிறந்தவை. சுத்த மான சரக்குகளில் தயாரித்து, சுகாதாரமாக செல்லுலோஸ் சுற்றி காற்றுப் புகாத டப்பா வில் புது மணம் கெடாமல் அமைக்கப்பட்டுள்ளன.

சிறந்ததைப் பெற சிறிது
கூடக் கொடுப்பினும் தகும்,
ஆகவே வாங்குக.

Parry's பாரீஸ் லண்டன் கதம்பம்

தயாரிப்பாளர் :

தி ஈஸ்ட் இந்தியா டிஸ்டிலரீஸ் & ஷுகர் பாக்டரீஸ் லிட்., நெல்லிக்குப்பம், தென் இந்தியா

மானேஜிங் ஏஜண்ட்ஸ் :

பாரி & கோ., லிட்., சென்னை

க்ளோரோபில் சேர்ந்த கோலினோஸ்—

2* இருவழிகளில் வேலைசெய்கிறது!



*** ஆக்டிவ் க்ளோரோபில்—**

வாய் துர்நாற்றத்தை நீக்கி, சாதாரண ஈறுக் கோளாறு களைத் தடுத்து, பல் சிதைவை ஒழிக்கிறது!

*** ஊடுருவும் நுரை—**

வாய்க்கு புதுமணம் தந்து சமனகுணமுள்ள க்ளோரோபிலை உங்கள் பிரஷ் நுழையாத இடங்களுக்கும் எடுத்துச் செல்லுகிறது!

க்ளோரோபில் சேர்ந்த கோலினோஸ் அரை யங்குல அளவு எடுத்து பிரஷினால் பற்களைத் துலக்குங்கள். க்ஷணத்தில் அதன் நுரை வேலைசெய்வதை உணருவீர்கள் . . . சுத்தம் செய்கிறது, புதுமணம் ஊட்டுகிறது, இயற்கைப் பச்சை க்ளோரோபிலை வாயிற்குள் ஒவ்வொரு மூலைக்கும்—பிரஷ் நுழையமுடியாத இடங்களுக்குங்கூட—எடுத்துச்செல்லுகிறது.

ஆக்டிவ் க்ளோரோபில் மற்றும் ஊடுருவும் நுரை—இரண்டின் நற்பயனையும் அடையுங்கள்! இன்றே க்ளோரோபில் சேர்ந்த கோலினோஸ் ஒரு டியூப் வாங்குங்கள்—இருவகை செயல் திறனுள்ள பற்பசை அது. ஒருமுறை உபயோகித்தால், எப்பொழுதும் அதைத்தான் உபயோகிக்கத் தோன்றும்!

இரண்டு வழிகளில் சிக்கனம்கூட!



1 சிறிதளவே போதும், பெரிதும் பயன்படும்!

சாதாரண முறையில் பல் துலக்குவதில், க்ளோரோபில் சேர்ந்த கோலினோஸை அரையங்குல அளவு அதைப் போல் 400 மடங்கு பெருகி, வாயின் ஒவ்வொரு மூலைக்கும் ஊடுருவிச் செல்கிறது. ஆம், அரையங்குலமே தாராளமாகப் போதும். ஆகவே ஒரு டியூப் நெடுநாள் வரும்!




தவிர —

2 உங்கள் பணத்திற்கு ஏற்ற மிகப்பெரிய டியூப் அது!

இந்தியாவில் தயாரிப்பவர்கள்: ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.,
மாகனட் ஹவுஸ், பலார்ட் எஸ்டேட், பம்பாய் 1

டிரேட் மார்க் உடைமையாளர்கள்: ஒயிட்ஹால் பார்மசல் கம்பெனி, நியூ யார்க், N. Y. யு. எஸ். ஏ.

GK. 8267



ஏழையின் மகன்

நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர்

சீட்டுதான், மூன்று ஆண் பிள்ளைகளும் ஏழு பெண்களும் கொண்ட அந்தப் பெரிய குடும்பத்தின் மூத்த பிள்ளை. அவனுடைய தகப்பனார் சேஷு 'ரிவின்யூ' இலாக்காவில் குமாஸ்தாவாக இருந்து ஓய்வு பெற்றவர். அவர்கள் தமிழ் நாட்டில் ரொம்பவும் சீர்குலைந்த ஒரு கிராமத்தில் வசித்து வந்தார்கள். ஆம், அந்தக் கிராமத்திலிருந்தவர்களில் பெரும்பாலோர் உத்தியோக நிமித்தம் வடக்கே சென்னைக்கும் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் ஊரையே காலி செய்து கொண்டு போய் விட்டிருந்தனர். சொந்தக் கிராமம் அவர்களுடைய வயிற்றைக் கழுவக்கூடிய நிலையில் இல்லை.

அத்தகைய கிராமத்தில் நம் சேஷு வசித்து வந்தார். அவர் வசித்து வந்த வீட்டின் சொந்தக்காரர், அவர் மனைவி, அவர்களுடைய ஒரே மகன்— இத்தனை பேரும் காலரா நோய் கண்டு ஒரே நாளில் ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்டனர். ஆகவே, அந்தப் பாழ் வீட்டில், வாடகை யாருக்குக் கொடுப்பது என்று தெரியாமல், வசித்து வந்தார், நம் சேஷு. தமது சொற்ப பென்ஷன் வருமானத்தில் ஒருவாறு காலட்சேபம் நடத்தி வந்தார். அவரால் தமது சொற்ப வருவாயில், தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும் ஏற்பாடு செய்வதே சிரம சாத்தியமான காரியமாகப் போய் விட்டது என்றால் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதைப் பற்றியும், பெண்களுக்குக் காலா காலத்தில் கல்யாணம் செய்து வைப்பதைப் பற்றியும் நினைக்கவே வேண்டியதில்லை அல்லவா!

அவர் அடிக்கடி சொல்வார்: "வறுமை ரொம்பவும் கொடியது. அது மக்களின் திறமைகளையெல்லாம் ஒடுக்கி விடுகிறது; கண்யமான வாழ்க்கை நடத்த முடியாதபடி செய்துவிடுகிறது. இல்லை, இல்லை! அது அவர்களின் சுய கௌரவத்தையே இழக்கச் செய்து விடுகிறது. பிறரிடம் யாசிக்க வைத்துவிடுகிறது. அதிலும் மகா அற்பர்களிடம் எல்லாம் கை நீட்ட வைத்து விடுகிறது. எச்சிற் கையால் காக்காயை ஓட்ட மாட்டார்களாயினும் தங்களையும் மனிதன் என்று கை ஏந்திக் கொண்டு வந்து விட்டார்களே என்று வீண் தற்பெருமை கொள்ளும் அற்பர்களிடமெல்லாம் இந்த தரித்திரம் கைநீட்டச் செய்து விடுகிறது. இதனால் பரம தரித்திரனாக இருக்கும் பெரிய குடும்பஸ்தன் ஒருவனிடம் போய் 'நீ பிச்சை எடுக்காதே' என்று உபதேசம் பண்ணுவதில் பொருளில்லை. உயிர் வாழ்வுக்குப் போராடும்போது, கொள்கையாவது ஒன்றாவது! உலகம் தோன்றிய நாள் முதல் மக்கள் நான்கு விதமாகத்தான் உயிர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். முதல் வகை உழைத்து வேலை செய்து வாழ்பவர்கள். இரண்டாவது பிச்சையெடுத்து வாழ்பவர்கள். மிகவும் உயர்ந்த சந்நியாசி முதல் தெருப் பிச்சைக்காரன் வரை இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள்தான். மூன்றாவது மறம். கொலை, கொள்ளை முதலியவைகளில் ஈடுபட்டு உயிர் வாழ முயன்றிருக்கின்றனர். உலகத்தை வென்று முடி சூடிய மாபெரும் சக்கரவர்த்திகள் முதல் ஜோபடி திருடர்கள் வரை இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம். கடைசியாக அதிர்ஷ்ட வசத்தினால் அல்லது ஏதோ ஏதேச்சையாக வசதி ஏற்பட்டுச் சுகமாக வாழ்கிறவர்கள். இந்தக் கோஷ்டிகள் தவிர மேற்கண்ட நான்கு முறைகளினாலும் சௌகரியமாக வாழ்க்கை நடத்துபவர்களும் உண்டு. அவர்களைப் பற்றிய பேச்சு இங்கே வேண்டாம்.

"ஆனால் நான் வேலையையும் யாசகத்தையும் சேர்த்துக் கொண்டு உயிர் வாழப் பார்க்கிறேன். அதிர்ஷ்ட தேவதையோ நான் இருக்கும் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மறுக்கிறாள். மனிதனுக்கு

ஓரளவு குறைந்த பக்ஷ செல்வமாகிலும் அவசியம் வேண்டும். அப்பொழுதுதான் மனிதனின் ஆத்ம வளர்ச்சிக்கு இடமுண்டு. இல்லையேல் மனிதன் உடலாலும் உள்ளத்தாலும் ஒழுக்கத்தாலும் நசித்துப் போவான். பாத பூஜைக்கென்றும், அதற்கென்றும் இதற்கென்றும் ஏராளமான பணம் வசூலித்துத் தத்துவ போதனைகள் புரியும் தத்துவாசிரியர்களும், ஜகத் குருக்களும் எவ்வளவு கத்தித் தர்மோபதேசம் செய்தாலும் புண்யமில்லை."

இப்படிப் பேசும் ஸ்ரீமான் சேஷு தம் மூத்த பிள்ளை கிட்டுவின் மேல் படிப்புக்காகப் பட்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. ஸ்காலர்ஷிப் பெறவும், பண உதவி பெறவும் பிச்சை யெடுக்க வேண்டியிருந்தது. கெஞ்சிக் கூத்தாடவும் வேண்டியிருந்தது. கடைசியில் எப்படியோ எம். ஏ. வரைக்கும் படிக்க வைத்து விட்டார். பையன் ரொம்பவும் குட்டிகையான பையன்; முதல் வகுப்பில் தேறி விட்டான். பிறகு எப். ஸி. எஸ். பரீட்சைக்குப் போனான். அதிலும் தேறி விட்டான். அரசாங்கத்தில் நல்ல வருமானமுள்ள உத்தியோகம் கிடைத்தது. பிறகு தன் சொந்த முயற்சியாலும், உண்மையான உழைப்பின் பயனாகவும், திறமையின் காரணமாகவும், யோக்யப் பொறுப்பினாலும் உத்தியோகம் மேலே மேலே உயர்ந்தது. மேலதிகாரிகளின் செல்வாக்கும் மேல் அதிகாரிகளின் நன்மதிப்பும் மரியாதையும் பெற்றான். நல்ல வரதட்சிணையுடன் வந்த லலிதா என்ற அழகிய மங்கையை மணந்து கொண்டான்.

இப்போது கிட்டுவுக்கு, உத்தியோகத்தில் பதவி உயர உயரத் தான் பிறந்த குடும்பத்தைப் பற்றிய வெட்கமும் அவமானமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. வரும் வருமானத்தில் ஒரு பகுதி தனது பெற்றோர்களுக்கென்றும், தம்பிகளுக்கென்றும் தங்கைகளுக்கென்றும் ஒதுக்க வேண்டியிருப்பதைக் குறித்து வெறுப்படைந்தான். அவனுடைய தம்பிகளின் படிப்புக்காகக் கிட்டுவினிடமிருந்து சொற்ப உதவி பெற்றுப் போக, அவன் தகப்பனார் பல தடவை அவன் வீட்டை நோக்கி நடக்க வேண்டியிருந்தது!

இப்படி அவர் ஒரு நாள் வந்தபோதுதான் கிட்டு, "அப்பா! தம்பிகளின் படிப்பை நிறுத்தி விட்டு, அவர்களுக்குச் சுருக்கெழுத்து எழுதும் குமாஸ்தா வேலையோ, கடைகளில் கணக்கெழுதும் வேலையோ, ஹோட்டல் ஸர்வர் வேலையோ தேடித் தரக் கூடாதோ?" என்று கேட்டான்.

"அந்தக் காரியத்தை உனக்குக் கூடத்தான் செய்திருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. அதன் பலன் நீ இன்று இந்த உயர்ந்த பதவியிலிருக்கிறாய். என்னை இந்தக் கேள்வி கேட்கிறாய்!" என்றார்.

கிட்டு, "பரீட்சைகளில் தவறிப் போகும் இந்தப் பையன்களுக்கு நான் எத்தனை தடவை பணம் கொடுத்துக் கொண்டிருப்பது!" என்றான்.

சேஷு, "அவர்கள் ஏன் பரீட்சையில் தேறுவதில்லை, தெரியுமா! வீட்டுக்கு வேண்டிய தண்ணீரை இழுத்துக் கொட்டுவது, கடைத் தெருவுக்குப் போய்ச் சாமான்கள் வாங்கி வருவது போன்ற எத்தனையோ சில்லறை வேலைகளை வேலைக்காரர்கள் இல்லாத நம் வீட்டில் நாள் முழுதும் அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நீ அவர்களை அழைத்து வந்து இங்கே வைத்துக் கொண்டாயானால் அவர்கள் தங்கள் நேரம் முழுவதையும் படிப்பிலேயே செலவழிக்க முடியும். பின்னர் அவர்கள் பரீட்சையில் தவறிப் போகமாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். அவர்களும் உன்னுடைய தம்பிகள்தான்; உனக்கிருக்கும் மூளை அவர்களுக்கும் இருக்கிறது" என்றார்.

இதைக் கேட்டானோ இல்லையோ கிட்டு அவசர அவசரமாக "வேண்டாம், வேண்டாம்! அவர்களை இங்கே அழைத்து வந்து விடாதீர்கள். பட்டினியால் மெலிந்து நிற்கும் இந்தப் பையன்களைப் பார்த்து என் நண்பர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்!" என்றான்.

சேஷு, "உன் நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் இம்மாதிரியான பட்டினிப் பட்டாளமான நெருங்கிய உறவினர்கள் எங்கேயாகிலும் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் குரங்கு குட்டிகளைத் தன் வயிற்றில் கட்டிக் காப்பது போல், பட்டினிப் பட்டாளமாக இருக்கும் என் குழந்தைகளை நான் கட்டிக் காத்து, உன்னிடம் அவர்களுக்காக யாசகத்துக்கு வரவில்லை என்றால் இப்பொழுது நீ 'நண்பர்கள்' என்று கொண்டாடுகிறாயே அவர்கள் உன் தலைவாசலை மிதித்துக்கூட இருக்க மாட்டார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்றார்.

கிட்டு தன் உதடுகளைக் கடித்துக் கொண்டான். "என் தம்பிகள் சம்பந்தமாக என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறீர்கள்!" என்று கேட்டான்.

"உனக்காக, உன் படிப்புக்காகப் பிச்சை யெடுத்தேனல்லவா, அதைப் போல் அவர்களுக்காகவும் பிச்சையெடுக்கத்தான் போகிறேன். ஆனால் இந்தத் தடவை ஒரு வித்தியாசம். நான் உனக்காக ஊர்க்காரர்களை, அண்டையில் அயலில், முன்பின் தெரியாதவர்களைப் பிச்சை கேட்டேன். ஆனால் இப்பொழுது அப்படியல்ல. பிறர் எவரிடமும் கேட்கப் போவதில்லை. என் மகனிடமே தான் கையை நீட்டப் போகிறேன். உன்னிடமே தான் பிச்சை கேட்கப் போகிறேன்" என்றார்.

"நீங்கள் நன்றாகக்கூட வேஷ்டி சட்டை போட்டுக் கொண்டு வருவதில்லை. அதுவும் என் நண்பர்கள் வரும் சமயத்தில் இந்தக் கோலத்தில் வந்து சேர்ந்தீர்களானால், நீங்கள் தான் என் அப்பா என்று சொல்லிக் கொள்ளக்கூடச் சங்கோசமாக இருக்கிறது" என்றான்.


"அது ஏனென்றால் நீ கொடுக்கும் பணம், எங்கள் உயிர்களை எங்கள் உடலுடன் ஒட்டி வைத்துக் கொள்ளும் அளவிற்குக் கூடப் போதுமானதாக இல்லை. இந்த நிலையில் சட்டைக்கும் வேஷ்டிக்கும் பணத்தைச் செலவழித்துக் கொண்டிருப்பேனா! என்னைப் போன்ற கிழவனுக்கு ஒரு கோவணமே போதுமானது" என்றார் சேஷு.

சேஷு வழக்கம் போல் ஒருநாள் கிட்டுவின் வீட்டுக்கு வந்திருந்தார். அன்று கலெக்டர், அவர் மனைவி, மகள் மூன்று பேரும் கிட்டுவின் வீட்டுக்கு வந்திருந்தனர். சேஷு வந்திருந்த சமயம் கிட்டு அவன் மனைவி, கலெக்டர் குடும்பத்தினர் எல்லோருமாக டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சமயத்தில் சேஷு, யார் வந்திருக்கிறார்கள் என்று பார்க்க எட்டிப் பார்த்தார். கலெக்டர், "யார் இந்தக் கிழவர்!" என்று கேட்டார்.

கிட்டு முகம் அவமானத்தால் சிவந்து விட்டது. "ஓ, அவரா! அவர் ஒரு புரோகிதர்" என்றான்.

"அப்பாவும் கூடத்தான்" என்று சொல்லிக் கொண்டே நன்றாக உள்ளே வந்து விட்டார் சேஷு. இதைக் கேட்ட கிட்டு பெரிதும் கலவர

விடவில்லை. முன்போலவே அடிக்கடி வரலானார். அது மட்டுமல்ல. கிட்டுவினிடமே, "கடன் கொடுத்தவனோ பிச்சைக்காரனோ கடுமையான பேச்சும், ஒரேயடியாக மறுத்துச் சொல்வதையும் கேட்டு மனம் தளரக்கூடாது; காரியத்திலிருந்து நழுவி விடக்கூடாது. தர்மம் செய்பவர்களுக்கும், கடன் பட்டவர்களுக்கும் இம்மாதிரியான சுபாவம் இயற்கையாக இருப்பதுண்டு என்று அறிந்து தொடர்ந்து வர வேண்டும்; கேட்க வேண்டும். பார்க்கப் போனால், நீ கடுமையாக நடந்து கொண்டாயே, அதை விடக் கேவலமான கோப மொழிகளையும், கடுகடுப்பு நடத்தையையும் என் எஜமானர்



மடைத்து விட்டான். கலெக்டருக்கும், அவர் குடும்பத்தினருக்கும் இது ஒரு வேடிக்கையாக இருந்தது.

வந்த விருந்தினர் சென்ற பிறகு, கிட்டு தன் தந்தையை எட்டிப் பார்த்ததற்காகவும், நடுவில் குறுக்கிட்டுப் பேசியதற்காகவும் ரொம்பவும் கடிந்து கொண்டான். "இந்த ஒரு சின்னத் தவறு செய்து, என் மனச் சாந்தியையே குலைத்து விட்டீர்கள்" என்றான்.

"இதற்கு முந்தி செய்த ஒரு தவறினால் என் மனச் சாந்தியை இழந்து விட்டேன்" என்றார் சேஷு.

கிட்டுவுக்கு அசாத்திய கோபம் வந்து விட்டது. "இந்த வீட்டை விட்டு இந்த நிமிஷமே வெளியே போங்கள்!" என்று இரைந்தான்.

ஆனால் லலிதா அவனைச் சமாதானப் படுத்தினாள். "இந்த மாதிரி செய்தால் உங்கள் நண்பர்களின் மதிப்பில் சற்றும் உயரமாட்டீர்கள். அவர்களுடைய கேலிக்கும் சிரிப்புக்கும் விஷயம் கொடுத்தாற்போல்தான் ஆகும். உங்கள் வேலையில் எவ்வளவோ தயாள சிந்தையுடனும் யோக்யமாகவும் இருந்து வந்திருக்கிறீர்கள். உங்கள் அப்பா விஷயத்தில் மட்டும் இந்தப் படபடப்பு ஏன்?" என்றாள்.

அவள் கூறிய மொழிகளில் நியாயம் இருப்பதைக் கண்டான் கிட்டு. "நீ சொல்வது ரொம்ப சரி. அவர் வரும்பொழுது, நாம் வேறு யாரையும் அழைக்கக் கூடாது. அதுதான் வழி" என்றான்.

இந்தச் சம்பவத்தின் பயனாக சேஷு தன் பிள்ளையின் வீட்டுக்கு வருவதை ஒன்றும் நிறுத்தி

களிடமிருந்தும் வேற்று மனிதர்களிடமிருந்தும் பெற்றிருக்கிறேன். ஆனால் என் பிள்ளையிடமே இந்தமாதிரி வார்த்தைகள் கேட்க நேரும் என்று நான் சற்றும் எதிர் பார்க்கவில்லை என்பதைத் தவிர இதில் புதிது ஒன்றுமில்லை" என்றார்.

ஒருநாள் கிட்டு தன் கடைசித் தங்கையின் கல்யாணத்துக்காக ஐந்நூறு ரூபாய் கொடுத்தான். கொடுக்கும்போது, "அப்பா! கஷ்டப் பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பிரியும்போது மனசு என்ன பாடுபடும் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஆமாம்; எனக்கும் தெரியும். நீ இப்பொழுது ஐந்து ரூபாய் நோட்டுகளை எண்ணுவதுபோல், நான் கால் காலணாவாக எண்ணி அவற்றைப் பிரித்திருக்கிறேன்" என்றார் சேஷு.

"இப்பொழுது நான் மூன்றாவது கல்யாணத்துக்குப் பணம் கொடுத்திருக்கிறேன். என் கல்யா

ணத்தின்போது வந்த ரூபாய் மூவாயிரத்தையும் என் தங்கைகளின் கல்யாணத்திற்கு என்று எடுத்துக் கொண்டு விட்டீர்கள்......" என்றான்.

"ஆமாம். அதைப் பற்றி எனக்குச் சற்றும் வெட்கமில்லை. பிச்சைக்காரனுக்கு மானம் வெட்கம் வைத்துக் கொண்டு சாத்தியப் படுமா! தேவை என்று வரும்போது எந்தச் சட்டம் என்ன செய்ய முடியும்! பாவம், அந்தப் பெண்களுக்குப் படிப்புச் சொல்லித் தரவில்லை, போகட்டும். அவர்களுக்குக் கல்யாணமாகிலும் நான் செய்துவைக்க வேண்டாமா!"

இதைக் கேட்டபோது கிட்டுவுக்கு ஒரு பக்கம் கோபமும் மற்றொரு பக்கம் வியப்பும் ஏற்படத்தான் செய்தது. "நீங்கள் பிச்சை கேட்பதிலும் ஒரு கெட்டிக்காரத்தனம் இருக்கிறதப்பா!" என்றான் கிட்டு.

"ஆமாம்; உண்மைதான். இல்லையென்றால் ஒரு ஏழை குமாஸ்தாவாகிய நான் உன்னை மாதம் ஆயிரத்தைந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் உத்தியோகஸ்தனாக எப்படிச் செய்திருக்க முடியும்!"

"நானும் திறமைசாலி என்பதை மறந்து விடுகிறீர்களே, அப்பா!" என்றான் கிட்டு.

"இல்லை; நான் அதை மறக்கவில்லை. ஆனால் பத்தரை மாற்றுத் தங்கம் என்றாலும், சுரங்கத்திலிருந்து வெட்டித்தான் எடுக்க வேண்டியிருக்கிறது. மாபெரும் மேதாவியாயினும், பத்து மாதம் சுமந்துதான் பெற வேண்டியிருக்கிறது!" என்றார் சேஷு.

*

கிட்டுவின் மகன் சேஷசாயி தன் தந்தையை விடக் கெட்டிக்காரனாக இருந்தான். அவன் கல்லூரிகளில் நடக்கும் விதவிதமான போட்டிகள் எல்லாவற்றிலும் முதல் பரிசுகளும், மெடல்களும் பெற்று வந்தான். கல்லூரி மாணவர்களின் பேரன்புக்குப் பாத்திரமானான்; ஒவ்வொரு சங்கத்தின் உயிராகவும் இருந்து வந்தான். கிட்டுவுக்கும் அவன் மனைவி லலிதாவுக்கும் பெருமை தாங்க முடியவில்லை. ஆனால் சேஷு இவர்களைவிட பெருமை தாங்காமல் உள்ளம் பூரித்தார். ஏனெனில் அவருடைய மற்றப் பையன்கள், அவர் எவ்வளவோ முயன்றும் பரீட்சைகளில் தேறாமல் இப்பொழுது குமாஸ்தாக்களாகவும், காரியாலயங்களில் சுருக்கெழுத்தாளர்களாகவும், கடைக் குமாஸ்தாக்களாகவும், ஹோட்டல் வேலைக்காரர்களாகவும், இருந்து வருகிறார்கள். ஆகவே வயது காலத்தில் தமது வம்ச விருட்சத்தின் ஒரு கிளை, தன் பெயரையே தாங்கிக் கொண்டு பொதுஜன பாராட்டுதல்களுக்கும் வியப்புக்கும் உள்ளாகி வளர்வதைக் காண, அவர் உள்ளம் சொல்லி முடியாத ஆனந்தத்தை யனுபவித்தது. அவர் அவனைச் சிறு குழந்தை முதலே மிக்க அன்புடன் கொஞ்சிக் குலாவி வந்தார். அதனாலே அவன் மீது அவருக்கு அளவு கடந்த பிரியம். பையனும் தாத்தாவின் மீது எல்லையில்லாத நேசம் கொண்டிருந்தான். தன் கைச் செலவுக்கு என்று கொடுக்கப்படும் பணத்திலிருந்தும், பரிசுகள் மூலம் வரும் பணத்திலிருந்தும், ஒரு பகுதி மிச்சப்படுத்தி அவ்வப்போது வீட்டுக்குத் தெரியாமல் தாத்தாவுக்கு அனுப்பி வந்தான்.

பயங்கர இரண்டாம் உலக மகாயுத்தம் மூண்டது. விலைவாசிகள் ஏறின. கண்டிராக்டர்கள், மில் முதலாளிகள், வியாபாரிகள் எல்லோரும் பணக்காரராயினர். கிட்டுவைப் போன்ற யோக்கியமான சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் வருமானம் மட்டும் அப்படியே ஒரு நிலையிலிருந்தது. ஆகவே, கிட்டு தன் தகப்பனாருக்குப் பண உதவி செய்வதில் இழுத்துப் பிடிக்கத் தொடங்கினான். அவன் கோபத்தை இன்னும் அதிகரிக்கச் செய்யவே நேர்ந்ததுபோல் ஒரு செய்தி வந்தது. பொன்னு என்ற அவனுடைய கல்யாணமான தங்கை ஒருத்தி, பர்மாவில் கணவனுடன் இருந்து வந்தாள். யுத்தம் மூளவே, தனது பதினான்கு வயதுப் பெண் மீனாவுடன் அந்த நாட்டிலிருந்து தண்ணீரில்லாத காட்டுப்பாதை வழியாகவும் மலைப்பிரதேசம் வழியாகவும் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டு மணிப்பூர் வந்து சேர்ந்தாள். க்ஷேமமாக மணிப்பூர் வந்து சேரவும், மணிப்பூரில் ஜப்பானிய குண்டு வீச்சு ஏற்பட்டு அவளுடைய கணவன் உயிர் நீத்தான்.

லலிதா, இப்படி இன்னலுற்ற தன் நாத்தனாரையும் மீனாவையும் அன்புடன் வரவேற்று, நல்ல ஆகாரங்கள் கொடுத்து அவர்களை ஆரோக்கியமான தேக நிலைக்குத் தேற்றினாள். ஏன், மீனா வெகு நாட்கள் வரை, இரவில் தூக்கத்தில் "ஐயோ! குண்டு விழுகிறதே! அம்மா! அப்பா! அண்ணா!" என்று அலறுவாள்.

கிட்டுவுக்குத் தன் தங்கையும், தன் தங்கை மகளும் வீட்டிலிருப்பது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. லலிதாவினிடம், "அவர்கள் வேண்டுமானால் என் அப்பாவிடம் போகட்டுமே! அங்கே இவர்கள் செலவு குறைவாக இருக்கும் இங்கே இவர்கள் எவ்வளவு சாப்பிடுகிறார்கள், தெரியுமா!" என்பான்.

"பாவம்! அவர்கள் எத்தனையோ நாள் பட்டினி கிடந்திருக்கிறார்கள். இப்பொழுதாகிலும் சாப்பிட முடிகிறதே என்று சந்தோஷப் படுகிறார்கள். அவர்கள் அப்படிச் சாப்பிடுவதைப் பார்க்க எனக்கும் ஆசையாக இருக்கிறது. பார்க்கப் போனால் சாமான்கள் எதற்கு இருக்கின்றன!—சாப்பிடத்தானே!" என்பாள்.

"ஓஹோ! பணம் சம்பாதிப்பது எவ்வளவு கஷ்டம் என்பது எனக்குத் தெரியும். இனிமேல் இந்த ஆர்ப்பாட்டமும் அதிகப்படி செலவும் நடக்க இடந்தர மாட்டேன். போதாத குறைக்கு, என் தங்கை வேறு தன் பெண் மீனாவை, நம்ம சேஷசாயிக்குக் கொடுக்க வேணும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது!" என்றான் கிட்டு.

"நான் கூட அவர்கள் கல்யாணத்தைப் பற்றி நினைத்தேன். மீனாவும் அழகாக இருக்கிறாள்; நன்றாகப் பாடுகிறாள். நம்ம பிள்ளைக்கு ஏற்ற பெண்தான்."

"என்ன பிதற்றல்! என்ன உளறல்! ஐ.ஸி.எஸ். உத்தியோகஸ்தர்களும், ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளும் நம்ம பையனுக்குத் தங்கள் பெண்களைக் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கின்றனர். நமக்கு எதற்கு இந்த அநாதைப் பெண்!" என்றான் கிட்டு.

லலிதா "நம்ம சொந்தம் அல்லவா! உறவு முறையல்லவா! இதெல்லாம் விட்டு விடலாமா! மீனாவையும், அவள் அம்மாவையும் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது" என்றாள்.

"எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இக்கும்பலிலிருந்து எனக்கு விடுதலை எப்பொழுது கிடைக்கப் போகிறதோ! தற்சமயத்துக்கு, நம் வீட்டிற்கு அடுத்தாற் போலிருக்கும் நம் சின்ன வீட்டில் மீனாவும் அவள் அம்மாவும் குடி இருக்கட்டும். அவர்கள் செலவுக்கு வேண்டுமானால் பணத்தைக் கொடுத்து விடுவோம். நம்மோ

டேயே இருந்து கொண்டு, வயிறு ரொம்ப நாம் சாப்பிடுகிற சாப்பாட்டையும், ஆரஞ்சுகளையும், வாழைப் பழங்களையும் சாப்பிட்டுக் கொண்டு நம் செலவை அவர்கள் அதிகப் படுத்துவானேன்!" என்றான் கிட்டு.

"இப்படியெல்லாம் பேசாதீர்கள். நான் சம்மதிக்க மாட்டேன்" என்றாள் லலிதா.

"நீ யார் இப்படிப் பேசுவதற்கு! என் பணத்தை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்று சொல்வதற்கு உனக்கு என்ன உரிமையிருக்கிறது!" என்று கேட்டுக் கொண்டே அவளை ஒரு தள்ளுத் தள்ளினான்.

லலிதாவின் தலை சுவரின் மீது மோதி, மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தாள். மீனுவும் பொன்னுவும், ஓடிச்சென்று எடுத்து, படுக்கையில் கிடத்தி, மூர்ச்சை தெளியச் செய்தார்கள். அன்றையதினமே, மீனுவும் பொன்னுவும், தங்கள் பொருட்டு லலிதா துன்புறுத்தப்படுவதைப் பார்க்கச் சகிக்காமல் சின்ன வீட்டுக்குக் குடி போய் விட்டார்கள்.

கிட்டு, மாதம் பதினைந்து ரூபாய் அவர்களுக்குக் கொடுத்து வந்தான். ஆனால் இந்தப் பணம் எதற்குக் காணும்! லலிதா இதைக் கேள்வியுற்று ரொம்பவும் கோபங் கொண்டாள். அந்தக் கோபத்தில், தன் தகப்பனார், கல்யாணத்தின் போது செய்து போட்ட வளையல்களில் ஒரு ஜதையைக் கழற்றி விற்று, அந்தப் பணத்தைத் தன் கணவனுக்குத் தெரியாமல் பொன்னுவுக்குக் கொடுத்தாள். ஆனால் இது அவனுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. கொஞ்சங்கூட ஈவு இரக்கம் பாராமல் லலிதாவை கையப் புடைத்தான். லலிதா ரொம்பவும் வருத்தப்பட்டாள்.

லலிதா தினம் காலையில் பொன்னுவுடன் வீட்டுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றுக்குக் குளிக்கப் போவாள். அதேபோல, அடிபட்ட அன்றைக்கு மறுநாளும் குளிக்கப் போனாள். ஆனால், தன் வாழ்வின்மீது வெறுப்புற்ற லலிதா, தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் நதியின் ஆழத்தில் பாய்ந்தாள். அவளுக்கு நீந்தத் தெரியாது; பொன்னுவுக்கும் நீந்தத் தெரியாது. அவர்களைத் தவிர வேறு யாரும் அங்கு இருக்கவுமில்லை.

அவளைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு பொன்னுவும் வேகமாக அவளைப் பின் தொடர்ந்தாள்.

இதைப் பார்த்த லலிதா, "என்னை மீட்க வர வேண்டாம். நான் வாழ்ந்தது போதும் போதும் என்றாகி விட்டது. நான் போகிறேன். என்னால் என் சுயமரியாதையை இழந்து உலகில் வாழ முடியாது. ஆனால் நீ என்பொருட்டு பிராணத் தியாகம் செய்து கொள்ளாதே! மீனுவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறதாக்கும்" என்றாள்.

பொன்னு, "உனக்கும் சேஷசாயியை வளர்க்க வேண்டிய பொறுப்பு இருக்கிறதே!" என்று கூறிக்கொண்டே தண்ணீரில் இன்னும் வேகமாக முன்னேறினாள்.

சற்று நேரத்தில் வேகமாகச் சென்ற தண்ணீர் அவர்கள் இருவரையுமே இழுத்துச் சென்று விட்டது. பின்னர், உயிர் தப்புவது ஏது!

கட்டாற்றில் இரு சடலங்கள் மிதந்து செல்வதை, அந்தச் சமயம் ஆற்றங் கரைக்கு வந்த ஒரு மாது பார்த்தாள். அவளுக்கும் நீந்தத் தெரியாது. எனவே கிட்டுவிடம் ஓடிச்சென்று இந்தத் துயரச் செய்தியைக் கூறினாள்.

இதைக் கேட்ட கிட்டு 'ஓ' என்று அலறினான் "ஐயோ! அவள் ஐயாயிர ரூபாய் பெறுமானமுள்ள நகைகள் அணிந்திருந்தாளே, அவளை எப்படியாகிலும் காப்பாற்ற வேண்டும், அல்லது அவள் உடலையாவது கண்டுபிடிக்க வேண்டும்" என்று கூக்குரலிட்டான்.

தண்ணீர் ஓடும் திசையில் ஒரு மைல் தூரம் தள்ளி, அந்த இரு சடலங்களும் கரையில் சேர்க்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தனர். பெரிய கூட்டம் கூடிவிட்டது. அநேக பெண்கள் லலிதாவின் பிரிவைத் தாங்க முடியாமல் அழுதனர். ஆம், அவள் உயிரோடிருந்தவரை எத்தனையோ பெண்களுக்கு எத்தனையோ வகையான உதவிகள் செய்து அவர்கள் அன்பைப் பெற்றிருந்தாள். மீனுவின் துயரம் சொல்லக் கூடியதன்று. கிட்டு, லலிதாவின் மீதிருந்த நகைகள் யாவும் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்தான். எல்லாம் சரியாகவே இருந்தன.

"இருவருடைய புடவைத் தலைப்புகளும் ஏன் முடிபோட்டிருக்கின்றன" என்று வியப்புடன் கேட்டான் கிட்டு.

புலன் விசாரிக்க வந்திருந்த போலீஸ் உத்தியோகஸ்தர், "இருவரும், ஒருவரையொருவர் அவ்வளவு நேசித்திருக்க வேண்டும், ஸார்" என்றார்.

புலன் விசாரணையில், "சற்றும் எதிர்பாராமல் தண்ணீரில் மூழ்கி இறந்தனர்" என்று தீர்ப்பு செய்யப்பட்டது. இந்தச் செய்தியைக் கேட்டு, சேஷு வந்து சேர்ந்தார். சேஷசாயிக்குத் தந்தி கொடுக்கப்பட்டிருந்தது. அவன் வரும் வரை பிரேதங்கள் வைக்கப் பட்டிருந்தன. தாயின் அகால மரணத்தைக் கண்ட தனயனின் துயரம் சொல்லி முடியாது.

★

அந்திமக் கிரியைகள் எல்லாம் முடிந்த பிறகு, கிட்டு சேஷசாயியைத் தனியாக அழைத்து "உன் தாத்தாவும் மற்றவர்களும் உன் தலையில் மீனுவைக் கட்டப் பார்ப்பார்கள்! கனவிலேகூட அவளைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று எண்ணாதே. ஆமாம். ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்தான்.

"நான் கனவிலேகூட நினைக்கவில்லை யப்பா!" என்றான் அந்த இளைஞன்.

சேஷசாயி, தன் கல்லூரி படிப்புக்குத் திரும்பிப் போவதற்கு முன் சேஷு ஒரு நாள் அவன் எதிரில் மீனுவைப் பாடச் செய்தார். "இவள் நன்றாகப் பாடுகிறாள் அல்லவா! இவளைப் போல் பாடுகிறவர்களைக் கேட்டிருக்கிறாயா!" என்று கேட்டார்.

"ஓ! சென்னையில் எத்தனை சினிமா நட்சத்திரங்கள் இருக்கிறார்கள், தெரியுமா!" என்றான் சேஷசாயி.

"அப்பா, குழந்தை! எங்கெல்லாம் நட்சத்திரங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இருளும் இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். ஆனால், நான் நட்சத்திரங்களின் புறத் தோற்றத்தைக் கண்டு மயங்கிப் போகிறவர்களைப் பற்றித்தான் சொன்னேன். அவர்கள் சங்கீதத்தை மட்டும் கேட்பவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. நீயும் மீனுவும் கல்யாணம் செய்து கொண்டு வாழ்வதைப் பார்க்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம். நீ என்ன சொல்கிறாய்!" என்றார் கிழவர்.

"தாத்தா, நான் இப்பொழுது கல்யாணத்தைப் பற்றியே நினைக்கவில்லை" என்று பதிலளித்தான். மறுநாளே அவன் கல்லூரிக்குப் புறப்பட்டுச் சென்று விட்டான்.

சேஷு மீனுவைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொள்ள விரும்பினார். ஆகவே, அவர் கிட்டுவிடம் போய், மீனுவின் சாப்பாட்டுச் செலவுக்கு இருபது ரூபாயும், பாட்டு சொல்லிக் கொடுக்கப் பதினைந்து ரூபாய் தரும்படியும் கேட்டார். அத்துடன், "என்றைக்காவது ஒரு நாள் அவளைச் சேஷசாயிக்குக் கொடுத்துக் கல்யாணம் பண்ண வேண்டியதுதானே! அவனுக்கு ஏற்ற மனைவியாக அவள் இருக்க வேண்டுமல்லவா!" என்று சொல்லி வைத்தார்.

"என்ன பிதற்றல்! இந்த அஷ்ட தரித்திரத்தை அவன் ஒரு நாளும் கல்யாணம் செய்து கொள்ள மாட்டான். அவன் உயர் குடும்பத்துப் பெண்ணைத்தான் பண்ணிக் கொள்வான்" என்றார்.

"நம்ப குடும்பத்தைவிட உயர்ந்த குடும்பம் வேறு இருக்கிறதா!" என்று கோபமாகக் கேட்டார் சேஷு.

கிட்டு, "இந்த வீட்டை விட்டு வெளியே போங்கள். என் பிள்ளை கல்யாண சம்பந்தமாக உங்கள் அபிப்பிராயம் எனக்கு வேண்டியதில்லை" என்றான்.

இப்படிச் சொல்லி வந்த போதே, அவன் ஆத்திரம் அதிகமாகிச் சேஷுவைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டான். சேஷுவுக்கு வந்த ஆத்திரத்தில் கிட்டுவை ஓங்கி அறைந்து விட்டார். கிட்டுவும் பதிலுக்குத் தன் வலது கையால் அப்பாவை அடித்து விட்டான்.

இதற்குள் ஊர் ஜனங்கள் கூடி, "ஐயோ! என்ன அநியாயம்!" என்று பேசத் தொடங்கி விட்டனர். ராமு என்ற ஊர்க்கிழவன், "அவர் பெற்ற தகப்பனையே அடித்து விட்டார். அந்தப் பழி வீண் போகாது; சீக்கிரத்திலேயே அவரைப் பற்றும்" என்றான்.

சேஷுவும் தமக்கு வந்த தாங்க முடியாத கோபத்தில், "என்னை அடித்த கை அழிந்து போகட்டும்" என்று இரைந்தார்.

இந்தச் சாபத்தை ஊர் ஜனங்களும் உள்ளத்தில் பயத்துடன் அமைதியாக இருந்து கேட்டனர்.

• • •

தந்தைக்கும் தாத்தாவுக்கும் தெரியாமல், சென்னையில் சேஷசாயி, கமல குமாரி என்ற மூன்றாந்தர சினிமா நட்சத்திரத்தின்மீது மையல் கொண்டு திரிந்து வந்தான். அவள் பார்க்க அழகாக இருந்தாள்; குரலும் இனிமையாக இருந்தது. அவள் தேவதாஸிக் குலத்தைச் சேர்ந்தவள். அவளைப் பள்ளிக்கூடத்திலும், கல்லூரியிலும் சேர்த்துப் படிக்க வைத்திருந்தார்கள். "கானிய உலகச் சங்கம்" என்ற சங்கத்தில் அங்கத்தினளாக இருந்தாள். அதே சங்கத்தில் நம் சேஷசாயி கூட அங்கத்தினனாக இருந்தான். இந்தச் சங்கத்தில்தான் இருவருக்கும் பரிச்சய மாயிற்று. அந்த நிமிஷத்திலிருந்து இருவரும் காதலர்களாயினர். சேஷசாயியின் மேடைப் பேச்சும், இனிய பண்புகளும் கமலகுமாரியின் உள்ளத்தை ஆட் கொண்டன. அவ்வாறே, கமல குமாரியின் அழகும், இனிய சங்கீதமும் சேஷசாயியைத் தன்னை மறக்கச் செய்தன.

ஊரில் தாயாரின் அந்திமக் கிரியைகளைச் செய்து முடித்து விட்டுத் திரும்பி வந்ததும், முதல் காரியமாகக் கமலகுமாரியைப் பார்க்கச் சென்றான்.

"நாம் இருவரும் கல்யாணம் செய்து கொண்டால், உங்கள் தகப்பனார் ஏதாகிலும் தடங்கல் சொல்வாரா!" என்று கேட்டாள் கமலகுமாரி.

"என் மனைவியை நான் தேர்ந்தெடுப்பதைத் தடுக்க என் அப்பாவுக்கு என்ன அதிகாரமிருக்கிறது!" என்றான் சேஷசாயி.

"அவர் உங்க அம்மாவின் மீது ரொம்பவும் பிரியம் கொண்டிருந்தாரா!"

"எனக்குத் தெரிந்தவரை, அவர் எங்கள் அம்மாவை நேசித்தார் என்று சொல்ல முடியாது. ஆனால் அவர், என்றைக்கும் என் தாயாருக்குத் துரோகம் செய்தது கிடையாது. ஏன், ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லப் போனால், நாம் காலேஜ் பாடங்களைப் படிக்க வில்லையா, அம்மா திரிதான் என் அப்பாவும் அம்மாவை வாழ்க்கையில் ஒரு அம்சமாகக் கருதினர்."

"உம்" என்று பெருமூச்சு விட்டாள் கமலகுமாரி. "அத்தகைய மனிதர் நம் காதலை அனுதாபத்துடன் பார்க்க மாட்டார். உன் தாயார் எப்படிப்பட்டவள்!" என்று கேட்டாள் கமலகுமாரி.

சேஷசாயி, "சுத்தக் கர்நாடகம். ஆயினும் பத்தரைமாற்றுத் தங்கம். யார் கஷ்டப்பட்டாலும் அவள் மனசு தாங்காது; அப்படியே உருகி விடும்" என்றான்.

"உன் தகப்பனாரின் மனசு...!" என்றாள்.

"அது உருகிப் பார்த்ததே இல்லை, ரொம்ப வைரம் பாய்ந்த உள்ளமாக்கும்" என்றான்.

"உம்...! கூடிய சீக்கிரத்தில் நமக்குக் குழந்தை பிறக்கப் போகிறது, தெரியுமா!" என்றாள்.

"அட கடவுளே! இவ்வளவு சீக்கிரமாக வா!" என்றான் சேஷசாயி வியப்பு மேலீட்டினால்.

"ஆமாம், அந்தச் செலவுக்கு இரண்டாயிர ரூபாய் வேண்டியிருக்கும். என் தாய் மாமன், பிரசவத்திற்கு ஒரு நல்ல நர்ஸிங் ஹோம் ஏற்பாடு செய்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்" என்றாள் கமலகுமாரி.

"ஆனால் பணம் நமக்கு எப்படிக் கிடைக்கும்!" என்று கேட்டான் சேஷசாயி.

"என் மாமாவைக் கேட்போம், அவர் ஏதாகிலும் தக்க யோசனைகள் சொல்லக்கூடும்" என்றாள் கமலகுமாரி.

அவளுடைய மாமா உண்மையிலே சமயோசித புத்தியுள்ளவராகவே காணப்பட்டார். சேஷசாயிக்குப் பத்தொன்பது வயதாகி, மேஜராகி விட்டான் என்பதை நிர்ணயித்துக் கொண்ட பின்னர், ஒரு 'பிராமிஸரி கோட்டின்' மீது இரண்டாயிர ரூபாய் கடன் வாங்கித் தர ஏற்பாடு செய்தார். பிறகு கமலகுமாரி நர்ஸிங்ஹோமில் சேர்க்கப்பட்டாள். மூன்று மாதம் கழிந்து அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த அழகிய குழந்தை 'நர்ஸிங் ஹோ'மில் எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்து விட்டது.

தனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான் என்பதில் சேஷசாயிக்கு உண்டான பெருமை கொஞ்ச நஞ்சம் அல்ல. ஆனாலும் இந்தச் செய்தியைத் தகப்பனாருக்கு எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான். அப்பா காதுக்கு எட்டினால் கட்டுக் கடங்காத கோபம் அவருக்கு வருமே என்று கவலைப் பட்டான். கடைசியாக, அவன் கமலகுமாரியின் மாமாவை இது சம்பந்தமாகக் கலந்து ஆலோசித்தான்.

மாமா, "உன் காலேஜ் மூடட்டும். நீ, கமலகுமாரி, குழந்தை, நான் ஆக நால்வருமாக உன் அப்பா வெளியூர்ப் போயிருக்கிற சமயமாகப் பார்த்துப் போய் வீட்டுக்குள் உட்கார்ந்து விடுவோம். பிறகு யாவும் சுலபமாக முடிந்து

விடும். ஏனெனில், சட்ட ரீதியாகப் பார்த்தால் உடைமையைப் பற்றிக் கொள்வது, பத்து சட்ட பாயிண்டுகளில் ஒன்பது சட்ட பாயிண்டுகள் நமக்குச் சாதகமாக்கிக் கொள்வதாக அர்த்தம். மேலும், கடவுள் புண்ணியத்தில், நீ உன் அப்பாவுக்கு ஒரே பிள்ளை. வேறு பிள்ளைகள் இருந்திருந்தால் ரொம்பவும் தொந்தரவாகப் போயிருக்கும். அவர், நம்மீது எத்தனையோ தந்திரங்களும் சூழ்ச்சிகளும் செய்ய இடம் ஏற்பட்டிருக்கும். நம் நல்ல வேளை, நீ ஒரே மகனாக வாய்த்தாய் உன் அப்பாவுக்கு" என்றார்.

குழந்தைக்குச் சின்னக் கிட்டு என்று பெயர் வைக்கப்பட்டது. கல்லூரி மூடியவுடன் சேஷசாயி, கமலகுமாரி, சின்னக் கிட்டு, கமல குமாரியின் மாமா இத்தனை பேருமாகச் சேர்ந்து ஒரு நாள், கிட்டு வெளியூருக்குச் சென்றிருந்த சமயமாகப் பார்த்துப் போய்ச் சேர்ந்தனர். வீட்டிலிருந்த ஒரே வேலைக்காரன் இந்தக் காட்சியைக் கண்டு அப்படியே வியர்த்து நின்று விட்டான். அவன் சேஷசாயியின் மீது அளவுகடந்த பிரியம் வைத்திருந்ததனால், அவர்களை 'உள்ளே விட முடியாது' என்று கூற அவன் மனசு இடங்கொடுக்கவில்லை. ஆகவே உள்ளே நுழைந்தவர்கள் சௌகரியம் செய்துகொண்டனர். கமல குமாரிக்கும், அவள் மாமாவுக்கும் உண்டான மகிழ்ச்சி சொல்லி முடியாது. அந்த மகிழ்ச்சியில் போட்ட இரைச்சல் வீடே இடிந்து விழுந்துவிடும் போலிருந்தது. சேஷசாயிக்கு மட்டும் கவலை கலந்த மகிழ்ச்சியாகவே இருந்தது. குழந்தையோ தான் பார்த்த பொருள்களை யெல்லாம் தன் உடைமையாகக் கருதி அழுதும் சிரித்தும் சத்தம் போட்டும் விளையாடிக்கொண்டிருந்தது.

கிட்டு வீட்டுக்கு வந்தபொழுது, அவர்களுடைய குதூகலம் உச்சஸ்தாயியை அடைந்திருந்தது. சேஷசாயியினுடன், கமலகுமாரி, குழந்தை, அவள் மாமா இத்தனை பேரைக் கண்டவுடன் கிட்டு அடைந்த ஆச்சரியத்துக்கு எல்லையில்லை.

அடுத்த கணம், "நான் ஒரு முட்டாள். இவர்கள் சேஷசாயினுடைய காலேஜ் நண்பனுடைய மனைவியும் குழந்தையுமாகத் தான் இருக்க வேண்டும். அந்தக் கல்லூரி மாணவன் இப்பொழுது வெளியில் எங்கேயாவது போயிருக்கிறான் போலும்" என்று நினைத்தான்.

இப்படி யோசித்துக் கொண்டிருந்த போதே, சேஷசாயி குறுக்கே பாய்ந்து "அப்பா, இவள் தான் என் மனைவி, குழந்தை. முன்னாலேயே உங்களுக்கு இதைப்பற்றித் தெரிவிக்காததைக் குறித்து என்னை மன்னித்து விடுங்கள்" என்றான்.

கிட்டுவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. "என்ன! என்ன சொன்னாய்!" என்று பலத்த குரலில் கூச்சலிட்டான்.

கமலகுமாரி "அவர் என்ன சொன்னார் என்று உங்களுக்கு நிஜமாகவே புரியவில்லையா! என்னை, அவர் தம் மனைவியென்றும், இந்தச் சின்னக்கிட்டு உங்கள் பேரன் என்றும் அறிமுகப்படுத்தி வைத்தார். அவ்வளவுதான்" என்றாள்.

"என் பேரனா! இந்தக் குழந்தையா! தெருவில் கிடந்து பொறுக்கி வந்த இந்தக் குழந்தையா!" என்றான் கிட்டு அருவருப்புடன்.

"தயவு செய்து நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதை யோசித்துப் பேசுங்கள். மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தால், காரியம் சிரமமாகப் போய்விடும், ஆமாம்" என்று எச்சரிக்கை செய்தார் கமலகுமாரியின் மாமா.

"என்ன! மான நஷ்ட வழக்கா! அயோக்ய சிகாமணிகளா! நீங்கள் யார்! இந்தக் கணமே என் வீட்டை விட்டு வெளியேறுங்கள்! இல்லையேல் உங்களைக் கழுத்தைப் பிடித்து வெளியே கெட்டித் தள்ள வேண்டியிருக்கும்!" என்றான் கிட்டு.

"அவர் என் மாமா!" என்றாள் கமலகுமாரி.

"அவர் உன் மாமாவாக இருந்தால், என்ன! உன் மாமாவுக்கு மாமாவாக இருந்தால்தான் எனக்கு என்ன வந்தது! நீயும் அவருடன் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே போ!" என்றான் கிட்டு.

"ஐயா, நான் உங்கள் பிள்ளையின் மனைவி என்பதும், இந்தக் குழந்தை உங்கள் பேரக் குழந்தை என்பதும் நினைவிருக்கட்டும்" என்றாள் கமலகுமாரி.

"வெளியே போ!" என்று பலத்த குரலில் கூச்சல் போட்டான் கிட்டு.

கமலகுமாரி "நீங்கள் ஏன் சும்மா இருக்கிறீர்கள்!" என்று கேட்டாள் சேஷசாயியைத் திரும்பிப் பார்த்து.

சேஷசாயி பரிதாபமான குரலில், "எனக்கு இப்பொழுது என்ன செய்வது என்றே தெரியவில்லை. எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடு, என் அப்பாவின் மனத்தை மாற்றப் பார்க்கிறேன்" என்றான்.

கிட்டு, "நீ என் மனசை மாற்றப் போகிறாயோ! நடக்கவே நடக்காது. வேண்டுமானால் நீயும் வெளியே போய்த் தொலை. அவ்வளவு தான், இனிமேல் செல்லாத செப்புக் காசுகூட உனக்குத் தர முடியாது!" என்றான்.

"நாங்கள் கோர்ட்டில் உங்கள்மீது வழக்குத் தொடருவோம்" என்றார் கமலகுமாரியின் மாமா.

யாவருக்கும் உகந்த

சாம்பியன் பேனா



நெ. 151, 101, 102, 103, 121

சிறந்த வேலைப்பாட்டிற்கும், உயர்ந்த ரகத்திற்கும் உத்தரவாதம் கொண்டவை.

தயாரிப்பவர்கள் :

குஜராத் இண்டஸ்ட்ரீஸ், லோஹார்சாவ்ல், பம்பாய்-2

எங்கும் பேனா வியாபாரிகளிடமும் கடைகளிலும் கிடைக்கும்

"என் சொத்து முழுதும் என் சுயார்ஜிதம் என்பது நினைவிருக்கட்டும்" என்றான் கிட்டு.

"அதையும்தான் பார்த்து விடுவோமே" என்றார் கமல குமாரியின் மாமா.

கமலகுமாரி ஒருமுறை சேஷசாயியின் மீது வெறுப்பு நிறைந்த பார்வை ஒன்று வீசி விட்டு, குழந்தையை எடுத்துக் கொண்டு அந்த வீட்டை விட்டு வெளிப்பட்டாள்.

"அப்பா, சின்னக் கிட்டுவை உத்தேசித்தாவது இரக்கம் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான் சேஷசாயி கிட்டுவினிடம்.

கிட்டு, "அந்தச் சனியனைச் 'சின்னக் கிட்டு' என்று அழைக்காதே. அந்தக் குழந்தைக்கும் எனக்கும் யாதொருவிதமான சம்பந்தமுமில்லை" என்றான்.

"சரி, கூடிய சீக்கிரத்தில் ஸப் கோர்ட்டில் நாம் சந்திப்போம்" என்றார் கமலகுமாரியின் மாமா.

அவர் குழந்தையையும் கமலகுமாரியையும் அழைத்துச் சென்றார். பின்னர் கிட்டு உள்ளே சென்று "அயோக்கியப் பயலே! நான் கஷ்டப் பட்டுச் சம்பாதித்த பணத்தை அனுப்பிக் கொண்டிருக்க, நீ பட்டணத்திலே இப்படியா நாடகம் போட்டுக் கொண்டிருந்தாய்!" என்று கூறிக் கொண்டே 'படார்' 'படார்' என்று கையாலேயே சேஷசாயியின் கன்னத்தில் அறைந்தான்.

இதைப் பார்த்த ஊர் ஜனங்கள், தங்களுக்குள் "அப்பாவை அடித்த கை இப்போது பிள்ளையையும் அடிக்கிறது" என்று கூறிக் கொண்டனர்.

சேஷசாயிக்கும் என்ன சொல்வது என்றே புரியவில்லை. திக்பிரமை பிடித்தவன் போல் இருந்தான். பின்னர் அவன் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து, இன்றைய அசட்டு உலகத்தையும், நாளை வரப்போகும் லட்சிய உலகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். அதே இரவு கிட்டு, வான மண்டலத்தை ஏறிட்டுப் பார்த்தான். மேகம் சூழ்ந்திருந்தது. ஒரு நட்சத்திரத்தைக் கூடக் காணவில்லை. அவன் உள்ளம் சோர்ந்து விட்டது.

ஒரு வாரம் கழித்து, கிட்டுவுக்கு ஒரு வக்கீல் நோட்டீஸ் வந்திருந்தது. அதில் கமலகுமாரிக்கு ஜீவனாம்சமாக ஒரு பெருந் தொகையையும். சொத்தில் கால் பங்கு சின்னக் கிட்டுவுக்கும் கேட்கப் பட்டிருந்தது. கோர்ட்டு, வழக்கு, விவகாரம் என்றால் என்னவென்று தெரியாத கிட்டு இதைப் பார்த்ததும், விலவிலத்துப் போய், சேஷுவினிடம் ஓடினான். அவர் காலில் விழுந்து, மன்னிப்புக் கோரி, எல்லா விவரங்களையும் கூறி இந்தக் கஷ்ட நிலையில் தனக்கு உதவும்படி கெஞ்சினான்.

சேஷு சொன்னார்: "இந்தக் கஷ்ட தசையில் உனக்கு உதவாமல் என்னால் இருக்க முடியாது. சேஷசாயி என் பேரன். அவனை எப்படியாகிலும் இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றியாக வேண்டும். ஆனால், இதற்கு ஏராளமாகப் பணம் செலவழிக்க வேண்டியிருக்குமே!"

"ஆனால் இந்தச் சொத்தெல்லாம் நான் சம்பாதித்ததாயிற்றே" என்றான்.

"அது எனக்குத் தெரியும். ஆனால் அசிங்கம் பிடித்த ஒரு கோர்ட்டு வழக்கினால் நம் பையனின் பெயரைக் கெடுக்க எனக்கு இஷ்டமில்லை. அதனால் அவர்களுக்குப் பத்தாயிர ரூபாய் கொடுத்துச் சரிக்கட்டி விடலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்!" என்றார்.

"நான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்திலிருந்து பத்தாயிர ரூபாய் எடுத்துக் கொடுப்பதா!" என்றான் கிட்டு.

"'பணம்! பணம்!' என்று எந்த நேரமும் அழாதே! நம்ம பையனின் மானத்தை எப்படியாகிலும் காப்பாற்றியாக வேண்டும். அதற்கு அவனுக்குக் கல்யாணம் மீனாவுடன் அடுத்த முகூர்த்தத்திலேயே செய்தாக வேண்டும்."

"கல்யாணம் இருக்கட்டும், முதலில் இந்தத் தொந்தரவிலிருந்து விடுபட்டுத்தீரவேண்டாமா!" என்று கேட்டான் கிட்டு.

"அப்படியல்ல. நாம் போடுகிற சண்டை இரு முனைகளிலும் போட வேண்டும். இந்தக் கல்யாணம், கமலகுமாரியுடன் ஒருமாதிரி வழக்குத் தீர்த்துக் கொள்வதில் ரொம்பவும் சௌகரியமாக இருக்கும். மேலும் தனக்காக உன்னுடன் எதிர்த்து நின்று சேஷசாயி சண்டை போடவில்லை என்பதற்காக அவனை வெறுக்கும் கமலகுமாரி, சேஷசாயிக்கு அக்னி சாட்சியாக மணந்த மனைவியிருக்கிறாள் என்று அறிந்தால், 'அவனையே தான் கல்யாணம் செய்து கொள்வேன்' என்று பிடிவாதமும் பிடிக்கமாட்டாள்" என்றார் சேஷு.

ஆக, தந்தையும் தாத்தாவுமாகச் சேர்ந்து பிரமை பிடித்துத் திரியும் சேஷசாயிக்கு மீனாவைக் கல்யாணம் செய்து வைத்தனர். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட கமல குமாரியின் அருவருப்பு இன்னும் அதிகமாயிற்று. கடைசியில் சேஷு செய்த பத்தாயிர ரூபாய் ஏற்பாட்டுக்கு அவள் ஒப்புக் கொண்டாள். அப்பொழுது "நான் இந்தப் பணத்தைச் சின்னக் கிட்டுவை உத்தேசித்து எடுத்துக் கொள்கிறேன். ஆம், எனக்கு அந்தப் பயங்கொள்ளியும் வேண்டாம், அவனுடைய பணமும் வேண்டாம். நான் இந்தப் பணத்தைக் குழந்தையின் பேரில்தான் பாங்கியில் போட்டு வைக்கப் போகிறேன்" என்றாள்.

இம் மொழிகள் சேஷுவின் காதில் விழ விழ அவருக்கு அவள்பால் அளவு கடந்த மதிப்பும் வியப்பும் ஏற்பட்டன. கடைசியாக அவள் இருப்பிடத்தை விட்டு வந்தபோது, உண்மையிலே அந்தக் குழந்தைக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டு வந்தார்.

கிட்டு, பத்தாயிர ரூபாய் கைவிட்டுப் போய் விட்டதே என்ற ஏக்கத்தில் மனம் முறிந்து கிடந்தான். அவனுக்கு அடிக்கடி பாரிச வாயு நோய் கண்டு படுத்த படுக்கையாகி விட்டான். மீனாவும் சேஷசாயியும் அவனை நன்கு கவனித்துக் கொண்டனர். மீனா, தன் உள்ளன்பினாலும், அனுதாபத்தினாலும் சேஷசாயியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். சேஷசாயியும், பெரிய பரீட்சைகளெல்லாம் தேறி, பெரிய உத்தியோகத்தைப் பெற்றான்.

இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள், வழக்கம் போல் வெந்நீர் அறையில் வெந்நீர் ஸ்நானம் செய்யக் கிட்டு சென்றான். ஆனால் வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லை. குளிக்கும் அறைக் கதவை வெகுநேரம் தட்டியும் உள்ளிருந்து ஒரு சத்தமும் கேட்கவில்லை. சேஷசாயியும் சேஷுவும் கதவைப் பலமாக இடித்துத் தள்ளி உள்ளே சென்றனர். அங்கே கிட்டு பாரிசவாயுவின் இழுப்பு வந்து அப்படியே இறந்து கிடப்பதைக் கண்டனர். அவனது வலது கை மட்டும், அடுப்பிற்குள் நீட்டி எரியும் விறகுக் கட்டையுடன் எரிந்து காணப்பட்டது. அவர்கள் ஆற்ற முடியாத துயருற்றனர்.

ராமு என்ற அந்த ஊர்க் கிழவன் மட்டும் தன் பழைய நண்பர்களிடம், "பார்த்தீர்களா, அது தான் அப்பாவை அடித்த கையாக்கும்!" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

CP. 8484



இந்தியர்கள் நன்கு அறிவர்

உலகில் சிறந்த பக்குவத்துடன் நல்ல ருசியான காப்பி தயாரிக்கத் தெரிந்தவர்கள் இந்தியர்கள்தான். ஒரு கோப்பை நல்ல காப்பியுடன் ஒரு தேக்கரண்டி நிறைய க்ளுகோவிடாவும் கலந்து பருகினால், இரு மடங்கு தென்பு பெறக்கூடும் என்பதும் இந்தியர்களுக்குத் தெரியும்.

க்ளுகோவிடா என்பது இயற்கை ஜீவசக்தி உணவெனக் கருதப்படும் க்ளுகோஸ்-D அதிக செழுமையாக்கப் பெற்றதுதான். அது நேராக உங்கள் ரத்தத்துடன் சேர்ந்து ஒன்றுபடுகிறது. க்ளுகோவிடா சோர்வை அகற்றி உடனே அதிகப்படி ஜீவசக்தியளிக்கிறது!

குடும்பத்தில் அனைவருக்குமாக, இன்றே ஒரு பெரிய டின் வாங்குங்கள்!

க்ளுகோவிடா இரட்டிப்பு ஜீவசக்தி தருகிறது.



காரன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட், பம்பாய்.



இதைப்போன்ற டூத் பிரஷ் வேறில்லை!
உங்களுக்கேற்ற டிசைன்! உங்கள் வாய்க்கு பொருத்தமானது!
பற்களை உறுதிப்படுத்தும் புது அம்சங்கள்
● முற்றிலும் ஸ்டரிலைஸ் செய்யப்பட்டது
● கால்கேட் டூத் பிரஷ்களின் ஹாண்டில்கள் தனி வர்ண முன்னவை; உங்களுக்கு ஏற்றதை லகுவில் அறியலாம்
● பிளாஸ்டிக் ஹாண்டிலில் நிஜ நைலான் நார்கள்
● மிருதுவாக பாலிஷ் செய்கிறது; இளுமல் சிதையாது
● பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது
குழந்தைகளுக்கு
ஸ்திரீகளுக்கு
ஆண்களுக்கு
2 சைஸ்கள்
பெரியவர்களுக்கு குழந்தைகளுக்கு
ஷார்ட், மீடியம், சாப்ட் டப்ட்ஸ்
COLGATE
Nylon TOOTH BRUSH
AN EXCELLENT QUALITY TOOTH BRUSH WITH GENUINE NYLON BRISTLES FIRMLY FASTENED
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
"துவண்டு" போவதில்லை



அவனுக்கு ஆனந்தம் அளிப்பதற்கு
கையோடு ஒரு புட்டி வைத்திருங்கள்
குழந்தைக்கு வயிற்றுக் கோளாறு இல்லாதிருப்பதால் அவன் சந்தோஷமாயிருக்கிறான். குழந்தை சந்தோஷமாயிருப்பதால் தாயாரும் சந்தோஷமாயிருக்கிறாள்.
கிரைப் ஸிரப்
தயாரிப்பாளர் :
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர்
விற்பனை ஏஜண்டுகள் :
பெஸ்ட் & கம்பெனி லிமிடெட், தபால் பெட்டி நெ 63, சென்னை



ராஜியின் ஆசை

எம். பி. சுப்பிரமணியன்

"மாமா, சர்க்கஸுக்குப் போகணும், மாமா!" என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்தான் ஐந்து வயதுள்ள என் மருமான் சேகர்.

"நானும்......" என்று மழலை மொழி பேசிக் கொண்டே ஓடி வந்தாள் மூன்று வயது நிரம்பாத அவன் தங்கை லலிதா.

"ஆகட்டும் கூட்டிக்கொண்டு போகிறேன். இன்று சாயந்திரம் போகலாம்" என்றேன்.

சேகரும் லலிதாவும் என் அருமைத் தங்கை ராஜியின் குழந்தைகள். அவள் கணவன் சந்திரன் டில்லியில் வேலையாக இருந்தான். ராஜி மூன்று வது பிரஸவத்திற்காக வந்திருந்தாள்.

அன்று மாலை நான் ராஜியையும் அவள் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு சர்க்கஸிற்குப் போயிருந்தேன். முதலில் 'பார்' வேலை நடந்தது. ஸர்க்கஸில் எல்லோருக்குமே பிடித்தது கோமாளிகளின் சேஷ்டைகள்தான். 'பார்' வேலை நடக்கும்போதே நான்கு கோமாளிகள் வந்து விட்டார்கள். அவர்களுடைய குரங்குச் சேஷ்டைகளைக் கண்டு சிரிக்காதவர்கள் கிடையாது. அதுவும் அவர்களில் நொண்டி நொண்டிக் கொண்டே ஒருவன் வேடிக்கை பல செய்து கொண்டிருந்தான். அவன் முக வேஷத்தையும் நடப்பதையும் கண்டாலே சிரிப்பு வந்தது. ராஜியும் குழந்தைகளும் அவன் சேஷ்டைகளைக் கண்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

'பார்' வேலை முடிந்ததும் கோமாளிகள் தனியாகவே தங்கள் வேடிக்கைகளைத் துவங்கினர். பலூன்கள் நிறையக் கொண்டு வந்தான் அந்த நொண்டிக் கோமாளி. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியரிடத்தில் கொண்டு வந்து பலூன்களை நீட்டுவான். குழந்தைகள் அதைப் பிடிக்கப் போனதும் பலூன் வெடித்து விடும். எல்லோரும் சிரிப்பார்கள். சில பலூன்கள் மேலே பறந்துவிடும். இப்படி வேடிக்கை செய்து கொண்டே வந்தவன் எங்களருகில் வந்ததும் அப்படியே நின்று விட்டான். பிறகு சேகருக்கும் லலிதாவிற்கும் நிறையப் பலூன்கள் கொடுத்தான். குழந்தைகளுக்கு ஒரே சந்தோஷம். சிறிது நேரம் கழித்து மறுபடியும் வந்தவன் சேகரையும் லலிதாவையும் அடிக்கடி தூக்கிக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விட்டான். அவர்களைச் சிறிய குதிரைகள் மேல் ஏற்றினான். அவன் கோமாளி வித்தைகளெல்லாம் சேகரையும் லலிதாவையும் சந்தோஷப் படுத்தின. அங்கு கூடியுள்ள ஆயிரக் கணக்கான ஜனங்களைப் பற்றி அன்று அவன் அக்கறை எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை. சர்க்கஸ் முடியும்வரை அவன் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் செய்கை எனக்கு வியப்பை அளித்தது.

சர்க்கஸ் முடிந்து காரில் வீடு திரும்பும்போது ராஜியிடம் இதைப் பற்றிச் சொன்னேன்.

"ஆமாம் அண்ணு! பாவம், நம் சேகரும் லலிதாவும் ஒருவேளை ஏதோ தூர தேசத்தில் இருக்கும் அவன் குழந்தைகளை நினைவூட்டினார்களோ, என்னவோ!" என்றாள் ராஜி. அவள் கூறியதும் ஒருவேளை சரியாக இருக்கலாம் என்று எனக்குத் தோன்றியது.

அன்று இரவு சாப்பாட்டிற்குப் பின்கூடச் சேகரும் லலிதாவும் சர்க்கஸ் விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். நானும் ராஜியும் ஒருவருக்கொருவர் பழைய காலைய சம்பவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தோம்.

"மணி, நான் ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே!" என்று கேட்டாள் ராஜி.

"உன்மேல் எனக்கு என்ன கோபம், ராஜி! சொல், கோபித்துக் கொள்ளவில்லை" என்றேன்.

"சொன்னால் பின்பு என்மேல் சீறி விழுவாய்" என்றாள் குழந்தை போல.

"இல்லை, ராஜி! கட்டாயமாகக் கோபித்துக் கொள்ள மாட்டேன்" என்றேன்.

"எனக்குப் பிறக்கும் குழந்தை பிள்ளையாக இருந்தால் ரவி என்று பெயர் வைக்கலாம் என்று இருக்கிறேன்" என்றாள் நிதானமாக.

எனக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. ராஜியின் பேரில் எல்லையற்ற கோபம்தான் வந்தது. ஆனால் அதைவிட ரவியின் பேரில் எனக்கு ஆத்திரம் தோன்றியது. ராஜி சொன்னது அவள் பெண்மையின் மென்மையையும் களங்கமற்ற தன்மையையும்தான் விளக்கியது. அவன் குணத்திற்கும் அன்பிற்கும் ரவி செய்தது தான் என்ன! ராஜியின் முன்னணியில் என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எண்ணங்கள் அலைமோதின. "தூக்கம் வருகிறது, ராஜி!" என்று கூறிவிட்டு என் அறைக்குப் போய் விட்டேன்.

தூக்கம் எப்படி எனக்கு வரும்! ராஜிதான் என் உள்ளத்தைக் கிளறி விட்டாளே! பழைய நினைவுகள் ஒன்றொன்றாக ஓயாத அலைகளாக என் உள்ளக் கடலில் எழத் தொடங்கின.

* * *

"அத்தை பாவம், உடம்பு சரியில்லாமல் கிடக்கிறாளாம். கட்டாயம் வரும்படி எழுதியிருக்கிறாள்" என்று கூறி ஒருநாள் என் தந்தை தஞ்சாவூர் சென்றார். பத்து நாட்கள் கழித்து அவர் திரும்பியபொழுது அவருடன் எட்டு வயதுள்ள ரவியும் வந்தான். அத்தை தன் ஒரே



"உங்கள் சம்சாரத்தின் சொந்தச் செலவுக்கு மாதா மாதம் மொத்தப் பணமாக ஏதாகிலும் கொடுக்கிறீர்களா, இல்லை விட்டால் அப்போ, அப்போ கேட்கிற போது கொடுக்கிறீர்களா?"

" இரண்டும்தான் !"

மகன் ரவியை அவன் மாமாவிடம் ஒப்படைத்து விட்டு மீளாத யாத்திரை துவக்கி விட்டாள். அத்திம்பேர் பல வருடங்களுக்கு முன்பே காலமாகி விட்டதால் ரவி எங்கள் வீட்டிலேயே இருக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது எனக்கு ரவியின் வயதுதான். ராஜிக்குச் சுமார் ஐந்து வயதிருக்கும். ரவி வந்த நாளிலிருந்தே எங்கள் மூவருக்குள் ஒரு பாசம் வளர்ந்து விட்டது.

ரவி மிகவும் அழகாக இருப்பான். அவன் வெளுத்த மேனியும் உருண்ட முகமும் சுருண்ட கேசமும் யாரையும் அவன்பால் நேசங் கொள்ளச் செய்தன. ரவி எங்களுடன் மிகவும் அன்பாகப் பழகினான். ராஜி என்றால் அவனுக்கு உயிர். ரவி எப்பொழுதுமே படிப்பில் முதல். அவன் எனக்கும் ராஜிக்கும் பாடங்கள் வெகு அழகாக சொல்லித் தருவான். நாட்கள், மாதங்கள், வருடங்கள் ஓடின. நானும் ரவியும் கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கிறோம். நான் 'இன்டர்' பரீட்சைக்குப் பின் டாக்டர் படிப்பிற்குச் சேர்ந்தேன். ரவி 'இஞ்சினீரிங்' கல்லூரியில் சேர்ந்தான். காலேஜ் படிப்பு முடிந்து ரவி ராஜதானியிலேயே முதல் மையாகத் தேறினான்.

அப்பா அந்த வருடமே ராஜிக்கும் ரவிக்கும் 'முடிச்சு'ப் போட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்தார். அப்பொழுதுதான் ரவிக்கு மேல் படிப்பிற்காக இங்கிலாந்து செல்ல இலவச அழைப்பு வந்தது. அப்பாவுக்கு ரவி இங்கிலாந்து போகு முன்பே கல்யாணத்தை முடித்துவிட வேண்டுமென்று விருப்பம். ரவிக்கு என்னவோ அது இஷ்டமில்லை. தான் இங்கிலாந்து போய் வந்த பிறகுதான் கல்யாணம் என்று சிறிது பிடிவாதமாகவே யிருந்தான். அப்பாவுக்கு அது பிடிக்கவில்லை. "இதற்குள் இவனுக்குக் கர்வம் வந்து விட்டது!" என்று கத்தினார்.

"இவ்வளவு நாள் பழகியும் உனக்குக்கூட என்னைத் தெரியவில்லையா, மணி! நான் ராஜியைத் தவிர வேறு பெண்ணைக் கண்ணெடுத்துப் பார்ப்பேனா! எனக்கு ராஜியின் பேரிலுள்ள உண்மை அன்பினால்தான் சொல்கிறேன், இப்பொழுது கல்யாணம் வேண்டாமென்று! நான் சொல்வதைத் தவறாக எண்ணாதே. ஏதோ தூர தேசம் போகிறேன். எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் பின்பு ராஜியின் கதி......! அதனால்தான் இப்பொழுது கல்யாணம் வேண்டாம் என்று சொல்கிறேன்" என்றான். அவன் பேச்சை நம்பினேன். ராஜியும் நானும் அவன் விருப்பத்திற்கு இணங்கினோம். அதைக் கேட்ட அப்பாவும் அதற்குச் சம்மதித்து இங்கிலாந்து செல்ல அனுமதி கொடுத்தார்.

ரவி இங்கிலாந்திற்கும் போனான். அடிக்கடி கடிதம் எழுதுவான். ராஜியைப்பற்றிக் கேட்காத கடிதமே கிடையாது. சில சமயம் விதவிதமான ஆடைகள் வாங்கி அவளுக்கு அனுப்புவான். நாட்கள் மாதங்கள் ஓடின. இன்னும் இரண்டு மாதத்தில் ரவி படிப்பு முடிந்து இந்தியா திரும்புவான் என்று தெரிந்தது. தான் புறப்படும் நாளையும் கப்பலையும் குறித்து எழுதுவதாகக்கூட ரவி எனக்கு எழுதியிருந்தான். பிறகுதான் அந்தக் கடிதம் வந்தது. என்னால் அதை நம்பவே முடியவில்லை. திரும்பத் திரும்ப அதைப் படித்தேன். உண்மை உண்மைதானே! நம்பாமல் என்ன செய்வது! ரவிதான் எழுதியிருந்தான். மிகவும் சிறிய கடிதம்தான். ஆனால் எங்களுக்கு அது எவ்வளவு பெரிய பூகம்பமாகி விட்டது! ரவியின் கடிதம் ஐந்தே வரிகளில் முடிந்திருந்தது.

அன்புள்ள மணி,

நான் இங்கு வந்தபின் ரோஸலி என்ற ஒரு பெண்மீது காதல் கொண்டு அவளை இரண்டு தினங்களுக்கு முன்தான் கல்யாணம் செய்து கொண்டேன். நான் இந்தியா திரும்ப விரும்பவில்லை. என்னை மன்னிக்கவும் உன் நண்பன்

ரவி.

அதைப் படித்த எனக்கு என்னென்ன எண்ணங்கள் எழும்பியிருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. ரவி இப்படிச் செய்வான் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. எதிர்பாராத பேரிடி எங்கள் குடும்பத்தின்மீது விழுந்தது. அப்பா விஷயமறிந்ததும் மனமுடைந்து விட்டார். ராஜி கலையையே இழந்து விட்டாள். அவள் உடம்பு இளைத்துத் துரும்பாகி விட்டது.

என்ன நேர்ந்தாலும் காலம் போய்க் கொண்டு தான் இருக்கிறது. அப்பா ராஜிக்கு வரன் பார்க்கத் தொடங்கினார். கல்கத்தாவில் டாடா கம்பெனியில் நல்ல வேலையிலிருந்த சந்திரனுக்கு ராஜி வாழ்க்கைப் பட்டாள். சந்திரன் நல்லவன். ராஜியைக் கண்ணும் கருத்துமாக அன்போடு நேசித்தான். வருடங்கள் எட்டு ஓடி விட்டன. ராஜி மூன்றாவது தடவையாகப் பிரஸவத்திற்குச் சென்னைக்கு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள்.

* * *

இந்த எட்டு வருடகாலத்தில் ரவியின் பேச்சை நாங்கள் யாரும் எடுத்ததே யில்லை.

அந்த ரவியின் பேச்சைத்தான் திரும்பவும் ராஜி இன்று எடுத்தாள். தன் பிள்ளைக்கு ரவி என்று பெயர் வைக்க வேண்டுமாம்! ஏன்! இந்த ரவியும் ஏதாவது ஒரு ராஜியை மோசம் செய்யவா! ராஜி வரையில் ரவி செத்துச் சாம்பலாகி விட்டான். அவனை அவள் அன்றே மறந்திருப்பாள், தன் பரிசுத்தமான மனத்திலிருந்து அந்த அற்பனை அகற்றியிருப்பாள் என்று தான் நான் எண்ணியிருந்தேன். அது இல்லை என்று இன்றுதான் எனக்குத் தெரிந்தது. என்ன விசித்திர ஜீவிகள் இந்தப் பெண்கள் என்று தோன்றியது எனக்கு. ரவி! அந்தப் பெயரே நம் குடும்பத்தில் கூடாது. என்ன நேர்ந்தாலும் சரி, அந்தப் பெயர் இட நான் சம்மதியேன். இது உறுதி. ராஜிக்கு ஏன் இப்படிப் புத்தி போயிற்று! சமயம் வரும்பொழுது பார்த்

துக் கொள்ளலாம். ரவி என்ற பெயர் மாத்திரம் மீறி நிச்சயமாக வைக்கக் கூடாது.

மறுநாள் ஒரு ஆள் வந்து என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ஸர்க்கஸ் கம்பெனியில் கோமாளியாக வேலை பார்க்கும் ஜான் கொடுத்தனுப்பியதாகச் சொன்னான். கவரில் சர்க்கஸுக்கு ஆறு பேர் தினம் போகக்கூடிய முதல் வகுப்பு இலவசச் சீட்டு ஒன்று இருந்தது. அத்துடன் ஒரு கடிதமும் இருந்தது:

அன்பார்ந்த ஐயா,

முன்பின் தெரியாத ஒருவன் தங்களுக்கு ஒரு இலவசச் சீட்டு அனுப்புவதற்கு மன்னிக்கவும். தங்கள் குழந்தைகளுடன் நேற்று சர்க்கஸிற்கு வந்தீர்கள். அந்தக் குழந்தைகளைக் கண்டதும் தூரதேசத்தில் இருக்கும் என் இரு கண்மணிகளின் நினைவு எனக்கு வந்தது. என் குழந்தைகள் போலவே இருக்கின்றன இந்த இரண்டு குழந்தைகளும். தாங்கள் குடும்பத்துடன் தினம் சர்க்கஸுக்கு வரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அது என் மனத்திற்கு மிகுந்த சாந்தியைத் தரும்.

இப்படிக்கு

ஜான் (கோமாளி)

ராஜி முன்தினம் சொன்னது சரியாகத்தான் போய் விட்டது. அதனால்தான் அந்தக் கோமாளி சேகரிடமும் லலிதாவிடமும் அவ்வளவு அன்பாக இருந்தான். ராஜியிடம் விஷயத்தைச் சொல்லிக் கடிதத்தையும் கொடுத்தேன்.

"மணி, இது நம் ரவியின் கையெழுத்துப் போலவே இருக்கிறது" என்றாள் ராஜி அந்தக் கடிதத்தைப் பார்த்து விட்டு.

'இவளுக்கு ஏன் இப்பொழுது ரவியின் நினைவு! அந்தத் துரோகியை மணந்தால் நினைக்கிறாளே!' என்று எண்ணும்போது எனக்குக் கோபம் எல்லை மீறி வந்தது. 'பாவம், ராஜி கர்ப்பவதி!' என்று எண்ணிப் பேசாமலிருந்தேன்.

சர்க்கஸ் வந்து பத்து நாட்களுக்கு மேல் ஆகி விட்டது. வந்த நாள் முதல் நாங்கள் சர்க்கஸ் பார்க்கப் போகாத நாளே கிடையாது. எனவே, எங்களுக்கு ஜானுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அன்று குழந்தை சேகரின் பிறந்த நாள். பலகாரங்கள் பல செய்து பாயஸத்துடன் சாப்பாடு. சாப்பிடும் போது ராஜி, "அண்ணா, நம் சேகரிடமும் லலிதாவிடமும் அந்தக் கோமாளி எவ்வளவோ ஆசையாக இருக்கிறானே, பலகாரங்கள் கொஞ்சம் கொடுக்கிறேன் கொண்டு போய்க் கொடுக்கிறாயா!" என்று கொஞ்சும் பாவனையில் கேட்டாள்.

எனக்கு இஷ்டமில்லை. இருந்தாலும் ராஜிக்காகச் சரி என்று ஒப்புக் கொண்டேன்.

ராஜிக்குச் சந்தோஷம். தானே ஓடி ஆடிப் பொட்டலங்கள் பல கட்டிக் கொண்டு வந்தாள். ஒரு பாத்திரத்தில் பாயஸமும் தந்தாள்.

ஜானைப் பார்க்க அனுமதி பெற்றுச் சர்க்கஸ் மைதானத்திற்குச் சென்றேன். ஒரு பக்கமாகக் குதிரைகள் கட்டியிருந்தன. அதைத் தாண்டி சிறிது தூரம் போனேன். யானைகளைப் பார்த்துக் கொண்டே ஒருவன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவன் முதுகு என் பக்கமாக இருந்தது. நன்றாகத் தெரிந்த ஒருவனுடைய தோற்றமாக இருந்தது அவன் உருவம். பளிச்சென்று தோன்றியது. ரவி! ஆமாம், ரவிதான்! சந்தேகமே யில்லை. அருகில் போய் "ரவி" என்று கூப்பிட்டேன்.

ஏதோ கேட்கக் கூடாத சொல்லைக் கேட்டு விட்டவன்போல மிரண்டு திரும்பினான் அவன்.



என்னைக் கண்டதும் அப்படியே இரண்டு கைகளாலும் முகத்தைப் புதைத்துக் கொண்டு, "மணி, மணி!" என்று கதறலாரம்பித்து விட்டான். ஒரு கணம்தான் நான் அவன் முகத்தைக் கண்டேன். ஆனால் அந்த ஒரு கணம் போதும், அவன் முக விகாரத்தை எனக்கு எடுத்துக் காண்பிக்க! ரவியா இது! அவனுக்கு எப்படி இந்தக் கதி நேர்ந்தது!

"ரவி, இது எல்லாம் என்ன!" என்றேன். எனக்கு வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

"இதோ வந்து விடுகிறேன்" என்று கூறி அருகிலிருந்த சிறிய கூடாரத்திற்குள் ஒரு தடியை ஊன்றிக் கொண்டே நொண்டி நொண்டிப் போனான் ரவி. அவனது ஒரு கால் முட்டிக்குக் கீழ் இல்லை. சிறிது நேரம் கழித்து அந்தக் கூடாரத்திலிருந்து கோமாளி முக மூடியுடன் வெளியே வந்தான். ரவி தான் கோமாளி ஜான் என்னும் ரகசியத்தை அப்பொழுதுதான் அறிந்தேன்.

"மணி, என்மேல் எவ்வளவோ கோபம் கொண்டிருப்பாய். ஆனால் என் கதையை நீ கேட்க வேண்டும்" என்று கூறி என்னை அந்த கூடாரத்திற்குள் அழைத்துப் போனான். ரவி கூறிய கதையைச் சுருக்கமாகக் கூறி விடுகிறேன்.

ரவி படிப்பு முடிந்து இந்தியா திரும்புவதாக எனக்கு எழுதியிருந்தான். அப்பொழுதுதான் லண்டன் நகரத்தில் ஐரோப்பாவிலேயே பிரசித்தி பெற்ற 'பார்னம் அண்டு பெய்லி' சர்க்கஸ் வந்திருந்தது. சர்க்கஸ் பார்க்கலாம் என்று போனான் ரவி. சர்க்கஸ் கூடாரத்தினருகில் போயிருப்பான். திடீரென்று ஒரு கார் வந்து அவன் பின்னால் மோதியது. அவ்வளவுதான் தெரியும் அவனுக்கு. இரண்டு நாட்கள் கழித்துக் கண் விழித்துப் பார்த்ததும், தான் ஒரு ஆஸ்பத்திரியில் இருப்பதைக் கண்டான். முகத்திலும் உடம்பு முழுவதிலும் கட்டுப் போட்டிருந்தனர். வலது காலை முட்டிக்குக் கீழ் துண்டித்து அப்புறப்படுத்தியிருந்தனர். தான் முடவன் என்னும் உண்மையை அறிந்தான் ரவி. அவனுடைய உடம்பில் பல பாகங்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. முகத்தில் இரண்டு மூன்று எலும்புகள் முறிந்து விட்டன. ஒரு வாரத்தில் இந்த விவரம் முழுவதையும் சிறிது சிறிதாக அறிந்தான் ரவி.

சர்க்கஸ் முதலாளி ஒருவருடைய கார்தான் அவனை மோதியது. அவனுக்கு வேண்டிய உதவியை அவர் செய்யத் தயாராயிருந்தார். அவனை ஆயுட் காலம் முழுவதும் தாமே போஷிப்பதாகவும் அதற்கு வேண்டிய தொகையை அப்போதே அவன் பெயரில் பாங்கியில் போட்டு விடுவதாகவும் சொன்னார். யார் என்ன செய்து என்ன! தன் வாழ்வு இனி பாழ் என்று அறிந்தான் ரவி. ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தான். தன் நிலைமையை எங்களுக்கு அறிவித்தால் நாங்கள் அவன்பேரில் பச்சாத்தாபமும் இரக்கமும்தான் படுவோம். ராஜி அவனைத்தான் கல்யாணம் செய்து கொள்வாள். ஒரு முடவனை ராஜி கல்யாணம் செய்து கொள்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. தன் அருமை ராஜி நல்வாழ்வு வாழ வேண்டுமென்று எண்ணித்தான் அந்தக் கடிதத்தை எங்களுக்கு எழுதினான். ரவியின் உடம்பு குணமாகி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வர ஒரு வருடத்திற்கு மேலாயிற்று. 'பார்னம் பெய்லி' சர்க்கஸிலேயே ஒரு சிப்பந்தியாகச் சேர்ந்து கோமாளியாகப் பயிற்சி பெற்றான். அவனது அங்க ஹீனமே அவனுடைய கோமாளிச் சேஷ்டைகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது. அந்தச் சர்க்கஸ் கம்பெனியுடன் ஐரோப்பாவெல்லாம் சுற்றினான். சிறிய காலத்துக்கெல்லாம் தாய் நாடு போக வேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது. எனவே, இந்தியாவிலுள்ள ஒரு சர்க்கஸில் சேர்ந்தான். தன் பெயரை ஜான் என்று மாற்றி வைத்துக் கொண்டான். அவர்களுடன் பல ஊர் சுற்றிச் சென்னை வந்த பொழுது தான் என்னையும் ராஜியையும் அவன் பார்த்தான்.

மேலே கூறியதுதான் ரவி எங்களைப் பிரிந்த பின் அவன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள்.

"மணி, ராஜி சௌக்கியமாகக் குழந்தை குட்டியுடன் இருக்கிறாள் என்று கண்டதே போதும் எனக்கு. அதை அறிய என் மனம் எவ்வளவு பாடு பட்டது, தெரியுமா!" என்றான் ரவி.

"ராஜி சௌக்கியமாகத்தான் இருக்கிறாள், ரவி. உன் நினைவு கூட இருக்கிறது அவளுக்கு. பிறக்கப் போகும் குழந்தை பிள்ளையாக இருந்தால் உன் பெயரைத்தான் வைக்கப் போகிறாளாம் அவளுக்கு. நான்தான் உன்னைத் தப்பாக எண்ணி விட்டேன். என்னை மன்னித்து விடு" என்றேன். உணர்ச்சி மேலிட்டதால் என் நாத் தழு தழுத்தது. கண்ணில் நீர் மல்கியது. "யார் யாரை மன்னிப்பது, மணி! அப்படியெல்லாம் சொல்லாதே!" என்று எனக்கு ஆறுதல் சொன்னான் ரவி.

ராஜி கொடுத்தனுப்பிய பலகாரங்களையும் பாயஸத்தையும் விவரத்தைச் சொல்லிக் கொடுத்தேன். ஏதோ தேவாமிர்தம் கிடைத்தவனைப் போல் ஆவலோடு வாங்கிச் சாப்பிட்டான் அவன்.

"இந்தக் கோமாளி ஜான்தான் ரவி என்று தெரிந்தால் ராஜி ரொம்ப சந்தோஷப் படுவாள். நான் போய்ச் சொல்கிறேன் அல்லது நீயே என்னுடன் வா!" என்றேன்.

"என்ன, மணி! உனக்கு இது கூடத் தெரியவில்லை. ரவி என்று ஒருவன் இன்னும் இருக்கிறான் என்றே ராஜிக்குத் தெரியக் கூடாது. நான் அதற்காகத்தானே என் பெயரை மாற்றிக் கொண்டேன். உங்களைப் பற்றி அறிய வேண்டும் என்ற என் ஆவலையும் ஆசையையும் கட்டுப் படுத்திக் கொண்டேன். நான் இந்த நிலையில் இருக்கிறேன் என்றால் அவள் மனம் என்ன பாடு படும்! அவள் தன்னையே நொந்து கொள்வாள். அவள் வாழ்க்கையே பாழாகிவிடும்" என்றான் உணர்ச்சியுடன்.


அவன் கூறியதில் உண்மை மிளிர்ந்தது. என்ன தியாக புத்தி! எவ்வளவு அறிவும் குணமும் படைத்தவன்! இவனுக்கா இந்தக் கதி! இவனை நான் எவ்வளவு தப்பாக எண்ணி விட்டேன்!

ரவி தான் கோமாளி ஜான் என்று நான் ராஜியிடம் சொல்லவேயில்லை. சர்க்கஸ் சென்னையில் இருந்த நாட்களில் தினம் நான் ராஜியுடனும் குழந்தைகளுடனும் போய்ப் பார்த்து வந்தேன். இரண்டு மூன்று நாட்கள் தனியாகப் போய் ரவியுடன் பல மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

கூடாரத்தை எடுத்து விட்டார்கள். சர்க்கஸ் ஊரை விட்டுப் போய்விட்டது. ரவியும் அத்துடன் போய் விட்டான்.

ராஜிக்கு ஒரு வேளை ஜான்தான் ரவி என்று தெரியுமோ, என்னவோ! பெண்களுக்கே விவரிக்க முடியாத ஒரு ஊக சக்தி உண்டு என்பார்கள். நான் எப்படி அவளிடம் கேட்பேன்!

ராஜிக்கு ஆண் குழந்தைதான் பிறந்தது. ரவி என்று அவனுக்குப் பெயர் வைப்பதற்கு நான் தடை ஒன்றும் சொல்லவில்லை. என் விருப்பமும் அதுவாக இருக்கும் பொழுது எதற்கு நான் குறுக்கே நின்று தடை சொல்லப் போகிறேன்!



லலிதா

காலை வேளைக்குரிய லலிதா ராகத்தின் உருவகப்படத்தை மேலே காணலாம். மிகுந்த வேதனையுடன் காதலர்கள் பிரிவதையும் இரவும் பகலும் பிரிவதையும் சங்கேத பாஷையில் அது வெளியிடுகிறது.

பருவங்களுடனும் பகல் - இரவின் குறிப்பிட்ட நாழிகைகளுடனும் இணைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் சமயம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.

தினசரி இரவிலும் பகலிலும் அந்தந்த நாழிகைக்கு ஏற்ப ராகங்கள் உருவகப்படுத்தப்படுகின்றன. அகவத்தில் பாடும் ராகங்களுக்கு நீங்கள் பேசப்பிடுவோம்.

தேனீர்

இரவு பகல் எந்த வேளையிலும், எந்த சீஸனிலும் தேனீர் உற்சாகம் அளிக்கிறது.



4. துளசி பூஜை

சுதாகருக்கும் இரவில் தூக்கம் பிடிக்கவில்லை. பரீட்சைக் கவலையே இப்படித்தான்! மகா தொல்லை தரக்கூடியது என்று அவன் தன் மனத்தைத் தேற்றிக்கொள்ள விரும்பினான். ஆனால் அவனுக்கும் அந்தக் கவலைக்கும் காத தூரம் அல்லவா இருந்தது! இரவில் கண் விழித்ததனால் அவனுக்குக் களைப்பே தட்டவில்லை. அதற்குப் பதிலாக அவன் மனம் மலர்ச்சியுற்றிருந்தது; உள்ளம் உற்சாக மூற்றிருந்தது: உடல் புல்லரித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி மனோரமாவின் நினைவு ஏன்தான் எழுந்து கொண்டிருந்ததோ, அவனுக்கே அது புரியாப் புதிராக இருந்தது. நடு நடுவே மனோரமா பாடிய பாட்டின் ஒலி இனிமையாக அவனுடைய காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. அதோடு நின்றுவிடவில்லையே! உள்ளத்திலும் அல்லவா ஊடுருவிப் பாய்ந்து இனந் தெரியாத இன்ப வேதனையை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது! மனோரமா கண்ணெதிரிலேயே உட்கார்ந்து பாடிக் கொண்டிருப்பது போன்ற பிரமை அவனுக்கு உண்டாயிற்று. அவ்வளவுதான்; அடுத்த கணம் அந்தச் சூழ்நிலை இந்திர லோகத்துச் சந்திர லோகத்து இன்பமாக உருவெடுத்து அவனைக் கரை காணாத மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கச் செய்து விட்டது.

அப்பொழுது அவனுக்கு இருள் சூழ்ந்த நள்ளிரவின் அமைதி அசாத்தியமாகப் பிடித்திருந்தது; வேண்டியும் இருந்தது.

வயது வந்த வாலிபனான சுதாகரின் முகத்திலே இடையிடையே சிரிப்புக் கோடிட்டது. ஏதோ கிடைத்தற்கரிய பொருள் கிடைத்தது போன்ற பூரிப்புப் பளிச்சிட்டது. ஆனால் அந்தப் பொருள் என்ன என்பதுதான் அவனுக்கே சரிவர விளங்கவில்லை. மனோரமாவின் மந்திர சக்தி தோய்ந்த மான் விழிகள் செய்த வேலையாக இருக்குமோ அது?

மனோரமர்வின் துன்பத்தைப் போக்கி இன்பம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம்தான் சுதாகரை இந்த நிலையில் கொண்டு வந்து விட்டிருந்தது. 'பிறர் துயரைத் தீர்ப்பது புண்ணியம் என்கிறார்களே, அது ஏன்?' என்பது இன்றுதான் சுதாகருக்குத் தெற்றென விளங்கியது. பிறருக்கு இன்பம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணமே ஆத்மாவை இவ்வளவு புல்லரிக்கச் செய்தால், பிறருக்கு உண்மையிலேயே இன்பம் சேர்க்க முடிந்து விட்டால் அதனால் ஆத்மாவுக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும்?—சுதாகர் அந்த மகிழ்ச்சியைக் கற்பனைக் கண் கொண்டு காணுவதில் தன் மனத்தை ஈடுபடுத்தினான்.

ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அவன் யோசித்துப் பார்க்கவில்லை. மனோரமாவுக்கு மட்டும் துயரத்தை நீக்கி இன்பம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் எழுவானேன்? உலகத்தில் துயர் படுபவர்களுக்குக் குறைவு ஏது? இந்த உலகத்தில் மனோரமா மட்டுந்தானா துயரத்துக்கு உள்ளானவள்? இந்த உலகத்தில் எத்தனை எத்தனையோ பேர் அப்படியிருக்கும்பொழுது அவர்களை மறந்து விட்டு மனோரமாவுக்கு மட்டும் இன்பம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவன்

மனத்தில் எழுவானேன்? இந்தக் கேள்விகளெல்லாம் நம் மனத்தில் எழுகின்றனவேயொழியச் சுதாகரின் மனத்தில் சிறிதும் தலை காட்டவில்லை.

சுதாகரின் தாய் தந்தை அவனுக்கு மூன்று நான்கு வயதாயிருக்கும்பொழுதே, அவனைத் தனியே தவிக்க விட்டுவிட்டுச் சென்று விட்டனர். அவனுடைய தந்தை நல்ல கல்வி கேள்வியிற் சிறந்தவர். தம் முயற்சியிலேயே முன்னுக்கு வந்தவர். பிறர் உதவியை நாடாதவர். ஆனால் காலன் அகாலத்திலேயே அவரைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டான். சுதாகரின் தலையிலே தாய் தந்தையருடன் வாழும் பாக்கியம் எழுதப்படவில்லை. ஏனெனில் கணவன் காலமான ஆறு மாதத்துக்குள்ளேயே அவனுடைய தாயாரும் கண்களை மூடிவிட்டாள். எனவே, சுதாகர் தாய் தந்தையற்ற அநாதையாகி விட்டான். ஆனால் சுதாகரின் சித்தப்பா அவனை எடுத்து வந்து வளர்க்கலானார். அவருடைய பொருளாதார நிலை நடுத்தரமானதுதான். அவரும் நன்றாகப் படித்திருந்தார். நல்ல நாணயஸ்தருங் கூட. இவ்விரு குணங்களின் காரணமாக உள்ளதை ஒளிவு மறைவின்றி உரைக்கும் இயல்பினராகிவிட்டார். பிறரைக் கால் கை பிடித்து—அதாவது முகஸ்துதி செய்து முன்னுக்கு வர முயல்வதில் அவருக்கு ஒரே வெறுப்பு. அதன் பயனாகச் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்த பொழுதிலும் அவரால் மேலும் மேலும் முன்னுக்கு வர முடியவில்லை. முன்னுக்கு வரவேண்டிய சந்தர்ப்பங்களில் எல்லாம் அவருடைய நேர்மையும் ஒளிவு மறைவின்மையும் ஒளிர்ந்திருந்து முட்டுக் கட்டை போட்டு விட்டன. எனவே, அன்றைக்கு இன்று பழுதில்லாமல் அதே வேலையில் அவர் இருக்கும்படியாகி விட்டது.

சுதாகரை அவனுடைய சித்தப்பா மட்டும் அல்ல, சிற்றன்னைகூட மிகவும் நேசித்து வந்தாள். சிற்றன்னைக்குக் குழந்தை கிடையாது. எனவே, அவள் சுதாகரையே தன் குழந்தையாகப் பாவித்துப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வந்தாள். நாளடைவில் அவனுடைய சிற்றன்னை தனக்கென்று ஒரு குழந்தை இல்லையே என்ற குறையை மறந்தே விட்டாள் என்று சொன்னாலும் மிகையாகாது.


படிக்காவிட்டால் பிரயோஜனம் இல்லை என்று இன்றைய உலகம் முழுவதும் சொல்கிறதல்லவா? அதனால் படிக்கும் வயது வந்ததும், சுதாகரின் சித்தப்பாவும் சிற்றன்னையும் அவனைப் பள்ளியில் சேர்த்தார்கள்.

சுதாகர் நல்ல புத்திக்கூர்மை வாய்ந்தவனாக இருந்தான். எனவே, ஆரம்பப் பள்ளியின் படிப்பைக் கூடிய விரைவில் முடித்துக் கொண்டு உயர்தரப் பள்ளியில் சேர்ந்தான். அந்தப் பள்ளிக்கு நல்ல பெயரும் வாங்கித் தந்தான்.

படிப்பில் பழுதில்லாமல் தேறிவந்த சுதாகருக்கு வயது இருபதாகி விட்டது. அவன் எம். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். சுதாகரின் உபாத்தியாயர்களும் நண்பர்களும் ஒரு நாள் அவன் நன்கு முன்னுக்கு வருவான் என்று நம்பினர். அந்த நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டும் இருந்தனர்.

அவர்களுடைய அந்த நம்பிக்கை ஆதாரமற்ற வகையைச் சேர்ந்ததல்ல. பள்ளி, கல்லூரி ஆகியவற்றின் உபகாரச் சம்பளங்களும் பரிசுகளும் அவனுக்கு வருஷா வருஷம் விடாமல் கிடைத்து வந்தன. படிப்பு விஷயத்தில் மட்டும் அல்ல; வேடிக்கை விளையாட்டுக்களிலும், சபை – சங்கம் ஆகியவற்றின் அலுவல்களிலும்கூட அவன் பெயர்தான் முதன்மை ஸ்தானம் பெற்றிருந்தது. அநேக பணக்காரப் பையன்களுக்கு அவன் பாடம் சொல்லித்தரக்கூடப் போய் வந்தான். எனவே, அவன் கல்வி வளர்ச்சிக்கான செலவுப் பொறுப்புகளை அவன் சித்தப்பா ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் நேரவில்லை. அதுமட்டும் என்ன? குடும்பத்தை நடத்தும் செலவுகளுக்குக் கூட அவனிடமிருந்து பொருள் உதவி கிடைத்து வந்தது. இம்மாதிரி குடும்பத்தின் நிலையறிந்து அவன் நடந்து கொள்ளவே, அவன் சித்தப்பாவும் சிற்றன்னையும் அவனை மனமார நேசித்தனர்; வாழ்த்தினர். அவனுடைய வார்த்தைகளுக்கு மிகுந்த மதிப்புக் கொடுத்தனர்.

ஊர் சுற்றுவது, உல்லாசப் பிரயாணம் போவது, வம்பளப்பது போன்ற விஷயங்களுக்கு அவனிடம் பொழுதும் இல்லை; பொருள் முதலிய சாதனங்களும் இல்லை. வேடிக்கை விளையாட்டுகள் என்றால் அவனுக்கு உயிர். எனவே, அவகாசம் கிடைக்கும் பொழுதெல்லாம்; வேடிக்கை விளையாட்டுகளில் ஈடுபடுவான். தேகப் பயிற்சிகள் முதலியன செய்வான். இந்தக் காரணங்களினால் உள்ளத்தைப் போலவே, அவன் உடலும் உறுதி பெற்றிருந்தது; மெருகு பெற்றிருந்தது. சுதாகரின் சித்தப்பா குழந்தைப் பருவம் முதல் அவனுக்குக் கல்வியைப்



போல—ஏன்? கல்வியைக் காட்டிலும் ஒரு படி மேலாகத் தேகப்பயிற்சிதான் முக்கியமானது என்று படித்துப் படித்துச் சொல்லியிருந்தார். அவர் உரையேற்றியது வீண் போகவில்லை. அவர் உபதேசப் படியே சுதாகர் தன் உடலையும் நன்கு உறுதிப்படுத்திக் கொண்டிருந்தான்.

அவன் படித்த கல்லூரியில் பெண்களும் படித்து வந்தார்கள். சுதாகருக்கு அவர்கள் எல்லோரையும் தெரியும். சிலருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பங்கூட அவனுக்கு வாய்த்திருந்தது. ஆனால் எல்லோரையும் விட்டு அவன் மனம் மனோரமாவைச் சுற்றியே வட்டமிடுவானேன்?

அவன் தன் அறையில் இருந்த வண்ணமே சுவரில் உள்ள சாளரங்களின் வழியே மனோரமாவின் வீட்டை அடிக்கடி பார்ப்பான். முதல் நாள் இரவுகூட அந்தச் சாளரங்களின் வழியேதான் ராமலால் உலவிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு 'யார்?' என்று திடுதிப்பென்று ஒரு கேள்வியைக் கேட்டு அவர் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த பயங்கரப் பேய் எண்ணங்களுக்கு மடை போட்டிருந்தான்.

இரண்டு வீடுகளும் ஒன்றையொன்று ஒட்டினாற் போலிருந்தன. மாடிகளின் அமைப்புக் கூட ஒரேவிதமாகத்தான் இருந்தது. மனோரமாவின் வீட்டு மொட்டை மாடியிலே துளசி மடம் கட்டித் துளசிச் செடி வைக்கப்பட்டிருந்தது. மனோரமா தினமும் துளசி பூஜை செய்ய அங்கே வருவாள். தன் வீட்டு மாடியிலிருந்த வண்ணம் சுதாகர் எத்தனையோ தடவை மனோரமா துளசி பூஜை செய்வதைப் பார்த்திருக்கிறான். ஆனால் அந்தக் காரியம் அவனுக்கு மிக மிகச் சாதாரணமானதாகவும், அதிக மகத்துவம் அற்றதாகவும்தான் இன்று வரை பட்டிருக்கிறது. ஆனால் இன்றோ அந்தக் காரியம் அவனுக்கு வெகு வெகு மகத்துவம் வாய்ந்ததாகப் பட்டது.

"மனோரமா துளசி பூஜைக்கு எப்பொழுது வருவாள்? இன்னும் வரக்காணோமே? இன்று ஏன் இவ்வளவு நாழிகை ஆகிறது!"

இம்மாதிரி அர்த்தமற்ற பிறர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் சுதாகர் இதுவரை ஒரு பொழுதும் தன் பொழுதை வீணாக்கியதில்லை; அநாவசியமாகத் தன் மூளையைச் செலவிட்டதும் இல்லை. அப்படியிருக்கும்பொழுது இன்று மட்டும் அவனுடைய மூளை இப்படிப் போவானேன்? அவனுடைய மனம் புது வழியில் நடம் பற்றிச் செல்லுவானேன்?

அவனுடைய உள்ளத்திலே மனோரமாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை-அலை மலையாக எழுந்து கொண்டிருந்தது. ஆனால் அவன் மனோரமாவைத் தன் மனம் நாடுகிறது, பார்க்க விரும்புகிறது, அவளுக்காகத் துடியாய்த் துடிக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. ஆதைக் கண்ட அவனுடைய உள்ளமும் கண்களும் அவன் பேச்சை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டன. உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் அவனுக்கு எதிராக மறியல் செய்து அவனுடைய குட்டை உடைக்க ஆரம்பித்து விட்டன. அப்புறம் அவன் ஒப்புக் கொண்டால்தான் என்ன, ஒப்புக் கொள்ளாமற் போனால்தான் என்ன?

எனவே, அவன் 'வேண்டியது படித்து விட்டேன். இன்னும் எதற்கு வீணாக மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ள வேண்டும்? ஒரு நாள் படிக்காவிட்டால்தான், அப்படி என்ன குடி முழுகிப் போய்விடும்? நாளைக்குச் சேர்த்துப் படித்துக் கொண்டால் போயிற்று!' என்று கையில் எடுத்த புஸ்தகத்தைப் பிரிக்காமலேயே கீழே ஒரு புறம் போட்டு விட்டான். இதிலிருந்தே மறியல் செய்த உள்ளமும் கண்களும் வெற்றி கொண்டு விட்டன, அவற்றினிடம் அவன் ஜபம் சாயவில்லை என்பது தெரிகிறதல்லவா?

புஸ்தகத்தை விட்டெறிந்ததும் விட்டெறியாததுமாக, அவன் காதுகளிலே அபூர்வமான இனிய குரல் வந்து பாய்ந்தது. அவன் உடல் முழுவதும் ஒரு தடவை குலுங்கியது. உரோமங்கள் சிலிர்த்து நின்றன. அவன் குனிந்து சுவரில் உள்ள சாளரங்களின் வழியே பார்த்தான். மனோரமா துளசி மடத்துக்கெதிரே உட்கார்ந்து கொண்டு துளசியம்மனுக்குப் பூஜை செய்த வண்ணமே பிரார்த்தனை கீதம் பாடிக் கொண்டிருந்தாள்.

சரணம், சரணம், சரணம்!
அரவணை துயிலும் அழகன் மார்பை
அரைகணம் பிரியாத் துளசித்தாயே!
சரணம், சரணம், சரணம்!

அந்தப் பாட்டில் உள்ள சொற்களைக் காட்டிலும் ஸ்வரங்கள்தான் சுதாகரின் உள்ளத்தைக் கவர்ந்து ஈர்த்தன. பேதைப் பருவத்திலிருந்து அறிவைப் பருவத்தின் படியிலே காலடி எடுத்து வைத்துக் கொண்டிருந்த மனோரமாவின் இனிய தொண்டையிலிருந்து எழுந்த குரல் காற்றில் கலந்து சாந்தரஸம் ததும்பிய சூழ் நிலையை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. ஆனால் சுதாகரின் இருதயத்திலே மட்டும் இதற்கு எதிரிடையான பிரபாவத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது. அதாவது, அவனுடைய இருதயத்தின் அடித்தலத்திலே சிருங்கார ரஸத்தைக் குமிழியிடச் செய்து கொண்டிருந்தது. எனவே, அவன் அமைதியிழந்து உள்ளக் கிளர்ச்சி கொண்டான். மாணவன் சுதாகர், கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கும் சுதாகர், உள்ளத்தை ஒரு கட்டுப்பாட்டில் நிறுத்தியிருந்த சுதாகர், பச்சிளம் பாலகனைப் போன்ற சரளபாவத்துடன் மதிமயங்கிப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தான். பாட்டின் மதுரத் தன்மையிலே மனத்தைப் பறி கொடுத்துவிட்ட அவனது கண்களை எங்கோ கொண்டு செருகின.

மனோரமா பிரார்த்தனை தேம் பாடியவாறே துளசி அம்மனைப் பிரதக்ஷிணம் செய்தாள். அவள் கண்கள் எதேச்சையாக அடுத்தவீட்டு மாடியை நோக்கின. சாளரத்தின் இடுக்கு வழியே மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு தன்னையே அரைக் கண்களால் மதி மிறங்கிப் பார்த்துக் கொண்டிருந்த சுதாகரின் மீது அவளுடைய பார்வை விழுந்தது. அவ்வளவுதான்; அடுத்த கணம் அவள் வாய் அடைத்துப் போய்விட்டாள். வெட்கித் தலை குனிந்தாள்; நாணிக் கண் புதைத்தாள். பிரார்த்தனையும் பிரதக்ஷிணமும் நின்றன. அவளுடைய மாசு மறுவற்ற மகிழ்ச்சி நிறைந்த வதனம் வெட்கத்தினால் சிவந்து குங்குமமாகக் காட்சி அளித்தது.

சுதாகர் வைத்த கண் வாங்காமல் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். நின்று விட்ட பாடலின் ஸ்வர லயத்திலே அவனுடைய மனம் மெய்மறந்து நின்றது.

மனோரமா தன் கீழ் நோக்கிய கண்களை உயரத் தூக்கவில்லை. சட்டென்று தன் நினைவு வரவே, சரிந்து விழுந்து கொண்

★ ★ ★


கூத்தூர் திருமணங்கள்

★



● சென்ற ஜூன் மாதம் 21-ந் தேதி தஞ்சை ஜில்லா கூத்தூரில் 'கல்கி' காரியாலய விளம்பர இலாகாவைச் சேர்ந்த வி. நாராயணசாமிக்கும், கிழக்கிந்திய ரயில்வே ஸீனியர் அக்கௌண்டன்ட் ஸ்ரீ கே. கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களின் புதல்வி சௌ. பத்மாக்ஷிக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

● அதே முகூர்த்தத்தில் ஸ்ரீ கே. கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களின் மற்றொரு புதல்வி சௌ. ஜெயலக்ஷ்மிக்கும், மருங்கூர் ஸ்ரீ அருணாசல ஐயர் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி நாராயணசாமிக்கும் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.



● மேற்படி திருமணங்களுக்கு ஏராளமான உறவினர்களும் 'கல்கி' ஆசிரியரும் 'கல்கி' காரியாலய நண்பர்களும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசிர்வதித்தனர். மணமக்களுக்கு ராஜாஜி, டி. கே. சி., விந்தியப் பிரதேச லெப்டினன்ட் கவர்னர் கே. சந்தானம் முதலிய பல பிரமுகர்களிடமிருந்தும் மற்றும் பல அன்பர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. அன்று மாலை தஞ்சாவூர் குமாரி அம்புஜத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

★ ★ ★

டிருந்த மேலாக்கைச் சரி செய்து கொண்டு சுதாகரைக் கடைக் கண்ணால் பார்த்தாள்.

பெண்களின் அழகு என்றால் என்ன, எப்படியிருக்கும் என்பது சுதாகருக்கு அப்பொழுதுதான் முதல் தடவையாகத் தெரிந்தது. பெண்ணின் நடை, உடை, பாவனையிலே, அங்க அசைவு நெளிவுகளிலே அலை அலையாக அழகு எழுந்து அற்புதக் காட்சியைச் சிருஷ்டிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவும் அவனுக்கு நேரம் பிடிக்கவில்லை.

மனோரமா நாணிக் கண் புதைத்து நிற்பதை அவன் கண்டான்; அநுபவித்தான்; உணர்ந்தான். அவளை அதே பயந்த பாவனையுடன் விட்டுச் செல்வதை அவனுடைய ஆண் உள்ளம் அவ்வளவாக விரும்பவில்லை. அப்படிச் செய்வது ரஸப்படாது என்றும் தோன்றியது அவனுக்கு. மனோரமாவின் குடும்பத்துடன் என்று சொன்னாலும் சரி, அல்லது மனோரமாவுடனேயே என்று சொன்னாலும் சரி, முதல் நாள்தான் அவனுக்கு முதன் முதலாக அறிமுகம் செய்து கொண்டு பேசச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு அவளுடைய அறிமுகத்தை அதிகப்படுத்திக் கொள்ள முயன்றால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது. தோன்றியதை உடனே செயலில் நிறைவேற்றி விடவும் தீர்மானித்துவிட்டான்.

"மனோரமா! என்னைப் படிக்கவிடமாட்டாயா, என்ன?" என்று முன்பின் ஒன்றும் யோசியாமல், யோசனைக் கடலில் மூழ்கிய வாறே சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான்.

மனோரமாவும் கனவு உலகில் சஞ்சரிப்பவள் போல, "நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?" என்று கேட்டு வைத்தாள்.

மனோரமாவுக்கு ஆண் பிள்ளைகளுடன் பேசிப் பழக்கம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஏன்? தனக்குச் சமதையான அநேக வாலிபர்களுடன் கூட அவள் பேசியிருக்கிறாள். அப்படிப் பேசும்பொழுது அவளுக்குத் துளிக்கூடச் சங்கோசம் ஏற்பட்டதில்லை. செயற்கையாக நாணத்தை வரவழைத்துக் கொண்டு வாலிபர்களின் உள்ளத்தைக் கவர வேண்டும் என்ற எண்ணமே அவள் கற்பனையில் உதித்ததில்லை. ஆயினும் ஏனோ சரள சுபாவம் படைத்த, களங்கமற்ற, பயம் என்றால் என்ன என்பதையே அறியாத மனோரமா சுதாகருடன் பேசும் பொழுது உண்மையாகவே நாணிக்கோணி வெட்கமுற்று விட்டாள்.

"நீ ரொம்ப நன்றாகப் பாடுகிறாய். உன் பாட்டைக் கேட்ட பிறகு படிப்பிலேயே என் மனம் நாட்டங் கொள்ளவில்லை!" என்று சுதாகர் படிப்பில் மனம் செல்லாததற்குக் காரணத்தை விளக்கினான்.

"சரி! அப்படியானால் இனிமேல் பாடவில்லை!" என்றாள் மனோரமா.

"அடடா! அப்படிச் செய்து விடாதே! எனக்கு இவ்வளவு கடுந் தண்டனையா? அப்படி என்ன நான் பெரிய குற்றம் செய்து விட்டேன்?" என்று கேட்டான் சுதாகர்.

"நான் பாடுவதனால் உங்கள் படிப்புக் கெட்டு விடுகிறது என்று இப்பொழுது தானே நீங்கள் சொன்னீர்கள்?" என்று கேட்டாள் மனோரமா.

"ஹஹஹஹ! நான் வெறுமனே வேடிக்கைக்குச் சொன்னேன். என் படிப்பு சீக்கிரமே முடியப் போகிறது. நான் பரீட்சையில் கட்டாயம் தேறி விடுவேன். அதனால் இனிமேல் பரீட்சைக்காக அதிகம் உழைக்கத் தேவையில்லை!" என்றான் சுதாகர்.

"உங்கள் பரீட்சை எப்பொழுதோ?" சுதாகர் பேச்சுக் கொடுக்க விரும்புகிறான் என்பதை ஊகித்து உணர்ந்து கொண்டாள் மனோரமா. அதனால்தான் அவன் ஆசையைக் கெடுப்பானேன் என்று எண்ணி அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

"நான்கு நாட்கள்தான் இருக்கின்றன. நான் நாளைக்குப் புறப்படுவதாக இருக்கிறேன்!" என்றான் சுதாகர்.

ஏனோ தெரியவில்லை, மனோரமாவுக்கு அந்த வார்த்தைகளைக் கேட்கப் பிடிக்கவில்லை. சுதாகர் போனால் போகட்டுமே! அது அவளுக்குப் பிடிக்காமல் போவானேன்? இவ்வளவு நாட்களும் அவள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் தானே அவன் இருந்து கொண்டிருந்தான்! அடிக்கடி அவன் பட்டணத்துக்குப் போவதும் வருவதுமாகத்தானே இருந்து கொண்டிருக்கிறான்! இன்று வரை அவன் அப்படிச் செய்வது தப்பிதமாகப் படாத மனோரமாவுக்கு இன்று மட்டும் தப்பிதமாகப் படுவானேன்?

மனோரமாவையும் சுதாகரையும் ஏதோ ஒரு காந்த சக்தி கவர்ந்து இழுத்து கொண்டிருந்தது; ஒருவர்பால் ஒருவரை ஈடுபாடு கொள்ளச் செய்து கொண்டிருந்தது.

"எப்பொழுது திரும்புவீர்களோ?" என்று மென்மை தவழும் குரலில் சுதாகரைப் பார்த்துக் கேட்டாள் மனோரமா.

"நீ கூப்பிடும்பொழுது!"

ஆண்களின் அடக்கமற்ற தன்மைக்கு, வெட்கங் கெட்ட நிலைக்கு ஒரு உதாரணமாகப் பதில் அளித்தான் சுதாகர். விவேகம், நாகரிகம் இவற்றை அந்தக்கணத்துக்கு அவன் மறந்துதான் விட்டானோ, அல்லது மூட்டை தான் கட்டி வைத்து விட்டானோ, தெரியாது. அவன் கண்கள் அவள்மீதே நிலை பெற்றன. உதடுகளில் ஒரு குறுநகை நெளிந்தது. பெண்களைச் சிக்கலில் சிக்க வைத்து அதைக் கண்டு மகிழும் பழக்கம் இந்த ஆண் வர்க்கத்துக்கே பரம்பரை பரம்பரையாகப் படிந்த குணம் போலும்! இல்லாவிட்டால் இப்படி நாகரிகம் வாய்ந்த, மெத்தப் படித்த ஒரு வாலிபன் ஒரு பெண் தனியாக இருக்கும் பொழுது இப்படி அதிகப் பிரசங்கித்தனமான பதிலைச் சொல்லுவானா?



மைசூர் கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரியின் பட்டு நெசவுகள்

பட்டு நூல் நெசவின் பளபளப்பும், உழைப்பும் உறுதியும் கொண்ட அவற்றின் சிறப்பும், சுத்தமான பட்டு நூல் தயாரிப்புகளுக்கு விசேஷ வனப்பை அளிக்கிறது. உண்மையில் அது உங்களிடம் இருந்தால் நீங்கள் மகிழ்ச்சியால் பூரித்துப் போவீர்கள்.

ஜார்ஜெட், கிரேப், ஜார்ஜெட்டும் கிரேப்பும் கலந்த புடவைகள், ஜிப்பான், ஷர்ட்டிங்குகள் கோட்டிங்குகள் முதலியன.

தயாரிப்பவர்கள் :

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்

ஆரோக்கியம் அளிப்பவை அனைவரும் விரும்புபவை



டி. எஸ். ஆர். & கோ

வாசனைத் திரவியங்கள் தயாரிப்பவர்கள்

கும்பகோணம் (S. India)

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு, சேலம் ஏஜண்டுகள்: B. பசுபட்டாபி செட்டியார், (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது). கோயமுத்தூர். பம்பாய்க்கு ஏஜண்டுகள்: சர்மயா ஸ்டோர்ஸ், மாதுங்கா (G. I. P.)


இப்பொழுது! மக்ளீன்ஸ் க்ளோரோபில் சேர்ந்த

மற்றொரு உயர்தரப் பற்பசையைத் தருகின்றனர்!



உலகிலேயே மிகச் சிறப்பாகப் பற்களை வெளுக்கும் பற்பசையுடன் இயற்கைவழுங்கும் அர்க்கந்த நாசினி சேர்ந்ததுதான் இப்புதிய உன்னத பற்பசை — மக்ளீன்ஸ் பெராக்ஸைட். க்ளோரோபில் சேர்ந்த பற்பசையாகும்

இதின் உண்மையின் புதிய அம்சங்களிருக்கின்றன. மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையுடன் க்ளோரோபில் சேர்ந்திருக்கிறது. அசல் மற்றவை விடவில்லை, கால சோதனையில் நிரூபணமான எந்தப் பொருளும் இதில் நீக்கப்படவில்லை—அதே விசேஷத் திட்டத்தின்படி கருவானதுதான்—ஆனால் க்ளோரோபில் சேர்க்கப்பட்டது. ஆகவே க்ளோரோபில் பற்களை சுத்தம் செய்யாது. சுவாசத்தை சுத்தமாக்குகிறது. ஆகவே க்ளோரோபில்லின் பயனை அனுபவிக்கும்போதே பற்களும் தூவெண்மையுடன் பிரகாசிக்கவேண்டியது எவ்வளவு அவசியம்! மக்ளீன்ஸ் பெராக்ஸைட்—க்ளோரோபில் சேர்ந்த—பற்பசை உபயோகிப்பதுதான் அதற்கு நிச்சயமான வழி.



க்ளோரோபில் சேர்ந்த
ம க் ளீ ன் ஸ்
பெராக்ஸைட் பற்பசை

— பற்களை அதிக வெண்மையாக்குகிறது
— சுவாசத்தை மணமாக்குகிறது

மக்ளீன்ஸ் உபயோகிப்போர் கவனிக்கவும்:— அசல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையும் வழக்கம்போல எங்கும் கிடைக்கும்.

வியாபார விபரங்களுக்கு
ஜே. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி 6527, பம்பாய் 26. தபால் பெட்டி 387, கல்கத்தா.
தபால் பெட்டி 1370, சென்னை

CPN - 1 - TAM

மனோரமாவுக்கு அந்தப் பதில் பிடித்ததா இல்லையா என்று யாரால் சொல்ல முடியும்? அவள் பேசாமல் அப்படியே சிலை போல் நின்றாள். பிறகு சிறிது நேரம் கழித்துத் துளசியம்மனுக்குக் கைகூப்பி வணக்கம் தெரிவித்து விட்டுச் சூரியனைப் பூஜிக்கலானாள். சுதாகர் மாடிச் சுவரைப் பிடித்தபடியே நின்று கொண்டிருந்தான்.

சூரியனைப் பூஜித்து முடித்த பின் மனோரமா சுதாகரின் வீட்டு மாடியைப் பார்த்தாள். சுதாகர் மாடியிலேயே நின்று கொண்டிருப்பான் என்ற நம்பிக்கை இருந்தது அவளுக்கு. மனோரமா பூஜையை முடித்துவிட்டாள் என்பதை அறிந்த சுதாகர் மறுபடியும் மனோரமா இருந்த பக்கம் வந்து மாடியின் மொட்டைச் சுவரைப் பிடித்துக்கொண்டு நின்றான்.

"நாளைக்கே போகப் போகிறீர்களா?" என்று கேட்டாள் மனோரமா:

"போகாமல் எப்படி இருக்க முடியும்?" என்று பதில் அளித்தான் சுதாகர்.

"பாஸ் ஆனபிறகு கடிதம் எழுதுவீர்கள் அல்லவா?" என்று கேட்டாள் மனோரமா.

"கட்டாயம் பாஸ் ஆகி விடுவேன். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை?"—மண்டைக் கர்வம் பிடித்த மாணுக்கனுகப் பதில் அளித்தான் சுதாகர். "ஆனால் கடிதம் எழுதுகிறேனா இல்லையா என்பது வேறு விஷயம்!"

"அப்படியானால் நீங்கள் யாருக்கும் கடிதம் எழுதுவதே இல்லையா?" என்று தன் முழு பலத்தையும் பிரயோகித்துக் கேட்டாள் மனோரமா.

"எழுதுவது உண்டு. எழுதுகிறேன். கட்டாயம் எழுதுகிறேன்!"—சுதாகர் அழுத்தந் திருத்தமாகச் சொன்னான்.

"எப்பொழுது?"

"நான் ஒரு சபதம் செய்து கொண்டிருக்கிறேன். அந்தச் சபதம் நிறைவேறியதும் எழுதுகிறேன்."

"அது என்ன சபதமோ? அதை நான் தெரிந்து கொள்ளலாமோ?" என்று கேட்டாள் மனோரமா.

"அதை நான் எழுதப் போகும் கடிதத்திலேயே எழுதித் தெரிவித்து விடுகிறேன்!" என்றான் சுதாகர்.

"நல்லது. நான் உங்கள் கடிதத்தைக் கட்டாயம் எதிர்பார்ப்பேன்!" என்று சொல்லிவிட்டு மனோரமா கீழே போகப் புறப்பட்டாள். சுதாகர் நின்ற வண்ணம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். மனோரமா பூஜைக்காகக் கொண்டு வந்திருந்த பொருள்களையெல்லாம் சேகரித்து எடுத்துக்கொண்டு சுதாகரை ஒரு முறை தன் கடைக்கண்ணால் பார்த்து விட்டுப் புறப்பட்டாள்.

சுதாகர் வாய் திறவாமல் கண் கொட்டாமல் கனவு காண்பவனைப் போல் அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றான்.

"சுதாகர்!"—அவன் கனவைக் கலைக்கும் குரல் அவனுடைய காதுகளில் விழுந்தது. திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக அவன் சித்தப்பா மாடிப்படியேறி வந்து விட்டார்.

"என்ன, சித்தப்பா? என்ன விசேஷம்?" என்று கேட்டான் சுதாகர்.

"நான் மாதவப் பிரஸாதின் வீட்டுக்குப் போய் வருகிறேன். அவருடைய மனைவி இறந்து விட்டாளாம்!"

சாவுச் செய்தியைக் கேட்டதும் சுதாகருக்குத் தூக்கி வாரிப் போட்டது. சாவு எப்பொழுதுமே பயம் தருவதுதான். உலகத்தை அழிக்கும் இந்த உண்மை யாரைத்தான் பயமுறுத்தியதில்லை? சுதாகர் வேதாந்தத்தில் மரணம் எத்தகைய இடம் பெற்றிருக்கிறது என்று சிந்தனை செய்யலானான்.

தம்ஷ்ட்ரா கராலானி ச தே முகானி
த்ருஷ்ட்வைவ காலாநல ஸந்நிபானி.

அர்ஜுனனுக்குப் பகவான் விசுவரூப தரிசனம் அளிக்கும்பொழுது, அவன் அவருடைய வாயிலே பிரளய காலத்தின் கொழுந்து விட்டெரியும் அக்கினியைக் காண்கிறான். பயங்கரக் கோரைப் பற்களைக் காண்கிறான். சகல ஜீவராசிகளையும் ஏப்பமிட்டு அழிக்கும் சக்தி அதற்குள் அடங்கியிருப்பதைக் காண்கிறான்.

கீதையில் வர்ணிக்கப்பட்ட அந்தப் பயங்கர உருவம் சுதாகரின் நினைவிலே இடம் பெற்றது. அடுத்த கணம் மரணமும் கடவுளின் ஒரு உருவம்தான் என்ற எண்ணம் எழுந்தபொழுது அவன் மனத்துக்குச் சற்றே திருப்தி ஏற்பட்டது. அடுத்த வினாடி மனோரமா அவன் நினைவில் புகுந்தாள். அவன் மனத்தைக் கொள்ளை கொண்ட மனோரமா ஒருபுறம், மாதவப் பிரஸாதின் மனைவியைக் கொள்ளை கொண்ட மரண தேவதை மற்றொரு புறம், இப்படியாக மாறி மாறி இடம் பெற்றார்கள். அவன் மனம் மலர்ந்தது; கலங்கியது; கசங்கியது. கடைசியில் அந்தச் சிந்தனைகளைத் தொடர்ந்தாற் போலவே, 'நாற்புறங்களிலும் கொழுந்து விட்டெரியும் கடவுளின் முகங்களில் மக்கள் தாமாகவே வந்து விழுகிறார்கள்' என்னும் பொருள் தரும் 'விசந்தி வக்த்ராண்யபி விஜ்வலந்தி' என்ற கீதையில் உள்ள சுலோகத்தின் அடி அவன் நினைவுக்கு வந்தது.

அவ்வளவுதான்; அடுத்த கணம் அவன் நடுநடுங்கி வெலவெலத்துப் போய்விட்டான். 'அழகுங்கூட இந்தப் பயங்கரக் காலன் வாய்க்குள் விழுந்து மடிந்து மண்ணாகத்தான் வேண்டுமா?' என்பதை எண்ணிய பொழுது, 'யாருக்கும் மனைவி சாகக் கூடாது' என்ற எண்ணம் அவன் மனத்திலே முளைத்தது.

அப்பொழுது கீழே வழியில் யாரோ 'கட கட'வென்று அட்டஹாசச் சிரிப்புச் சிரித்தார்கள். அவன் காதில் அந்தச் சிரிப்பொலி விழுந்ததுதான் தாமதம்: அவன் கதி கலங்கி ஸ்தம்பித்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டான். (தொடரும்)



மொட்டைக் கடிதம் என்றால் திருப்பதிக்கோ திருச்செந்தூருக்கோ போய்ப் பிரார்த்தனை செலுத்திவிட்டு வந்த கடிதமென்று யாரும் நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். தன்னுடைய பெயரைக் காட்டிக் கொள்ளாமல் 'பரோபகாரி, தேசபக்தன், பொது நல ஊழியன், அடியார்க்கு அடியான், ஒரு நண்பன்' என்றெல்லாம் அடை மொழிகளை உபயோகித்து ஜனாதிபதியிலிருந்து ஜட்கா வண்டிக்காரர் வரைக்கும் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் லோகோபகாரமாகச் சில உத்தம சீலர்கள் எழுதும் கடிதங்களுக்குத்தான் 'மொட்டைக் கடிதம்' என்று பெயர். இப்படி மொட்டைக் கடிதம் எழுத எல்லோருக்குமே வந்து விடாது. இப்படிப் பட்ட கடிதம் எழுத முதலில் மனத்தில் பரோபகார சிந்தை ஏற்பட வேண்டும். அதோடு மட்டும் போதாது. யார் யாருக்கு எப்படி எப்படிக் கடிதம் எழுதவேண்டும் என்ற நோக்கம் அறிந்து எழுத வேண்டும். அதுவும் தவிர அவர்களுக்கு எந்த விஷயத்தைப் பற்றி எழுத வேண்டும் என்பதை உளவு வைத்துக் கூடிய வரையில் தெரிந்து கொண்டு எழுத வேண்டும். அப்படித் தெரிந்து கொள்ள வழி இல்லாவிட்டால் தன்னுடைய கற்பனைச் சரடை சாமர்த்தியமாக உபயோகித்து எழுத வேண்டும். இவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் என்னவென்றால், தான் ஒருவருக்கு எழுதும் கடிதத்தைப் பிறர் காணாமல் எழுதவேண்டும் என்பது தான். இவைகளையெல்லாம் யோசிக்கும் அளவில் மொட்டைக் கடிதம் எழுதுவதிலுள்ள சிரமம் எப்படிப் பட்டது என்று யாருக்கும் விளங்காமல் போகாது. அமெரிக்காவிலோ எங்கோ சாமர்த்தியமாக ஜேப்படி செய்யும் ஒருவரை மெச்சிப் பல பரிசுகள் கொடுத்தார்களாம்! அதைப் போல் சாமர்த்தியமாக மொட்டைக் கடிதம் எழுதும் ஒருவருக்கும் ஏன் பரிசு கொடுக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

மொட்டைக் கடிதாசு எழுதுகிறவர்களுக்குள் ஒரு போட்டி வைத்துப் பரிசளிக்க வேண்டுமென்ற திட்டத்தை நான் கொண்டுவருவது எதற்காக என்றால் அதனால் எங்கள் ஊருக்கு ஒரு பெருமை ஏற்பட வழி இருக்கிறது என்ற நம்பிக்கையால்தான். மொட்டைக் கடிதம் எழுதும் தொழிலில் மகா நிபுணன் திருவேங்கடம். அவன் எங்கள் ஊர்வாசி. இதை நான் இப்பொழுது பெருமையாகச் சொல்லிக் கொள்வதை விட மொட்டைக் கடிதாசு எழுதுவதை மெச்சி அவனுக்கு ஒரு பரிசும் கிடைத்து விட்டால் இன்னும் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாமல்லவா! அதற்காகத்தான் இதற்கொரு பரிசுத் திட்டம் இருக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

திருவேங்கடத்தினுடைய தகப்பனாரும் பாட்டனாரும் அவனுடைய வாழ்க்கையைச் சுகமாக நடத்துவதற்கு வேண்டிய சொத்துச்சேர்த்து வைத்திருந்தார்கள். உத்தியோகம் எதுவுமில்லாமல் பொழுதைக் கழிப்பது அவனுக்குச் சோம்பேறித்தனமாகப் பட்டதால் மொட்டைக் கடிதம் எழுதும் வேலையை ஒரு சிறந்த பணியாகக் கொண்டான். இதற்காக அவன் மாதம் ஐந்தாறு ரூபாய் தயங்காமல் செலவு செய்வது வழக்கம். மொட்டைக் கடிதாசுகளில் அடைமொழிப் பெயர்களையே கையொப்பமாகப் போட்டு வந்த காரணத்தால் திருவேங்கடம் என்று கையொப்பம் இடுவதே அவனுடைய பழக்கத்திலிருந்து விலகி விட்டது. எனவே, வேறு எதிலாவது தன் சொந்தக் கையொப்பம் இடவேண்டிய அவசியம் ஏற்பட்டால் கூட 'பரோபகாரி, உண்மை உபகாரி' என்று ஏதாவது தவறுதலாகக் கையெழுத்துப் போட்டு விடுவதே அவனுடைய வழக்கம்.

ஒரு சமயம் எங்கள் தெருவிலுள்ள ஒருவருடைய பெண்ணிற்குக் கல்யாணமாக வேண்டியிருந்தது. கல்யாணச் செலவிற்குப் பணமில்லாததால் தன்னுடைய வீட்டை விற்றுவிட அவர் தீர்மானித்தார். சென்னையிலிருந்த ஒரு கனவான் அந்த வீட்டை வந்து பார்த்துவிட்டு விலை பேசி வாங்கிக் கொள்வதாக முடிவு செய்துவிட்டுச் சென்றார். இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் எப்பொழுதுமே திருவேங்கடத்திற்குக் கவலை உண்டு. உடனே சென்னையிலிருந்து வந்தது யார் என்று விசாரித்துத் தெரிந்து கொண்டு அவரிடம் அனுதாபம் கொண்டு கடிதம் எழுதலானான்.

சென்னை யம்பதியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ராமானுஜாச்சாரியார் ஸ்வாமி சன்னதிக்கு அடியேன் தாளும் தடக்கையும் கூப்பித் தண்டம் சமர்ப்பித்து எழுதிக் கொண்ட விக்ஞாபனம். தேவரீர் எங்களுடைய திவ்ய க்ஷேத்திரத்திற்கு, அதுவும் எங்களுடைய தெருவிற்கே எழுந்தருளி எங்களுடைய திருவீதியிலேயே ஒரு கிருஹத்தை வாங்கி அங்கேயே எழுந்தருளிக் காலக்ஷேபம் செய்யத் திருவுள்ளம் பற்றியது கண்டு எங்களுக்கெல்லாம் பரம சந்தோஷம்தான். இருப்பினும் தேவரீருடைய உன்னத குணங்களையும், தேவரீரின் குடும்ப க்ஷேமத்தையும் எண்ணும் காலத்தில் என்னைப் போன்ற பொதுநல உபகாரிகள் தவறாமல் தங்களுடைய கடமையைச் செய்தாக வேண்டியிருக்கிறது. தேவரீர் வாசம் செய்யத் திருவுள்ளம் கொண்டு கிரயம் கொடுத்து வாங்க

கொண்ட வீரராகவாச்சாரியாருடைய கிருகத்தைப் பற்றிப் பல பெரியோர்கள் பல தோஷங் களைச் சொல்லி இருக்கிறார்கள். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னால் அவ்வீட்டில் குடியிருந்த ஒருவருடைய பத்தினியை ஏதோ ஒரு பூதம் வந்து கிணற்றில் தூக்கிப் போட்டு விட்டதாம். அவளைக் கிணற்றிலிருந்து உயிரோடு எடுப்பதே பெரும்பாடாகி விட்டதாம். இப்பொழுது அந்த வீட்டில் வசிக்கிறாரே வீரராகவாச்சாரியார், அவருடைய தர்ம பத்தினியும் தினமும் கிணற்றில் விழுந்து விடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருக்கிறாளாம். வீரராகவாச்சாரியார் ஸ்வாமி தம் தர்ம பத்தினியைக் கிணற்றில் விழாமல் பாதுகாப்பதற்காகவேண்டி வீட்டை விட்டு எங்கும் செல்வதில்லை. இத்தகைய காரணங்களால்தான் அவர் அந்த வீட்டை விற்று விட முயற்சி செய்கிறாராம். எனக்கும் வீரராகவாச்சாரியார் ஸ்வாமிக்கும் விரோதம் எதுவுமில்லை. தேவரீருடைய பகவத் பக்தியையும், ஆசார அனுஷ்டானங்களையும், சீலத்தையும், தர்ம சிந்தையையும், குடும்பத்தின் உயர்வையும் கேள்விப்பட்டபின் அடியேனைப் போன்றவன் விஷயம் தெரிந்திருந்தும் பேசாமலிருக்க முடியவில்லை. அதற்கு மேல்தான் இந்தக் கடிதத்தை தேவரீருக்கு எழுதத் துணிந்தேன். பல காரணங்களால் அடியேன் நாமதேயத்தைக் குறிப்பிடாமல் இக்கடிதம் எழுத நேர்ந்தது.

இப்படிக்கு,

ஸ்ரீ வைஷ்ணவ தாஸானுதாஸன்.

இந்தக் கடிதத்தை ராமானுஜாச்சாரியார் படித்த வுடனேயே ஒரு முடிவுக்கு வந்து விட்டார். வீடு வாங்க வேண்டுமென்ற அவருடைய தீர்மானத்தைக் கை நழுவ விட்டுவிட்டார். ஏற்கெனவேயே அவருடைய தர்ம பத்தினி தனக்கு வைரத் தோடு வாங்கித் தரவில்லை என்பதற்காக அடிக்கடி தூக்குப் போட்டுக்கொண்டு விடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தாள். அவரும் ஒரு துண்டுக் கயிறு வீட்டில் கிடந்தாலும் ஏதாவது விபரீதமாகிவிடப்போகிறதே என்று பயந்து எங்கே கயிற்றைக் கண்டாலும் எடுத்து ஒளித்து வைக்கிறார். இந்த நிலையில் அவர் ஒரு தோஷம் நிறைந்த வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு அங்கே குடி புகுந்தால் அவள் அங்கு கிணற்றில் விழுந்து வைத்தால் என்ன செய்வது! தூக்குப் போட்டுக் கொள்வதை விடக் கிணற்றில் விழுவது இன்னும் சுலபமல்லவா! திருவேங்கடம் எழுதிய மொட்டைக் கடிதாசுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டு அவன் வெற்றி யடைந்தது ஆச்சரிய மில்லை யல்லவா!

ஸ்ரீ வைஷ்ணவ தாஸானு தாஸனாக ஒரு கடிதத்தில் விளங்கும் திருவேங்கடம் சைவ சமய அடியார்க்கு அடியானாகவும் ஒரு இடத்தில் மாறுவதுண்டு. இதெல்லாம் அவன் எந்தச் சமயத்தில், எந்த மனிதருக்குக் கடிதம் எழுத நினைக்கிறானோ, அந்த மனிதரின் சமயக் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் குண விசேஷத்திற்கும் ஏற்ற முறையில் அமையும்.

திருவேங்கடம் நெடுநாள் வரையில் இந்தத் தொழிலைத் தான் ஒருவனாகவே இருந்து மிகவும் வெற்றிகரமாக நடத்தி வந்தான். ஆனால் நாளடைவில் இன்னுமொரு துணையோடு தொழிலை நடத்தினால் இன்னும் மிக வெற்றிகரமானதாக்கலாம் என்று பட்டது. அவசியம் அவனுக் கொரு நல்ல துணையும் வேண்டித்தா னிருந்தது.

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (DIABETES) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ளவரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

•

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0

(பாக்கிங், தபால் செலவும் இனாம்)

•

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K.M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா



"நீ கணக்குத் தப்பாகப் போட்டதுக்குத் தான் இரண்டு அடி கொடுத்து விட்டேனே? இன்னும் எதற்குக் கையை நீட்டிக் கொண்டிருக்கிறாய்?"

"கையோடு கையாய், அப்பா நீங்கள் கடைக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியைக் கேட்டு வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்!"

அதற்காகத் தன்னோடு இன்னொரு சகாவையும் சேர்த்துக் கொண்டு அவனுடைய கையெழுத்தில் கடிதம் எழுதினால் தன்னிடம் பலர் அனுதாபம் காட்டுவது போன்ற எண்ணம் கடிதத்தைப் படிக்கும் மனிதருக்கு ஏற்படுமே! திருவேங்கடம் தீவிரமாக யோசித்து உற்ற நண்பன் ஒருவனையும் கண்டு பிடித்து விட்டான். வேலை இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் ரங்கசாமியோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டான் திருவேங்கடம்.

திருவேங்கடம் அடிக்கடி ஹோட்டலுக்கு அழைத்துப் போய் ரங்கசாமிக்கு டிபன் காப்பி வாங்கிக் கொடுக்க வேண்டியது. அதற்குப் பதிலாக ரங்கசாமி திருவேங்கடம் யார் யாருக்கு எப்படி யெல்லாம் கடிதம் எழுதச் சொல்கிறானோ அப்படி யெல்லாம் எழுத வேண்டியது. எக்காரணத்தைக் கொண்டும் இந்த ரகசியத்தை யாரிடமும் சொல்லக் கூடாது. இதுதான் ஒப்பந்தம். இந்தக் கூட்டு ஒப்பந்தத்தின் பேரில் ஊரில் உள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் சளைக்காமல் மொட்டைக் கடிதங்கள் எழுதலாயினர். ஸ்ரீமான் திருவேங்கடம் புத்தியிலும் கற்பனையிலும் சிறந்தவர். ரங்கசாமி பல ரகமான கையெழுத்துக்களை மாற்றி மாற்றி எழுதுவதில் சூரன். கேட்க வேண்டுமா! யாருக்குக் கெடுதல் செய்ய வேண்டுமானாலும் யாருடைய காரியங்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டுமானாலும் அவர்களால் முடியும். அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளாதே. அவனுக்கு உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்காதீர்கள். அந்த வீட்டை வாங்காதீர்கள். அவனை நம்பாதீர்கள். இவனுக்கு உத்தியோகம் கொடுக்காதீர்கள். அவனுக்குப் பண உதவி செய்யாதீர்கள். இப்படிப்பட்ட நல்ல கைங்கர்யத்தை எல்லாம் லோக க்ஷேமத்திற்காகத் தங்கள் கடிதம் மூலமாகப் பிறரிடமிருந்து எவ்வித பிரதிப் பிரயோஜனமும் கருதாமல் தடங்கலின்றியில் அவர்கள் நடத்தி வந்தனர்.

ஒரு நாள் ரங்கசாமி தன் வீட்டிலுள்ள கறவை குறைந்து போன பசுமாட்டை யாரிடமாவது நல்ல விலைக்கு விற்றுவிட்டு வேறு மாடு வாங்க நினைத்தான். பக்கத்து கிராமத்திலிருந்த ஒரு விவசாயி அந்தப் பசுமாட்டை வந்து பார்த்து விலை பேசி நிர்ணயம் செய்துவிட்டு இரண்டு நாள் கழித்துப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பசுமாட்டை ஓட்டிக் கொண்டு போவதாகச் சொல்லிச் சென்றான். இதையெல்லாம் கவனித்து வந்த திருவேங்கடத்தினால் சும்மாயிருக்க முடியவில்லை. கறவை குறைந்த பசுவை விலை பேசி வாங்க நினைக்கும் விவசாயியிடம் எல்லையற்ற அனுதாபம் பிறந்தது. உடனேயே அந்த விவசாயிக்கு ஒரு மொட்டைக் கடிதம் வரைந்து விட்டான், 'பால் வறண்ட பசு, அதை விலைக்கு வாங்காதே' என்று. இரண்டு நாள் கழித்துப் பணத்தோடு வருவதாகச் சொன்ன மனிதரை எதிர்பார்த்து ரங்கசாமி ஏமாற்றமடைந்தான். அவனுக்குப் பலவித சந்தேகங்கள் ஏற்படலாயின. அந்தச் சந்தேகங்களில் ஒரு வேளை திருவேங்கடம் மாடு வாங்கத் தீர்மானித்த மருதமுத்துவுக்கு 'மொட்டைக் கடிதாக எழுதியிருப்பானோ' என்ற சந்தேகம் தான் பிரதான்யமாக இருந்தது. இதற்கப்புறம் அவனுக்குத் தூக்கம் வருமா! உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக மருதமுத்துவைப் போய்ப் பார்க்க நினைத்து அவனிருந்த கிராமத்தைத் தேடிச் சென்றான்.

மருதமுத்து எப்பொழுதுமே சத்தியத்திற்கும் உண்மைக்கும் கட்டுப்பட்ட விவசாயி. அவன் ரங்கசாமியைக் கண்டதும் தனக்கு வந்திருந்த அனாமதேயக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். கடிதத்தைக் கண்டதும் ரங்கசாமியின் உள்ளம் பதறியது; உதிரம் பொங்கியது. தனக்குத் துரோகம் நினைத்த திருவேங்கடத்தை வேறு வழியில் பழி தீர்த்துவிட நினைத்தான். நெஞ்சில் கொண்டுள்ள இந்த ஆத்திரத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமலேயே வழக்கம்போல் அவன் செய்யும் மொட்டைக் கடிதத் தொழிலுக்கு உதவியாளாக இருப்பதுபோல் இருந்தான். ஆனால் ரங்கசாமியும் சும்மாயில்லை. திருவேங்கடம் யாருக்கு மொட்டைக் கடிதம் எழுதுகிறானோ, அந்த மனிதருக்கே உடனடியாக இவன் ஒரு மொட்டைக் கடிதம் எழுதுவான், அவருக்கு வந்துள்ள மொட்டைக் கடிதத்தை நம்ப வேண்டாமென்று! அதோடு மட்டும் ரங்கசாமி நிற்பதில்லை. யாரைப்பற்றி மொட்டைக் கடிதாக எழுதப்படுகிறதோ அவருக்கும் ஒரு மொட்டைக்கடிதம் எழுதுவான். அவரைப்பற்றிக் குறிப்பிட்ட பேர்வழிகளுக்குத் திருவேங்கடத்தினால் மொட்டைக் கடிதம் எழுதப் பட்டிருப்பதாக. இதனால் திருவேங்கடம் ரகசியமாகச் செய்யும் பொதுநலத் தொண்டு அம்பலத்திற்கு வரத் தொடங்கியது. திருவேங்கடம் வீட்டை விட்டு வெளியே கிளம்பாமல் தன் உடம்பைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

அந்தரங்கமான தன்னுடைய காரியங்கள் எப்படி வெளியுலகத்திற்குத் தெரிந்தது என்பது பற்றி அறிந்து கொள்ளத் திருவேங்கடம் சிரமப் படவில்லை. தனக்கு அந்தரங்கத் தோழனாக ரங்கசாமியை ஏற்படுத்திக் கொண்டதுதான் ஆபத்தாக முடிந்தது என்பதை அறிந்து கொண்டான். ரங்கசாமியின் பேரில் அவனுக்கு ஆத்திரமும் கோபமும் வருவது இயற்கைதானே!

"ரங்கு, நீ ரொம்ப மித்திரத் துரோகி. என்னுடைய ரகசியமான காரியங்களில் உன்னையும் உடந்தையாகச் சேர்த்துக் கொண்டது பிசகு. நான் செய்கிற காரியங்களெல்லாம் வெளி மனிதர்களுக்குத் தெரிந்ததற்கு நீதான் காரணமாயிருக்க

வேண்டும். உன்னைத் தவிர யாருக்கு இவைக ளெல்லாம் தெரியும்......!" என்று சீறினான்.

"ஏய் திருவேங்கடம். வீணாகக் கோபப் படுவ தில் புண்ணியமில்லை. நீ எத்தகைய பொதுஜன சேவை செய்கிறாயோ, அத்தகைய சேவை செய்ய எனக்கும் உரிமை உண்டு. இப்படிப்பட்ட பொது ஜன சேவை செய்ய முற்பட்டு விட்டால் நண்பன் கூட்டாளி என்றெல்லாம் பார்த்து முடியாது. உதாரணமாக என்னுடைய கறவை குறைந்த பசுவை விலை தீர்த்து விற்கப் போனபோது அதை வாங்க வந்த மருதமுத்துவின் பேரில் அநு தாபப்பட்டு என்னைக் கூட்டாளி என்று மதிக் காமல் அவனுக்கு 'உண்மை விளம்பி' என்று கையெழுத்துப் போட்டுக் கடிதம் எழுதினாய் அல்லவா! அதைப் போல்தான் நானும் நீ நண்பனாய் இருந்தாலும் அதைப் பெரிதாகக் கருதாமல் என் கடமையை உணர்ந்து உன்னால் பிறருக்கு ஏற்படும் கெடுதலிலிருந்து அவர்களைக் காப்பாற்ற நினைத்தேன்" என்றான்.

திருவேங்கடம் நெடுநாள் வரையில் வீட்டை விட்டு வெளிக் கிளம்பாமல் இருந்து அவனுக்கு விரோதமாய் இருந்தவர்களின் மனம் சிறிது சமாதானமும் சாந்தியும் அடைந்த பிறகு தான் வெளிக் கிளம்பத் தலைப்பட்டான். அவன் இப் பொழுதெல்லாம் மொட்டைக் கடிதம் எழுதும் தொழிலை விட்டு விட்டான். தற்சமயம் அவன் அந்தத் தொழிலை விட்டு விட்டாலும் மொட் டைக் கடிதம் எழுதுவதில் சிறந்தவர்களுக்குப் பரிசு கொடுக்கும் திட்டம் ஏதேனும் ஏற்பட்டால், முன்னாளில் அவன் இவ்விஷயத்தில் செய்துள்ள பெரும் சேவையை நினைத்துப் பார்த்தால், அவ னுக்கே அந்தப் பரிசு உரித்தானதாகும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

அதிசயம் நடந்தது!

"எங்கோ கூட்டத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அனாதைச் சிறு வனைத் தேடி வந்து யானை கழுத்தில் மலர் மாலையைப் போட்டது. அவனுக்கே முடி சூட்டி ராஜாவாக்கினார்கள்" என்று பழங் கதைகளில் படித்ததுண்டு.

"இன்று தலைமை தாங்க யிருந்த தலைவர் ஏதோ அசந்தர்ப்பத்தினால் வர இயலவில்லை. அவருக்குப் பதிலாக இன்னாரைத் தலைமை தாங்கக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சில கூட்டங்களில் காரியதரிசி வேறு ஒருவர் கழுத்தில் மாலையைப் போட்டு, இழுத்துப் போய், நாற்காலியில் அமர்த்தியதைக் கண்டு, கைதட்டி மகிழ்ந்திருக்கிறேன்.

ஆனால், அன்று நான் சிறிதும் எதிர்பாராத ஒரு அதிசய சம்பவம் நடந்தது!

என் நண்பர் ராமநாதன் உள்ளூர் தபால் காரர்கள் சங்கக் காரியதரிசி. "நாங்கள் ஆண்டு விழா நடத்துகிறோம். நீங்கள் அவ சியம் வரவேண்டும்" என்று சொல்லி யிருந் தார். நானும் சென்றிருந்தேன்.

அன்று அருணாசலம் என்று யாரோ ஒருவர் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதா யிருந்தது. அவர் வெளியூர்க்காரர். மத்தியானம் மூன்று மணி ரயிலில் வருவதாக எழுதி யிருந்தாராம். கூட்டம் நான்கு மணிக்கு.

மூன்று மணி ரயில் வந்து போயிற்று. மணி நான்காயிற்று; ஐந்துமாகி விட்டது. அந்த அருணாசலம் மட்டும் வரவில்லை.

அவருக்காகக் காத்திருப்பதில் பிரயோசன மில்லை என்று எல்லோருக்கும் தோன்றி விட்டது. இன்னும் யார், யாரோ 'பெரி யவர்'கள் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள்.

ஆண்டு விழாவைத் தொடங்குவதற்குமுன், தேநீர் விருந்து நடந்தது.

அடுத்தபடியாகப் பேசுகிறவர்கள், பேசி னால், கேட்டு மகிழ்ந்து கை தட்டலாம் என்று என்னைத் தயார்ப் படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

"அந்த அருணாசலம் தலைமை வகிக்க வரா விட்டால் வேறு ஒரு சோணாசலம், இங்கு வந்திருப்பவர்களில் இல்லாமலா போய் விடு கிறார்? பார்த்துக் கொள்ளலாம்" என்று ஒரு எண்ணமும் எனக்குத் தோன்றியது.

கடவுள் வாழ்த்துக்குப் பின், என் நண்பர் காரியதரிசி பேச எழுந்தார். தலைமை தாங் கப் போகும் அந்தப் புதிய தலைவர் சோணா சலம் யார் என்பதை யறிய என் ஆவல் அதிகமாயிற்று.

"இன்று தலைமை தாங்கி, நம் ஆண்டு விழாவை நடத்தித்தர யிருந்த, திரு அருணா சலம் ஏதோ காரணத்தினால் வர முடிய வில்லை. அவசியம் வர யிருந்தவர், வராத தற்குத் தகவலும் தெரியவில்லை. அவருக்குப் பதில் நமது நண்பரும், சிறந்த கலாரஸிகரும், பொது சேவையில் பற்றுள்ளவரும், நம் சங்கத்தில் அதிக ஆர்வம் கொண்டவருமான திரு வேதாசலம் அவர்களை இந்தக் கூட்டத் திற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்று சங்கத்தின் காரிய தரிசி பேசி நிறுத்தினார்.

என்னால் கைதட்ட முடியவில்லை. என்னைச் சுற்றி யிருந்தவர்கள் எல்லோரும் கையைத் தட்டினார்கள். என்னைப் பார்த்தார்கள். அடி யேன் திருநாமம்தான் வேதாசலம்.

அட ராமா! கடைசியில் நானா அந்த சோணாசலம்? அந்த அருணாசலத்திற்குப் பதில், தலைமை தாங்கும் எந்த சோணாசலத் தைக் காண இருந்தேனோ, அந்த சோணா சலம் இந்த வேதாசலமாகவே யிருந்தேன்!

"ஏன் இன்னும் இங்கே உட்கார்ந்திருக் கிறீர்கள்? உம், போங்கள், ஏற்கெனவே நாழியாகி விட்டது" என்று என் கையைப் பிடித்து அழைத்தார் காரியதரிசி.

நான் எழுந்து போனேன்; பூமாலை என் கழுத்தில் விழுந்தது; கூடி யிருந்தவர்கள் எல்லாரும் கையைத் தட்டினார்கள். எம். ஜீ.

கைத்தறியும் மில்லும்

எஸ். ரங்கராஜன் எஸ். டி. எம்.

இந்தியாவின் புராதன குடிசைத் தொழில் கைத்தறி நெசவு. அதனுடன் போட்டியிடுகிறது பத்தொன்பதாம் நூற்றாண்டில் வந்து புகுந்த மில் நெசவு. கைத்தறியும், மில்லும் ஒருவரை யொருவர் சந்திக்கின்றனர். பேச்சு ஆரம்பமாகிறது.

மில் :—டேய்! ஏது இப்பொழுது வெளியில் வர ஆரம்பித்துவிட்டாய்! குடிசையில் ஒரு மூலையில் நிம்மதியாக இருக்க வேண்டிய நீ எவ்வாறு வெளிக் கிளம்பினாய்!

கைத்தறி :—தம்பி! உனக்கு உலக அனுபவம் போதாது. நான் குடிசையில் மட்டுமல்ல, நம் நாட்டில் 24 லக்ஷம் குடிசைகளில் 100 லக்ஷம் பேர்களுக்கு அன்றாட உணவு அளித்து வருகிறேன். உன்னை நம்பியிருக்கும் பேர்வழிகள் மிகச் சொற்பமே. உன்னால் லாபம் அடைபவன் ஒரு பண மூட்டை. மூட்டை மூட்டையாகப் பணத்தை அவனுக்கு உற்பத்தி செய்கிறாய். நானோ அன்றாடம் உழைத்து எங்கும் குடிசைத் தொழிலாளிகளுக்கு உணவளித்து வருகிறேன்.

மில் :—அதெல்லாம் இருக்கட்டும். நீ ஒரு மடிசஞ்சி. என்னைப்போல் பகட்டான துணிகளை உன்னால் செய்ய முடியுமா! கொஞ்சம் நிமிர்ந்து என்னைப் பார்த்துப் பேசு, பார்க்கலாம்.

கைத்தறி :—நீ சொன்னது மிகவும் சரி. நான் பகட்டான துணி உற்பத்தி பண்ணும் செப்பிடு வித்தைக்காரன் அல்ல. தம்பி! கொஞ்சம் விவரமாகக் கேள். "டாக்கா மஸ்லீன்" என்று கேள்விப்பட்டிருக்கிறாயா! 1862ம் வருஷத்தில் நம் நாட்டிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட டாக்கா மஸ்லீன் 729ம் நம்பர் நூலினால் நெய்யப்பட்டது என்பதைக் கேட்க உனக்கு மயக்கம் வரவில்லையா! ஏன் தம்பி அதை நீ உற்பத்தி பண்ணவில்லை! மதராஸ் புடவைகளையும் வேஷ்டிகளையும் நீ பார்த்திருக்கிறாயா! பனாரஸ் சில்க் புடவைகளையும், சந்தேரி (மத்யபாரத்) புடவைகளையும் நீ செய்ய யோக்யதை உள்ளவனா! காஷ்மீர் சால்வை உன்னால் செய்ய முடியுமா!

மில் :—ரொம்ப பேசுகிறாயே! உன்னுடைய துணிகள் ஏகப்பட்ட கிராக்கி விலைக்கு விற்கப்படுகிறதே! ஏழை இந்திய மக்கள் அதை எவ்வாறு வாங்குவார்கள்! உனக்குக் கணக்கு விஷயம் தெரியாது. அதில் பூஜ்யம்.

கைத்தறி :—தம்பி! எனக்குச் சூதுவாது கணக்குத் தெரியாது. இரட்டைக் கணக்கு எழுதும் கலை உன் வர்க்கத்தைச் சார்ந்தது. ஏன் என் துணிகளின் விலை அதிகமாக இருக்கிறது தெரியுமா! நெசவாளருக்குக் கொஞ்சம் அதிகப்படியான கூலி கொடுப்பதால் அல்ல. மூலப் பொருளான நூல் உன் முதலாளியிடம் இருந்து வாங்கப்படுகிறது. 1 பவுண்டு நூலுக்கு உற்பத்தி செலவு ரூ. 1-10-0 என்றால் அதை எனக்கு ரூ. 2—0—0 விற்கிறார். அதனால் அனாவசியமாக நான் அவருக்கு ரூ. 0-6-0 ஒரு பவுண்டுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் சர்க்கார் நம் நாட்டுப் பருத்தியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அயல் நாட்டுப் பருத்தியை இறக்குமதி செய்கிறார்கள். நம் நாட்டுப் பருத்தி விலையில் மிகவும் குறைவு. இறக்குமதி செய்யப்படும் பருத்தியின் விலை மிகவும் அதிகம். நம் நாட்டுப் பருத்தியை நாமே உபயோகப்படுத்தி, நூலை உற்பத்திச் செலவு விலையில் எனக்குக் கொடுத்தால் என் துணிகள் உன்னுடையதை விடக் குறைந்த விலையில் விற்கப்படும். மேலும் உனக்கு ஏராளமான செலவில் கட்டிடமும், மின்சாரமும், படோடபமான சம்பளதாரிகளும் வேண்டும். வேலை நிறுத்தம் சண்டை சச்சரவுகளுக்கு ஆளாகிறாய். இதெல்லாம் என்னிடம் உண்டா!

மில் :—ஏது புராணம் வளர்க்கிறாயே!

கைத்தறி :—இன்னும் கேள்! என் வர்க்கத்தினர் தலைமுறை தலைமுறையாக நம் பாரத மக்களுக்கு ஆடை அலங்காரம் செய்துவருகின்றனர். நீ ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இந் நாட்டுக்கு வந்தவன்; நம் நாட்டில் ஒவ்வொரு ஆடவரும் வேஷ்டியையும் ஒவ்வொரு பெண்டிரும் புடவையையும் உடுத்திக் கொள்ளவில்லையா! நம் நாட்டில் உள்ள மார்க்கெட்டை விட்டு விட்டு எங்களை அயல்நாட்டு மார்க்கெட்டுக்குப் போகச் சொல்வது பொருத்தமான காரியமா! உன் முதலாளியிடம் ஏகப்பட்ட பணம் இருக்கிறது. அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். பண வசதி இடமளிக்கும். ஆனால் என்னை ஓட்டுபவன் அன்றாடக் கூலிக்கு ஏங்கி நிற்கிறான். அவனை அயல் நாட்டு மார்க்கெட்டைத் தேடச் சொல்வது மிகவும் அநியாயம்.

மில் :—பின் உனக்கு என்ன வேண்டும்!

கைத்தறி :—காந்திய வழியைப் பின்பற்றும், நம் நாட்டு அறிஞர் தமிழ் நாட்டுத் தலைவர் கோரும் வேஷ்டி, புடவை நெசவை எங்கள் வர்க்கத்தினருக்குப் பூரணமாகக் கொடுத்துவிட வேண்டும்.

மில் :—பின் நாங்கள் என்ன செய்வது! என்னையும் நம்பித் தொழிலாளிகள் இருக்கின்றார்களே!

கைத்தறி :—தம்பி! உன்னை அப்படியே மூடிவிட வேண்டும் என்று நாங்கள் சொன்னதில்லை. சொல்லப் போவதுமில்லை. நீங்கள் உற்பத்தி பண்ணப் பல ரகப்பட்ட துணிகள் இருக்கின்றன. தையற்காரர்களிடம் போகும் துணிகளையும், டவல், மற்றும் ஏனைய அன்றாட வாழ்க்கைக்கு உபயோகப்படும் துணிகளையும் நீங்கள் உற்பத்தி செய்யலாம். அவைகளுக்கு நம் நாட்டிலும், அயல் நாட்டிலும் தேவை யிருக்கிறது. உன்னை நம்பியிருக்கும் ஒரு சிறு தொழிலாள வர்க்கத்தினருக்கு இதனால் எந்தவிதமான கெடுதியும் சேர்ந்து விடப் போவதில்லை.

மில் :—அதெல்லாம் சரி. உன் வர்க்கத்தினருக்கு வேஷ்டி, புடவை நெய்வதைப் பூராவாகக் கொடுத்துவிட்டால், நம் நாட்டு மக்கள் ஆடையின்றித் தவிப்பார்கள். உன்னால் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியாது.

கைத்தறி :—தம்பி! பதறாதே! நம் நாட்டின் புடவை வேஷ்டியின் வருஷாந்திர தேவை 12,000 லக்ஷம் கெஜம். 24 லக்ஷம் என்னைப் போன்றவர்களிடம் இருந்து வருஷத்துக்குச் சுமார் 58,000 லக்ஷம் துணி கிடைக்கும். மேலும் எங்களுக்கு நியாய விலையில் நூல் கொடுக்கப்பட்டால் ஏன் தம்பி எங்களால் தேசத்தின் வேஷ்டி புடவைத் தேவையைத் தீர்க்க முடியாது!

மில் :—அண்ணா! உன்னை அறிந்து கொள்ளாமல் ஏதோ தாறுமாறாகப் பேசி விட்டேன்; தயவு செய்து என்னை மன்னித்துவிடு.

இருவரும் :—வாழ்க நெசவுத் தொழில்! ஒழிக, நெசவாளிகளின் வறுமை! வாழ்க ராஜாஜி!

அதிகப்படி தெம்பு



நீங்களும் பெறுக

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

தெம்புடன் விளங்குக......... உங்கள் தினசரி போஜனத்துடன் வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிட்டு வருக...... அது சுருசுருப்பூட்டுவதும் ருசிமிகுந்ததுமான ஒரு டானிக். அதிகப்படி தெம்பை வளர்க்க உதவுவதில் நிச்சயத்துணையுள்ளது. வாட்டர்பரீஸ் காம்பவுண்டு உங்களுக்கு அத்யாவசியமான புஷ்டிபதார்த்தங்களை வழங்கி, உங்களுக்கு சோர்வு, ஜலதோஷம், இருமல், ஏதுவும் ஏற்படாதவாறு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். வயது வந்தவர், இளைஞர் யாவருக்கும் தேக வலிமை பெற இன்றியமையாதது.



WATERBURY'S

COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

NAS. 39-53 உங்களை தெம்புடன் வைத்திருக்கும்





துரிதமாகத் தேர்வு
பெறுகிறார்—

டாக்டர்

ஓவல்டினுக்கு

உத்தரவு செய்தது முதல்!

நோய்க்குப் பிறகு தேறிவரும் காலத்தில் டாக்டர்களும் நர்ஸ்களும் ஆரோக்கியம் தரும் ஓவல்டினை சிபாரிசு செய்கின்றனர்! ஓவல்டினின் சத்துக்கள் ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமானவை என்று அவர்களுக்குத் தெரியும். அதில் பழுத்த பார்லி மால்ட், ஆடை நிரம்பிய பசும்பால், சிறந்த கொக்கோ, பி & டி விடமின்கள் ஆகியவை சேர்ந்து இருப்பதால் அது இன்றியமையாத உணவு பானமாகும். ஓவல்டின் லேபரட்டரிகளில், விஞ்ஞானிகள், ஓவல்டினின் பரிசுத்தத்திற்கு அதன் தயாரிப்பில் ஒவ்வொரு படியிலும் பரிசோதனை நடத்துகிறார்கள். எந்த நோயாளிக்கும் அவருடைய உணவுடன் ஓவல்டினையும் கொடுத்து வந்தால் தேர்வு துரிதப்படுவது திண்ணம்! நினைவிருக்கட்டும்— அது குடும்பத்தில் அனைவரின் ஆரோக்கியத்திற்கும் உகந்த பானம். ஓவல்டினையே கேளுங்கள்; போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள் :
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

ஓ வ ல் டி ன்



நோய்க்குப் பிறகு தேர்வைத் துரிதப்படுத்துகிறது

OV. 392

"எவரெஸ்டு சிகரம்"

எல்குடி எஸ். எஸ். சுப்பிரமணியம்

இன்று எங்கு பார்த்தாலும் 'டென்ஸிங் புலியை'ப் பற்றியே பேச்சு. இமயமலையின் எவரெஸ்டு சிகரத்தின் உச்சியில் முதன் முதலாகக் காலடி எடுத்து வைத்த இந்தியர் ஸ்ரீ டென்ஸிங் என்று கேள்விப்பட்டு இந்திய மக்கள் பெருமை அடைந்தார்கள். இமயமலையின் மீதுள்ள எவரெஸ்டு சிகரத்தை, 29,141 அடி அதாவது ஐந்தரை மைல் உயரத்தில் பனிக் குன்றுகளையும், பனிக் கட்டிகளையும், குளிர் காற்றையும் லட்சியம் செய்யாமல் மனோ தைரியத்துடன் எட்டிப் பிடித்து, நமது தாய்நாட்டு மூவர்ணக் கொடியைச் சிகரத்தில் நாட்டிவிட்டு வந்த தீரர், சூரர் என்பதற்காக ஸ்ரீ டென்சிங்ஜியைப் பாராட்டுகிறோம்; பெருமை அடைகிறோம்.

ஆனால் உலகின் உன்னத சிகரம் இமயமலையில் தான் இருக்கிறது என்று முதன் முதலில் கண்டு பிடித்தவரை உலகம் எம்மாதிரி கொண்டாட வேண்டும்! அப்படிக் கொண்டாடாதவண்ணம் அவர் பெயரையே அழித்துவிட்டது பிரிட்டிஷ் ஆட்சி பீடம்!

உலகிலேயே உன்னதமான சிகரம் இமயமலையில் இருப்பதாக முதன் முதலில் கண்டு பிடித்தது யார்! சிகரத்துக்கு ஏன் 'எவரெஸ்டு சிகரம்' எனப் பெயர் வந்தது!

இன்று வரையில் 'எவரெஸ்டு சிகரத்தை'க் கண்டு பிடித்தவர் எவரெஸ்டு என்னும் மேனாட்டு வெள்ளைக்காரர் என்று எல்லோரும் நினைத்து வருகிறார்கள். அது முற்றிலும் தவறு.

உலகில் உன்னதமான சிகரம் இந்தியாவிலுள்ள இமயமலையில் தானிருக்கிறதென்று கல்கத்தாவைச் சேர்ந்த ஸ்ரீ ராதாநாத் சிக்டார் என்ற இந்தியர்தான் முதன் முதலில் கண்டு பிடித்தார்.

* * *

கல்கத்தாவில் 1813ம் வருஷம் ஒரு எளிய குலத்தில் ராதாநாத் சிக்டார் பிறந்தார். 1824-ல் ஹிந்து கலாசாலையில் உபகாரச் சம்பளம் பெற்று, கல்வி கற்று, ஆங்கில பாஷையில் முதன்மையாகத் தேறி 1832ல் பட்டம் பெற்றார். இவர் கணித சாஸ்திரத்தில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். டாக்டர் டைலர் என்ற ஆங்கில கணித சாஸ்திரியாரிடம் கணித சாஸ்திர விஷயமாய்ப் பல விஷயங்கள் அறிந்து கொண்டார். டைலர் சிபார்சின் பேரில் சிக்டாருக்கு இந்திய திரிகோண நில அளவு இலாகாவின் தலைவர் ஸர் ஜார்ஜ் எவரெஸ்டு என்பவர் மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கொடுத்தார்.

ஸ்ரீ சிக்டாரின் பலவித கணக்குகளைப் பார்த்த எவரெஸ்டு துரைக்கு, சிக்டாரின்மீது அன்பு ஏற்பட்டது. உயர்தர கணித சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டு நில அளவு விஷயமாகப் பலவித கணக்குகளைப் போட்டுக் காட்டினார் ஸ்ரீ சிக்டார். துரை விரைவில் சிக்டாருக்கு அதிகச் சம்பளம் அளிக்க உத்தரவு பிறப்பித்தார். 'ஸர்' பட்டம் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ பட்டம் அளிக்கப்படவில்லை.

1843 வருஷம் ஸர் ஜார்ஜ் எவரெஸ்டு பென்ஷன் பெற்றுக் கொண்டு இங்கிலாந்து சென்றார்.

எவரெஸ்டுக்குப் பிறகு கர்னல் வாக் என்பவர் வந்தார். இவருக்கும் சிக்டாரிடம் மதிப்பு ஏற்பட்டது. வாக் துரைக்குத் தெளிவு படாத கணக்குகளை சிக்டார் ஒரு நிமிஷத்தில் போட்டு விளக்கினார். 'வாக்' துரை 'சிக்டாரை'ப் போற்றிப் புகழ்ந்தார். ஆனால் இன உணர்ச்சியுடன் இருந்து வந்தார் வாக் துரை.

1852 வருஷம் ராதாநாத் சிக்டார் இமயமலையின் அடிவாரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து, மலை அடிவாரம், சிகரங்கள் இவைகளைப் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்து உலகில் உயர்ந்த சிகரம் இமயமலையிலிருக்கிறதென்று கண்டு பிடித்து, அது விஷயமாகக் 'கல்கத்தா ரெவ்யூ' என்ற பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதி வந்தார்.

1857-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 12-ந் தேதி லண்டன் பாராளுமன்ற சபைக்கு இந்தியாவிலிருந்து நிலஇலாகா அதிகாரிகள் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். இதில் ஸ்ரீ சிக்டாரின் அரிய வேலைகளைக் குறிப்பிட்டிருந்தார்கள். பார்லிமெண்டு சிபார்சின் பேரில் ஸ்ரீ சிக்டாருக்கு நில அளவு இலாகாவின் உதவித் தலைவர் பதவி ரூ. 600/- சம்பளத்தில் அளிக்கப்பட்டது. ஒரு இந்தியர் இம்மாதிரி கௌரவிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

சிக்டார் கண்டு பிடித்த விஷயங்களை மூன்று பூகோள ஆராய்ச்சி இலாக்கா அதிகாரிகள் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

1859 வருஷம் டிசம்பர் மாதம் சிம்லாவில் லண்டன் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை பூகோள சாஸ்திர அறிஞர் ஸ்ரீ மேஜர் கென்னித் என்பவர், "இமயமலை இரகசியம்" என்ற விஷயமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்திய பொழுது ஸ்ரீ சிக்டார் இமயமலையின் உன்னத சிகரத்தைக் கண்டு பிடித்த விஷயத்தைப் பகிரங்கப்படுத்தினார்.

1863வருஷம் மே மாதம் எவரெஸ்டு இங்கிலாந்து போய் விட்டார். 1852-ம் வருஷம் சிகரம் கண்டு பிடிக்கப்பட்டது. பின் எப்படி 'எவரெஸ்டு சிகரம்' என்று அழைக்கப்பட்டது!

எவரெஸ்டுக்குப் பின் வந்த வாக் என்ற வெள்ளையர் தமது இலாக்காவில் தமக்குக் கீழ் வேலை செய்யும் ஒரு இந்தியன் கீர்த்தி பெறுவதை விரும்ப வில்லை. "சிக்டார் பெயரை வைக்க எனக்கு இஷ்டமில்லை" என்று குறிப்பு எழுதினார்.

தமக்கு முன்னிருந்த ஸர் ஜார்ஜ் எவரெஸ்டு பெயரைச் சிகரத்துக்குச் சூட்டினார். எல்லா அறிக்கைகளிலும் 'எவரெஸ்டு' என்ற பெயரைப் புகுத்தினார். சர்க்கார் தஸ்தாவேஜுகளில் எல்லாம் எவரெஸ்டு பெயர் அடிபட்டது.

உண்மையில் சிக்டார் சிகரம் என்றிருக்க வேண்டும் என்று பூகோள ஆராய்ச்சியாளர்கள் எல்லாரும் ஒருமுகமாகக் கூறுகிறார்கள்.

ராதாநாத் சிக்டார் தம் பெயரினால் சிகரம் அழைக்கப்பட வேண்டுமென்று விரும்பியது கிடையாது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் அது. மௌனமாக இருந்துவிட்டார் சிக்டார்.

ராதாநாத் சிக்டாரை சில வருஷங்களுக்குப் பின் கல்கத்தா அரசாங்க ஜோதி மண்டலத்தின் தலைவராக உயர்ந்த சம்பளத்தில் நியமித்தார்கள்.

1852ஆம் நவம்பர் 11உ Friend of India என்ற பத்திரிகை சிக்டாரை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டி எழுதிற்று.

1862ஆம் சிக்டார் பென்ஷன் பெற்று வேலையிலிருந்து விலகிக் கொண்டார். இவரது ஜீவியன் கலை 1864ஆம் ஏப்ரல் 18ந் தேதி 'Hills' என்ற

பத்திரிகையும் "Hindu Patriot" என்ற பத்திரிகையும் பாராட்டி எழுதியிருந்தன.

ஸ்ரீ சிக்டார் எழுதி வைத்த 'நில அளவுக் குறிப்புகள்' இன்றும் பூகோள இலாக்காவுக்கு உபயோகமாயிருந்து வருகின்றன.

1887இல் எச். என். டைலர் என்பவரும், சி. டி. ஹெயிர் என்பவரும், சிக்டாரின் பல நூல்களைத் தொகுத்து வெளியிட்டார்கள். சிக்டார் "நில அளவு வேலைகள்" என்ற நூலை வெகு சிரமப்பட்டு ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருந்தார்.

ஒரு கறுப்பு இந்தியனால் இந்த நூல் செய்யப்பட்டதாக இருத்தல் கூடாது என்று நில இலாக்கா தலைவர் கர்னல் எல். எல். டைலர் ஸ்ரீ சிக்டாரின் பெயரை நீக்கிவிட்டுத் தமது பெயரை அந்த நூலில் புகுத்தி விட்டார்.

நாடெங்கும் இச் செய்கை யாவராலும் கண்டிக்கப்பட்டது. பத்திரிகைகள் கண்டித்து எழுதின.

இச்சமயத்தில் நில அளவு இலாகாவின் உதவித் தலைவராக கர்னல் மாக்டோனல்ட் என்ற துரை இருந்தார். அவர் இந்திய மக்களிடம் விசுவாசம் கொண்டவர். "இந்தியர் மூளைக்குத் தனி மதிப்புக் கொடுக்க வேண்டும்" என்று அடிக்கடி மேலதிகாரிகளுக்கு எழுதுவார். கறுப்பு—வெள்ளை என்ற அந்த இன உணர்ச்சியை இகழ்வார்.

இவர் Friend of India என்ற பத்திரிகையில் தமது மேலதிகாரி ஸ்ரீ டைலர் செய்த செய்கையைக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையில் கீழ்க் கண்டபடி எழுதினார்:

"அயோக்யத்தனமான பாவத்துக்கும் காலம் சென்ற ஒருவரின் சொத்தைத் திருடியதற்கும் உடனே பிராயச்சித்தம் தேட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் கர்னல் மாக்டோனல்டு, ராதாநாத் சிக்டார்தான் உண்மையில் நில அளவு இலாகாவுக்குத் தலைவராக இருக்க வேண்டுமென்றும், இமயமலைச் சிகரத்தைக் கண்டுபிடித்த பிரமுகர் அவர்தான் என்றும் இங்கிலாந்துக்குத் தைரியமாக எழுதி அனுப்பினார்.

இதைக் கண்டித்து நில இலாக்கா அதிகாரி ஸ்ரீ டைலர், மாக்டோனல்டைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எழுதினார்.

1876ம் வருடம் அக்டோபர் மாதம் 16ம் தேதி "கர்னல் மாக்டோனல்ட் மூன்று மாத காலத்துக்குச் சஸ்பெண்டு" என்ற உத்தரவு வந்தது. பின் அவரை 'டிஸ்மிஸ்' செய்து விட்டதாக உத்தரவு தொடர்ந்து வந்தது.

"உண்மையை வெளியிட்டதற்காகக் கர்னல் மாக்டோனல்ட் தண்டிக்கப் பட்டார்" என்று Englishman, Hindu Patriot, Indian Daily Herald முதலிய பத்திரிகைகள் எழுதி, கர்னல் மாக்டோனல்ட் சேவைகளைப் பாராட்டி விசேஷ அனுபந்தங்கள் வெளியிட்டன.

சிக்டார் என்ற இந்தியர் இமயமலையின் உன்னத சிகரத்தை 1852-ம் வருஷம் கண்டுபிடித்த பின், அதன் சரியான உயரத்தை அளக்க வேண்டி ஆண்டுதோறும் மலையேறும் கோஷ்டிகள் இந்தியாவுக்கு வந்து சென்றார்கள். இமயமலைச் சிகரத்தை ஒருவரும் அளக்கக் கூடாதென்றும், அளக்க முயற்சிப்பதனால் தமது தேசத்தில் மழை பெய்வதில்லை என்றும் திபேத் அரசர் ஒரு உத்தரவு போட்டார். 1924ம் வருஷம் முதல் பல கோஷ்டிகள் மலையேற இந்தியா வந்தார்கள். கடைசியில் ஸ்ரீ டென்சிங்ஜியும், ஸ்ரீ ஹில்லாரியும் 29—5—53 அன்று இமயமலைச் சிகரத்தை அடைந்தார்கள்.

சிகரத்தைக் கண்டு பிடித்தவரும் இந்தியர். அச் சிகரத்தில் முதலில் காலடி வைத்தவரும் இந்தியர் என்று கூறிக் கொள்வதில் நாம் தலை நிமிர்ந்து பெருமை அடைய வேண்டுமல்லவா!

கைதிகளின் நிலைமை

சிறைகளில் நிலைமை மிகவும் சீர்திருத்தியிருக்கிறது என்று பத்திரிகை மூலமாகச் சமீப மாதங்களில் பார்த்தேன். கடந்த வருடங்களில் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டு சப் ஜெயில் மத்திய ஜெயில்களில் விசாரணைக் கைதியாகவும் தண்டனைக் கைதியாகவும் இருந்திருக்கிறேன். சமீபத்தில் ராஜபாளையத்தில் மே தின கலவரம் சம்பந்தமாக, துரதிர்ஷ்டவசமாக நானும் கைது செய்யப் பட்டேன். ஸ்ரீவில்லிபுத்தூர் சப் ஜெயிலில் ஒருவாரம் இருந்து வெளி வந்த மாஜி கைதிகளில் நானும் ஒருவன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் சப் ஜெயில் பத்து அறைகள் கொண்டது. அதில் 20 முதல் 30 வரைதான் கைதிகள் இருக்கலாம். ஆனால் எப்பொழுதும் 50 கைதிகள் வரை இருந்து கொண்டிருக்கிறார்கள். சாப்பாட்டுக்கும் காலை மாலை மல ஜலம் கழிக்க விடும் நேரம் போக மீதி இருபத்து மூன்றேகால் மணி நேரமும் சிறைக்குள்தான் இருக்கவேண்டும். கைதிகள் மாதக் கணக்கில் குளிக்காமல் உடம்பு ஒரே நாற்றம். ஜெயில் பக்கத்தில் ஒரு கிணறு இருக்கிறது. ஆனால் தண்ணீர் கிடையாது. குடிப்பதற்குத் தண்ணீர் தூரமான இடத்தில் இருந்து வருவதால் சில சமயம் குடிக்கவும் தண்ணீர் இல்லாமல் இருக்க வேண்டி யிருக்கிறது. ஒவ்வொரு அறையிலும் 5 முதல் 8 பேர்கள்வரை போட்டுப் பூட்டி விடுகிறார்கள். மலஜலம் கழிக்க ஒரு சட்டியும் வைத்து விடுகிறார்கள். அழுக்கடைந்த துணிகள், உடம்பு நாற்றம், கக்கூஸ் சட்டியின் வீச்சம் இந்தக் கொடிய துர்நாற்றத்தில்தான் கைதிகள் காலம் தள்ள வேண்டும்.

உணவோ உயிர் போகாமலிருப்பதற்குத்தான் தரப்படுகிறது. நான் இருந்த காலம் ஒரே வெப்பம். இரவும் பகலும் உடம்பில் வியர்வை வந்த வண்ணம் இருந்தது. இதனால் துணிகளும் நாற்றம் எடுத்து விட்டன. தலைக்கு எண்ணெய் இல்லாமல் கருட்டை விழுந்து விட்டது. நீண்ட நாட்கள் இப்படியே இருப்பதால் கைதிகள் மிகவும் கோரமாக இருக்க வேண்டியதாயிருக்கிறது.

நீண்ட நாட்களாகக் குளிக்காமல் 50 கைதிகளுக்கு மேல் தங்களுக்குக் குளிக்கத் தண்ணீர் வேண்டும் என்று சிறை அதிகாரி (சப் மாஜிஸ்ட்ரேட்) இடமும் அங்கு வரும் டாக்டரிடமும் பல நாட்கள் கேட்டபின், நான் ஜெயில் சென்ற நான்காவது நாள் இரண்டு வண்டி தண்ணீர் வந்தது. கைதி ஒன்றுக்கு முக்கால் வாளித் தண்ணீர் கொடுத்தார்கள். துணிமணிகளிலும் உடம்பிலும் உள்ள அழுக்கைப் போக்க முக்கால் வாளித் தண்ணீர் போதாமல் உடம்பெல்லாம் தடவிக் கொள்ள முடிந்தது.

இராஜபாளையம்
19—6—53

கே. கே. பெருமாள்

3 வாசனைக் கலாரத்னங்கள்


கம் கம் ஜவாஜ் * கம்பால் * கமகர்

அகர்பத்திகள்

டி. எஸ். சுகந்தாலயா,
வாசனைதிரவிய வியாபாரிகள், பெங்களூர்-2

ஜலதோஷத்தை அலட்சியமாக எண்ணுதீர்கள்

உடன் சிகிச்சை செய்யுங்கள்



ஜலதோஷத்தின் அறிகுறி தென்பட்ட உடனேயே மூக்கினுள் சிறிது கிபாக்கைத் தடவினுல் ஒரு மணி நேரத்திற்குள்ளாக சனிசின்று மூக்கு அடைப்பு அறவே அகன்றுவிடும். மூக்கு அடைப்பு நீங்கி சுவாசம் சரிவர ஆகிவிட்டால், ஜலதோஷம் தானுகவே நின்றுவிடும்.

இரவில் படுக்குமுன், மார்பு, நெஞ்சு முதுகு பாகங்களில் சிறிது கிபாக்கை நன்ருகத் தேயத்துக்கொண்டால், முற்றிலும் தீங்கற்றதும் ஆவியாக மாறக் கூடியதுமான கிபாக்கிலுள்ள எண்ணைச்சத்துக்கள் நீடித்துள்ள ஜலதோஷத்தையும் எளிதில் நிவர்த்தி செய்துவிடும்.



வெஸ்ட் மின்ஸ்டர் லாபரட்டரீஸ் லிமிடெட் லண்டன்,
தயாரிப்பு

கிபாக்

முகரவும், தேய்க்கவும் உகந்தது

ஏஜெண்டுகள்: ஓரியன்டல் மெர்க்கன்டைல் ஏஜென்ஸி,
99-A., அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1

SISTA'S—WL——TAMIL




எல்லாவித பல்வலிகளுக்கும்

பல் வெண்மை தரும்.....
ஈர்களுக்கு வலு தரும்
உபயோகியுங்கள்

குரங்கு மார்க்
கருப்பு பல்பொடி
(REGO)

வாசத்திற்கு மணம் தரும்.
எங்கும் கிடைக்கும்
5 விதமான சைசுகள்



NOGI & CO.,
87, CHINA BAZAAR Rd, MADRAS-1

ஸ்ரீ ராதா ஜெனரல் ஸ்டோர்ஸ், 47, வடக்கு சித்திரை வீதி, மதுரை

சன்மானம் போதுமா?

கடகம்



ஐந்து வருஷ அனுபவத்தில் டாக்டர் பிரபாகரன் எம்.பி.பி.எஸ். ஒரு கைதேர்ந்த சிறந்த டாக்டர் ஆகிவிடுவார் என்று அவர் தொழில் தொடங்கிய பொழுது எண்ணிப் பார்த்திருக்க மாட்டார். அவரிடம் கிடைத்த நல்ல வைத்திய சிகிச்சையை நம்பியவர்கள் ஒரு சிலரும், அவர் கை ராசியை நம்பியவர்கள் பலருமாக, அவருடைய பிரத்தியேக வைத்திய சாலையை நாடி, உள்ளூரிலும், வெளியூரிலுமாக யிருந்து, வந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது. அதற்கேற்ப, அவரும் முகம் கோணாது, சிரமம் பாராது, அவரவர்களின் நோயின் குணமறிந்து, அன்பு மொழி பேசி, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு கருதாது, அல்லும் பகலும், அலுப்பு சலிப்புக் காட்டாது, நோயாளிகளின் மனம் தெரிந்து, எல்லாரும் திருப்தியடையும்படி, தம்முடைய வைத்தியத் தொழிலைப் பலரும் போற்றிப் புகழும் வண்ணம் நடத்தி வந்தார்.

இத்தனை பேரின் புகழும், அத்துடன் உழைப்பிற்கேற்ற ஊதியமுமாகக் கிடைத்த செல்வமும் கண்டு, டாக்டர் பிரபாகரன் இறுமாந்து போகவில்லை. "கர்வம் தலைக்கேறினால் கடமையினின்றும் தவறிப் போய் விடுவோம். அதன்பின் யாருக்கும் எதுவும் நல்லது செய்ய முடியாது" என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். எனவே அவர் எல்லாருக்கும் நல்லவராய், இனிய குணமுடையவராய் இருந்ததில் ஆச்சரியமில்லை.


வைத்தியத் துறையில் பிரபாகரன் செலுத்திய, செலுத்திக் கொண்டு வந்த ஆராய்ச்சியினால், எத்தகைய கைவிடப்பட்ட கொடிய வியாதிகளையும் குணப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கைதான் அவரிடம் நாளுக்கு நாள் மேலோங்கிக் கொண்டு வந்தது.

இத்தகைய நம்பிக்கை அவர் தொழில் நடத்தத் தொடங்கியபொழுது இருந்ததா? அவர் நோயைக் குணப்படுத்துவாரோ, இல்லையோ, நோயாளிகள் தாம் அவரை நாடி வருவார்கள் என்ற நம்பிக்கைதான் அவரிடம் அப்பொழுது இருந்ததா?

அவருடன் ஒத்துழைத்து, அவருடைய அன்றாட வேலைகளில் தலையிடாது, குடும்பப் பாரத்தை அவர்மீது திணிக்காது, கணவரின் பிறர் நல சேவையைக் கண்டு, பெருமை கொள்ளும் அவர் மனைவியின் நம்பிக்கை அவரின் நம்பிக்கையையே மிஞ்சியது. இன்னும் பார்க்கப்போனால், அவருள்ளே ஒரு மாறாத தைரியத்தை உண்டாக்கி, அவரை இத் தொழிலில் ஊன்றச் செய்தவளும் அவளேதான். அவள் இதைப் பற்றி எண்ணிப் பார்த்தாளோ, இல்லையோ, டாக்டர் எண்ணிப் பார்க்காமலிருப்பதில்லை.

* * *

வைத்தியக் கல்லூரியில் ஐந்து வருஷங்கள் படித்து, பட்டம் பெற்று, ஒரு வருஷம் தொழில் நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள, ஒரு பிரபல டாக்டரின் உதவியாளனாக இருந்து விட்டு, வைத்தியத் தொழில் நடத்த டாக்டர் பிரபாகரன் எம்.பி.பி.எஸ். அந்த ஊருக்கு வந்து, கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாகி யிருந்தது. இந்த ஒரு மாதத்தில் வீட்டுக்கு வெளிப்புறத்தில் பெயர்ப் பலகை



தொங்கிக் கொண்டு இருந்ததோடு சரி. அவனைத் தேடிக்கொண்டு, வைத்திய சிகிச்சைப் பெற எவருமே வரவில்லை.

"புது டாக்டரையும், புது வக்கீலையும் எவரும் எளிதில் நம்பிவிட மாட்டார்கள் என்று சொல்கிறார்களே. அது என்னைப் பொறுத்த வரையில் மெய்யாகி விடுமோ? ஒரு ஈ, காக்கை கூட என்னை நாடி வரவில்லையே, இப்படியே இருந்து விடுவோமோ, என்னவோ?" என்று பிரபாகரன் கவலை கொண்டு, தைரியம் குலைந்து தன்னம்பிக்கையை இழந்து போனது கூட உண்டு.

இதுவரை அவன் வைத்திய உதவியை நாடி எந்த நோயாளிகளும் வராவிட்டாலும், தினமும் தவறாமல் காலையில் அவனைத் தேடி வந்த ஏழெட்டுத் தபால்களுக்கு மட்டும் குறைவில்லை. அவன் மறந்திருந்தாலும், தபால்காரர் மட்டும் மறக்காமல், அவைகளை அவன் வீட்டில் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகத் தவறியதில்லை. எங்கெங்கோ பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற ஊர்களிலிருந்த மருந்து வியாபாரிகள் அவனையும், அவன் பெயரையும் மறக்கவில்லை. நிறத்திற்கொன்றாய், தினுசுக் கொன்றாய், அவர்கள் அனுப்பிக் கொண்டிருந்த மருந்துகளைப் பற்றிய முழு விவரங்களுமாக, அவனுக்குக் கடிதங்கள் தினந் தோறும் நிறைய வந்து கொண்டிருந்தன.

வரும் கடிதங்களைப் படித்து, அவற்றின் சாராம்சங்களைத் தன் மனத்தில் ஏற்றிக் கொள்ளும் போதெல்லாம், அவன் சிந்தனையில் ஆழ்ந்துபோய்விடுவதுண்டு. "நல்ல நல்ல மருந்துகள், குறைந்த விலைகளில் கிடைக்கின்றன. சிகிச்சை செய்ய டாக்டராகிய நானும் இதோ இருக்கிறேன். ஆனால் நோயாளிகள் தான் வரக் காணோம்" என்று அவன் அப்பொழுதெல்லாம் முணுமுணுப்பதுண்டு.

அப்படித்தான் அன்று காலை ஒன்பது மணிக்கு. அவன் தன் காரியாலய அறையில், தன் எதிர்கால வாழ்க்கையில் சிந்தையை ஓடவிட்டவனாய், கைக்கு வந்திருந்த தபால்களைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அவன் வீட்டின் முன்னால், ஒரு ஜோடி மயிலைக் காளைகள் பூட்டிய அழகிய வில் வண்டி ஒன்று வந்து நின்றது.

என்றுமில்லாது, வண்டி வந்து நின்றது டாக்டர் பிரபாகரனுக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது.

"யார் வருகிறார்களோ? ஒருகால் என்னைத் தேடிக் கொண்டு வந்திருப்பார்களோ?" என்ற யோசனையில் ஒரு கணம் ஆழ்ந்தான் அவன். அடுத்த கணம், பதினெட்டு வயது

மதிக்கத் தகுந்த, ஒரு யௌவன மங்கை, அழகுத் தேவதை எனும்படி, வண்டியிலிருந்து இறங்கினாள். அவன் ஒன்றும் புரியாதவனாய், இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், அவளையும், வண்டியையும் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள், அந்த மெல்லியலாளின் அழகைப் பருகத் தவறவில்லை.

வந்த அழகி ஒரு முறை அவன் வீட்டை நிமிர்ந்து, கூர்ந்து நோக்கினாள். பெயர்ப் பலகையையும் அவள் கவனமாகக் கண்களைச் செலுத்தி, ஒரு தடவைக்கு, மறு தடவையாகப் படித்தும் பார்த்துக் கொள்வதை, அவன் தன் காரியாலய அறையிலிருந்தபடியே தெரிந்து கொண்டான்.

சந்தேகமற இடம் கண்டு கொண்ட அந்த சுந்தரி, ஒடிந்து விழும் இடையுடன், அன்ன நடை பயின்று, அவன் வீட்டு வாயிற்படி ஏறி கடந்து வந்தாள்.

அவள் அவனை நாடி வரும் காரணத்தையறியும் ஆவல் துறுதுறுக்க, அவன் இடத்தை விட்டு எழுந்து, வெளியில் வந்தான்.

வீடு தேடி வருபவர்களை வரவேற்கும் சீரிய பண்பாட்டிலிருந்து அவன் பின் வாங்கி விடலாமா? "வணக்கம், வாருங்கள்" என்று முகமன் கூறி வரவேற்றான்.

"வணக்கம்! தாங்கள்தானே டாக்டர் பிரபாகரன்?" என்று கேட்டாள் அந்த மங்கை தேனினுமினிய குரலில்.

"ஆமாம், நானேதான்! தங்களுக்கு என்ன வேண்டும்?" என்றான் பிரபாகரன்.

"டாக்டர்! தங்கள் உதவியை நாடித்தான் அவசரத்துடன் வந்திருக்கிறேன். என் தந்தை கிணற்றடியில் விழுந்து விட்டார். காலில் கொஞ்சம் எலும்பு முறிந்துவிட்டது போல் தோன்றுகிறது. சாதாரண எலும்பு முறிவாக இருக்கும் என்றே எண்ணுகிறேன். இதோ வண்டியிலேயே அழைத்து வந்திருக்கிறேன். தயவு செய்து கொஞ்சம் வந்து பாருங்கள்!" என்றாள் அவள். இப்பொழுது அவள் வார்த்தைகளில் படபடப்பு மிகுந்து காணப்பட்டது. அவள் கொண்டிருந்த தீராத கவலையை, வனப்பு மிகுந்த அழகிய அவள் ரோஜா முகம் எடுத்துக் காட்டிற்று.

"என்ன அப்பா! மூன்று மணி நேரமாக ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறாயே?"

"என் மனைவிக்குக் கடிதாசி எழுதிக் கொண்டிருக்கிறேன்!"

"ஏன் இவ்வளவு மெதுவாக எழுதுகிறாய்?"

"என் மனைவிக்குக் கடிதாசி வேகமாக வாசிக்கத் தெரியாது!"

"கவலை வேண்டாம்! ஒன்றும் பயமில்லை நான் சிகிச்சை செய்து விடுகிறேன்" என்று அவளுக்கு இதமான வார்த்தைகள் கூறி ஆறுதல் அளித்தான் அவன்.

டாக்டர் பிரபாகரன் தெருவில் இறங்கி, வண்டியருகில் சென்றான். அந்தப் பெண்ணும் அவனைத் தொடர்ந்து போய், அவன் அருகில் நின்று கொண்டாள். வண்டியில் ஐம்பது வயது மதிக்கத் தகுந்த ஒரு மனிதர். வலி பொறுக்க முடியாது, முக்கி, முனகிக் கொண்டிருந்தார்.

வண்டிக்காரன், அந்தப் பெண் இவர்களின் உதவியைக் கொண்டு, பெரியவரை வண்டியினின்றும் கீழே இறக்கி, தன்னுடைய வைத்திய சாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தான் பிரபாகரன்.

பெரியவரை அவன் பரிசோதித்துப் பார்த்தான். "அதிகப்படியாகக் கவலைப்படும்படி எலும்பு முறிந்து போய் விடவில்லை. பத்தே நாளில் கால் சரியாகிவிடும்" என்றான் டாக்டர் பிரபாகரன் அவள் கரிய கூரிய கண்களை ஊடுருவிப் பார்த்த வண்ணம். அவளுக்கு இது ஆறுதலாக இருந்தது. அவள் முகத்தில் இலேசாக மலர்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் அவள் கவலை நீங்கவில்லை.

வைத்திய சிகிச்சை ஆரம்பமாயிற்று. முறிந்த எலும்பைப் பொருந்த வைத்து, தகுந்த கட்டுப் போட்டுக் கட்டினான் பிரபாகரன். பெரியவரும் கொஞ்சம் வலி நீங்கப் பெற்றவராய், நிம்மதியாய் மூச்சு விட்டார்.

"கால் சரியாகும் வரை பெரியவர் இங்கேயே தங்கித்தான் ஆகவேண்டும்" என்று கண்டிப்பாக உத்தரவு போட்டு விட்டான் அந்தப் புதிய டாக்டர். அந்தப் பெண்ணும் "சரி" என்று அவன் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து ஒதுங்கி நின்றாள். அந்த நிமிஷமே "மூர்த்தி சிறியதாயிருந்தாலும், கீர்த்தி பெரியது" என்று சிகிச்சை முறையில் அவன் காட்டிய பொறுமையையும், சாமர்த்தியத்தையும் அவளால் வியக்காமலிருக்க முடியவில்லை. அவளும் ஒருமுறை தலைமுதல் கால் வரை, அவனுடைய அழகிய கம்பீரம் நிறைந்த, கவர்ச்சி மிகுந்த தோற்றத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

இருவருடைய நோக்குகளும் கலந்து நின்ற சந்தர்ப்பங்கள் பலப் பல. அப்பொழுதெல்லாம் அவள் நாணித் தலை குனிந்தாள்.

"அடுத்து அவன் என்ன பேசுவான்? காது குளிரக் கேட்கலாம்" என்று அவள் முன்னே வந்து நின்று கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

"தங்கள் உதவிக்கு மிக்க நன்றி டாக்டர்! அப்பா இங்கேயே இருக்கட்டும். நான் ஊருக்குப் போய்விட்டு, சாயந்திரம் வருகிறேன். அங்கே போட்டது போட்டபடி போட்டு விட்டு வந்திருக்கிறேன். எல்லா



கால்கேட் பிரிக்லி ஹீட் பவுடரை உபயோகியுங்கள் அதில் சேர்ந்துள்ள அற்புதமான சக்தி வாய்ந்த ஒரு பொருள்

1. புண்படுத்தும் உஷ்ணத்தால் அரிச்சல் ஏற்படாமல் தடுக்கிறது ; ஏற்பட்டாலும் உடனே குணப் படுத்துகிறது
2. சருமத்திற்கு இதமும் குளிர்ச்சியும் அளிக்கிறது
3. குழந்தைகள், பேபிகளுக்குக்கூட பத்திரமானது. பயன் தருவது !

கால்கேட்

பிரிக்லி ஹீட் பவுடர்

இன்றே ஒரு டப்பா வாங்கி நாளையே இதம் பெறுக!

கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

கிளை ஆபீஸ் : ௯, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1

போன்: 85596 | தபால் பெட்டி நெ. 1395 | தந்தி: KALLIFUNDS

இதோ! நீங்கள் நீண்ட நாட்களாக கேட்டு வந்த நீண்ட காலத் திட்டம்!!

30 மாதங்கள் | 3வது ஞாயிறு ஏலங்கள் | 30 சந்தாதாரர்கள்

மாதச் சீட்டுகள்

ஜூலை மாத சீட்டு வரிசை

சந்தா செலுத்த கடைசி தேதி 15-7-53

முதல் ஏலத் தேதி ... 19-7-53

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
C	ரூ. *100/-*	ரூ. *3000/-*
D	ரூ. *50/-*	ரூ. *1500/-*
E	ரூ. *25/-*	ரூ. *750/-*
F	ரூ. *20/-*	ரூ. *600/-*
G	ரூ. *15/-*	ரூ. *450/-*
H	ரூ. *10/-*	ரூ. *300/-*

முக்கிய கவனிப்பு : *1. நீங்கள் எவ்வூரிலும், எந்நாட்டிலும், ஆங்காங்கே இருந்து கொண்டே சந்தாதாரர்களாக சேர்ந்து கொள்ளலாம்.*

2. ஆங்காங்கு இருந்து கொண்டே, தபால் மூலமோ அல்லது வேறு யார் மூலமாகவோ, ஏலத் தேதிகளில் ஏலம் கேட்கலாம்.

3. உங்களூரிலிருந்தபடியே எங்கள் பண்ட் ரூல்கள் 21, 34 படி உங்கள் ஏலத் தொகையை பெற்றுக் கொள்ளலாம்.

விலாசத்தைத் தெளிவாக எழுதி மனுச் செய்துகொள்பவர்களுக்கு விதிகளும், நிபந்தனைகளும் இலவசமாக அனுப்பப்படும். மற்ற விதிகள் வழக்கம்போல். சீட்டில் சேர்த்துக்கொள்ளும் உரிமை கம்பெனியைச் சேர்ந்தது.

(போர்ட்டர் உத்திரவுப்படி) *எம். வி. விஸ்வநாதன், மானேஜிங் டைரக்டர்*



"நான் கீல் வாயுவினால் மிகுந்த அவஸ்தைப் பட்டேன் — அநாவது, உடம்பு பூராவும் உள்ள வலியினால் சில சமயங்களில் வேலைக்கும் போக முடியாமலிருந்தது. நண்பன் ஒருவன் "க்ருஷன்" உப்புகளை உபயோகித்துப் பார்க்குமாறு சிபாரிசு செய்தான். நான் அவ்வாறே செய்ததில், உடம்பு வலிகள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து வந்தது. வேலைக்கும் யாதொரு தடங்கலின்றிப் போய் வருகிறேன். நான் முற்றிலும் புதிய மனிதனாய் விட்டதற்கு "க்ருஷ"னுக்கு வந்தனம்." —A. R.

விஷத்தன்மை கொண்ட கழிவு பதார்த்தங்கள் சரிவர வெளித்தள்ளப் படாமையால் குடல்களில் தேங்கி, கீல் வாயுவை உண்டாக்குகின்றன. "க்ருஷ"னிலுள்ள ஆறுவித முக்கிய உப்புகள் குடல்களையும் மூத்திரக் காய்களையும் சரிவர இயங்குமாறு தூண்டுவதால் இவ்விஷப் பொருள்களை சீக்கிரமாகவும் சுலபமாகவும் வெளியே தள்ளுகிறது. தினந்தோறும் ஒரு சிறு அளவு "க்ருஷன்" டீயிலோ, தண்ணீருடனோ உட்கொள்ளுவது உங்களைக் கீல் வாயுவினின்றும் விடுவிக்கும்.

"க்ருஷன்" உங்களை ஆரோக்யத்துடனும் சந்தோஷத்துடனும் இருக்க உதவுகிறது

KSM—1

வற்றையும் போய்க் கவனித்துவிட்டு வரு கிறேன்" என்றான். இப்பொழுது அவன் பேச்சு கவலையின்றித் தெளிவுடனிருந்தது.

"சரி, செய்யுங்கள்! தங்கள் பெயர் என்ன வென்று சொல்ல வில்லையே! இந்தப் புதிய டாக்டரிடத்தில் நம்பிக்கை எப்படி ஏற்பட்டது? நான் இங்கிருக்கிறேன் என்பதை எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்று பிரபாகரன் தன்னுள்ளே அடக்கி வைத்திருந்த ஆச்சரியத்தை யெல்லாம் வெளியில் அவிழ்த்து விட்டான்.

"டாக்டர்! என் பெயரை அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா? என் பெயர் வசந்தா. மூன்று மைல் தூரத்தில் இருக்கும் கிராமம் தான் எங்கள் ஊர். நான் இந்த நகரத்துப் பள்ளிக்கூடத்தில் படித்து இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். தினமும் கிராமத்திலிருந்து வண்டியில் வந்து, மாலையில் திரும்பி விடுவேன். இந்தத் தெரு வழியாகத் தான் தினமும் வண்டி போகும்; வரும். ஒரு வாரத்துக்கு முன் இவ்வழியே போகும்போது, உங்கள் வீட்டுப் பெயர்ப் பலகையைக் கவனித்தேன். யாரோ புது ஆசாமி டாக்டராக வந்திருக்கிறார் என்று நினைத்தேன். அடுத்தாற்போல் இங்கேயே வரும்படியாகி விட்டது, பார்த்தீர்களா?" என்று கூறித் தன் மோகனப் பல் வரிசை தோன்ற வசந்தா 'களுக்'கென்று சிரித்தாள்.

"அப்படியா! ஏன் உங்கள் வீட்டில் வேறு யாருமே பெரியவர்கள் இல்லையா?" என்று கேட்டான் டாக்டர் பிரபாகரன்.

"சின்னஞ்சிறு வயதிலேயே பெற்ற தாயை இழந்து விட்டேன், டாக்டர். அப்பாவுக்கு நான் ஒரே பெண். நிறைய சொத்து இருந்து என்ன பயன்? நானும் அப்பாவும்தான் இருக்கிறோம்" என்றாள். அவள் அழகிய முகத்தில் கவலை படர்ந்திருந்தது.

வசந்தா சிறிது நேரம் ஆழ்ந்த மௌனத்துடன் நின்று கொண்டிருந்தாள். அந்தக் கவலை நிறைந்த மௌனத்தை டாக்டர் பிரபாகரனே கலைத்து வைத்தான்.

"சரி வசந்தா! நீங்கள் அப்பாவுடன் கூட இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நான் அவரைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் சௌகரியப்படி ஊருக்குப் போய் விட்டு வாருங்கள். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் இங்கு வரலாம்; போகலாம்" என்றான் பிரபாகரன்.

"உங்கள் மனசு எனக்குத் தெரிந்து விட்டது. இருந்தாலும் என் மனசு கேட்கவில்லை. நான் திரும்பி வரத்தான் வருவேன்" என்று கூறி வசந்தா அவனிடம் விடை பெற்றுக் கொண்டாள்.

அவள் வண்டியில் ஏறிக் கிராமத்துக்குப் போவதை, பார்த்துக் கொண்டே அங்கேயே சிறிது நேரம் நின்றான் பிரபாகரன்.

> வீட்டு அம்மாள்:— என்ன அப்பா! நீ என் வீட்டிலேயே வந்து சோறு போடு. சோறு போடு என்று தினம் தொந்தரவு செய்கிறாயே!
>
> பிச்சைக்காரன்:— 'உன் வியாதி உடம்புக்குக் கஞ்சிதான் நல்லது' என்று டாக்டர் சொன்னார். அது தங்களிடம் கிடைக்கிறது. அதனால்...

"என்ன இருந்தாலும், வசந்தா கெட்டிக்காரிதான். யாராலும் ஆகாத ஒரு காரியத்தைச் சாதித்துக் கொண்டல்லவா போகிறாள். என் உள்ளமும் அவளோடு கொள்ளை போய் விட்டதே" என்று அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

* * *

அன்று மாலை சொல்லிப் போனபடியே வசந்தா திரும்பி வந்தாள். தந்தைக்கு உடம்பு குணமாகும் வரைக்கும், பத்து நாட்களுக்கு மேல், பிரபாகரனின் வைத்திய சாலையில் தங்கினாள். டாக்டர் பிரபாகரனிடம் நெருங்கிப் பழகும்படியான வாய்ப்புகள் பல அவளுக்கு அப்பொழுது வாய்த்தன. அவனுக்கும் அப்படித்தான்.

பெரியவர் பொன்னுசாமி கால் தேறி ஊருக்குப் போகக் கிளம்பினார். டாக்டர் பிரபாகரனும் "நீங்கள் ஊருக்குத் திரும்பிப் போகலாம். வீட்டில் கொஞ்ச நாட்கள் வரை ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். அதிகமாக நடமாடுவதைச் சிறிது காலம் தவிர்த்து வைக்க வேண்டும்" என்று சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தான்.

வண்டியில் போய் ஏறிக் கொள்வதற்குள் வசந்தா சற்று தயங்கி நின்றாள். எதையோ சொல்ல வேண்டுமென்று அவள் வாய் துடியாய்த் துடித்தது. பிரபாகரன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"டாக்டர்! அப்பாவுக்கு உடம்பு பூரண குணமடையும் வரையில் நீங்கள் எங்கள் வீட்டுக்கு இரண்டிலே மூன்றிலே வந்து, அப்பாவைப் பார்த்து விட்டுப் போக வேண்டும்" என்றாள் வசந்தா.

"ஆகட்டும் வசந்தா!" என்றான் பிரபாகரன். வண்டி அங்கிருந்து நகர்ந்தது.

* * *

டாக்டர் பிரபாகரன் பொன்னுசாமியின் உடல் நிலை சரியாகக் குணமடையும் வரையில் கிராமத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தான். அப்படிப் போய் வருவதே அவனுக்குப் பேரின்பமாக யிருந்தது. வசந்தாவுடனும் அவள் தந்தை பொன்னுசாமியிடமும், கள்ளங் கபடமின்றி, மனம் விட்டு நெருங்கிப் பழகினான்.

கல்கி

(வாரப் பதிப்பு)

சந்தா விவரம்

		ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா சிலோன்	ரூ.	13-0-0	6-8-0
பர்மா மலேயா வெளிநாடு	ரூ.	14-10-0	7-5-0

குறிப்பு :—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். சிலோன் நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை

பொன்னுசாமிக்குப் பிரபாகரனின் அன்பு நிறைந்த வார்த்தைகளும், சரளமான மனசும், பிறருக்கு உதவும் பெருந் தன்மையும் நன்கு பிடித்துப் போயிருந்தன. அவனை அவர் வேற்று மனிதனாகவே கருதவில்லை. தம் குடும்பத்தில் சம்பந்தப்பட்ட ஒருவனைப் போலவே அவனை அவர் பாவித்தார்.

ஒருநாள் பிரபாகரன் அங்கு போயிருந்த போது, பொன்னுசாமி "டாக்டர் நாளை நானும், வசந்தாவும் உங்கள் வீட்டுக்கு வர இருக்கிறோம். எங்கள் கடமை ஒன்று பாக்கியிருக்கிறது. அதற்குரிய இடம் உங்கள் வீடுதான்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார். நன்றி நிறைந்த உணர்ச்சி அவர் பேச்சில் கலந்திருந்தது.

"அதற்கென்ன அவசியம் வாருங்கள். உங்களை வரவேற்க நான் எப்பொழுதும் காத்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு டாக்டர் பிரபாகரனும் அங்கிருந்து கிளம்பினான்.

* * *

மறுநாளும் வந்தது.

பொன்னுசாமியும் தம் மகளுடன் வந்தார்.

மூவரும் எதை எதையோ பற்றி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

சமயம் பார்த்துப் பொன்னுசாமி தம் கடமையை நிறைவேற்றிக் கொள்ள முனைந்தார்.

"டாக்டர்! நீங்கள் செய்த உதவிக்கு எங்களுடைய சிறிய கைம்மாறு இதுதான்" என்று பொன்னுசாமி கனத்த உறையொன்றைப் பிரபாகரனிடம் நீட்டினார்.

அதில் என்ன இருக்கும் என்பது பிரபாகரனுக்குத் தெரியாதா என்ன?

அவன் அதைப் பிரித்துப் பார்த்தான். பத்து நூறு ரூபாய் நோட்டுகள் தலையை வெளியே நீட்டிக் கொண்டு காட்சியளித்தன.

"ஆயிரம் ரூபாய்! என்னுடைய முதல் கேசுக்கா? டாக்டருக்கா சன்மானம் இது? இல்லை, வேறு ஒரு வகைக்கென்று நான் வைத்துக் கொள்ளலாமா? அங்கங்கே திருமணத்துக்கு முன் வரதட்சணைப் பணம் தருவார்கள், 'அதில் ஒரு பகுதியாக' இதைக் கொண்டு விட்டால் என்ன?" என்றான் பிரபாகரன். அவனால் அப்பொழுது பொங்கி எழும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"டாக்டர்! இதை எங்கள் வைத்திய உதவிக்குச் சன்மானமாக ஏற்றுக் கொண்டாலும் சரி, அல்லது திருமணத்துக்கு வரதட்சணையாக வைத்துக் கொண்டாலும் சரி, எங்களுக்கு எல்லாம் ஒன்றுதான். வசந்தா! நீ என்னம்மா சொல்கிறாய்?" என்றார் பொன்னுசாமி சிரித்துக் கொண்டே.

"இதில் நான் என்ன சொல்ல இருக்கிறது. அப்பா! உங்கள் இஷ்டம், டாக்டர் இஷ்டம், இவைகளைப் பொறுத்து நடக்க வேண்டியவள் தானே நான்" என்றாள் வசந்தா மிகுந்த அடக்க ஒடுக்கமாய்.

"ஆமாம்! கைக்கு வந்த பணத்தை நான் திருப்பித் தரப் போவதில்லை. இது என்னுடைய முதல் கேசுக்குக் கிடைத்த வருமானம். டாக்டர் வாழ்க்கைக்கு அஸ்திவாரமே இதுதான். குடும்ப வாழ்க்கைக்கு இதுவே அஸ்திவாரமானாலும் சரிதான்" என்று சொல்லிவிட்டு வசந்தாவைப் பார்த்துப் பிரபாகரன் குறும்போடு சிரித்தான்.

"உடல் பிணிக்கும், உள்ளப் பிணிக்கும் மருந்தளிக்கும் நீங்கள் சாமர்த்தியசாலிதான் சந்தேகமில்லை. பண உருவில் கொடுக்கும் இந்தச் சன்மானம் உங்களுக்குப் போதவே போதாது" என்று கூறிய வசந்தா தன்னையும் மீறி வாய்விட்டுச் சிரித்தாள்.

"இப்பொழுதுதான் புரிகிறது. எங்கோ கிடந்த இரு ஆண் பெண் உள்ளங்களை ஒன்று சேர்க்க, கடவுள் செய்த சதிதான் இது. இல்லாவிட்டால் நான் ஏன் கிணற்றடியில் வழுக்கி விழுந்து காலை முறித்துக் கொள்ளப் போகிறேன்?" என்று திருப்தியோடு கூறிப் புன்முறுவல் பூத்தார் பொன்னுசாமி.

* * *

பிரபாகரன், வசந்தா திருமணத்துக்குப் பின்தான், டாக்டர் பிரபாகரனின் வைத்தியசாலை, பல நல்ல நூதன வைத்திய சாதனங்களுடன், மக்களின் நோய்களை நீக்கும் சமய சஞ்சீவியாகப் பயன்பட்டது. இதற்கெல்லாம், வசந்தா வைத்தியத் தொழிலில் கணவனுடன் ஒத்துழைத்து மிக்க அக்கறை காட்டியதுதான் காரணம்.

எல்லாமே நன்றாக ஒன்றுகூடி வரும்போது, டாக்டர் பிரபாகரன் பெயரும், புகழும் அடைவதற்குக் கேட்கவும் வேண்டுமோ?

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras

"இது மெய்...

...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகைப்பெறலாம்"

என்று கூறுகிறார்

சாவித்திரி



நிச்சய பலனைத்தரும் ஒரு ஒழுங்கான அழகு பராமரிப்பு இதோ! சாவித்திரி கூறுவதாவது: "நான லக்ஸ் டாய்லட் சோப்பின் நறுமணம் கொண்ட வெண்மையான நுரையை சருமத்தின் மேல் நன்றாகத் தேய்க்கிறேன் பிறகு கழுவி, மிருதுவான துண்டினால் துடைக்கிறேன். சருமம் புது அழகைப் பெறுகிறது.'



LTS. 377-X50 TM

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

REGD. NO. M. 4392

Registered as a newspaper in Ceylon

